

கல்கி
KALKI 19.7.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு
"காதல் காட்சிகளில் நடிக்கக்
கூச்சமாக இருக்கிறது!"
— மம்முட்டி
சிறப்புப்
பேட்டி

Glacto®

இப்போது இரண்டு ஃபார்முலாக்களில்!



க்ளாக்டோ 1 - பிறந்த குழந்தைக்கான ஃபார்முலா, பிறந்ததிலிருந்து 6-மாதம் வரை

க்ளாக்டோ 2- தொடர் ஃபார்முலா, 6-ம் மாதம் முதல்

முக்கிய அறிவிப்பு

தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது.

நுகர்வோர் நலனைக் கருதி வெளியிடப்பட்டது.

Gx.652.92.Tm



விம்பிள்டனில் ஒரு கொலைவெறி!

நேற்று வரை டென்னிஸ் வீரர்.

இன்று விம்பிள்டன் சாம்ப்!

ஒரே மாலையில் உலகளாவிய பெரும் புகழும் பல லட்சக்கணக்கில் பணமும் குவித்துக் கொண்டார் -

ஆன்ட்ரி அகாஸி.

ஆனால் இதற்குப் பின் எத்தனை பயிற்சி, எத்தனை உழைப்பு, எவ்வளவு எதிர்பார்ப்பு!

அகாஸ்ஸி பயங்கர 'ஷோ'. கலர் கலர் உடைகள் அணிந்துதான் டென்னிஸ் ஆடுவார். (விம்பிள்டன் மட்டும் விதிவிலக்கு - கட்டுப்பாடு மிகுதி) ஒரு காதில் மட்டும் லோலக்கு தொங்கும். முகத்தில் மூன்று நாள் தாடி. தலைமுடியோ ஆதிவாசிகளுடையது போல் நீண்டு, ஆடும் போது பறக்கும்.

அதே போல்தான் தூரலாக மேல் சட்டையும். 'டக்-இன்' செய்வது கிடையாது. அதைத் தூக்கி, முதுகில் வியர்வையை ஒற்ற, பந்தெடுத்துப் போடும் பெண்ணிடம் டவலை இவர் தர, அவள் வெட்கப்பட்டது விம்பிள்டன் ஆட்டத்தின் இடையே வித்தியாச காட்சி. 'ப' வரிசை டைரக்டர் எவருமே அத்தனை இயல்பாக அழகாக டைரக்ட் செய்திருக்க முடியாது!

அகாஸ்ஸி அமெரிக்கர். இவர் அப்பா இரானியர். ஒலிம்பிக் குத்துச் சண்டை வீரர். வெற்றி பெற்றதும் அந்தப் பூமியைத் தழுவிக் கொள்ள நினைத்தாரோ என்னவோ, அகாஸ்ஸி முதல் காரியமாகத் தரையில் விழுந்தார். பிறகு காத்து நின்ற எதிராளி இவானிஸெவிக்கை நெருங்கி அவரை அணைத்தார். எப்பேர்ப்பட்ட போராட்டம்! சுலப வெற்றியிலே பெருமை என்ன இருக்கிறது! அகாஸ்ஸியின் ஆனந்தக் கண்ணீருக்கு அர்த்தமிருந்தது.

அகாஸ்ஸிக்கு வயது 22. ''நாளைக்கே என் டென்னிஸ் வாழ்க்கை முற்றுப் பெறுவதானாலும் சரி. இதற்கு மேல் என்ன வேண்டும்'' என்றார் அகாஸ்ஸி.

''நாங்கள் இறுதி ஆட்டம் வரை முன்னேறுவோம் என்றோ, அகாஸ்ஸி ஜெயிக்கப் போகிறார் என்றோ யார் எதிர் பார்த்தார்கள்? ஆனால் வெற்றி பெற முழுத் தகுதியும் அவருக்கு இருந்தது'' என்றார் அவரை இறுதி ஆட்டத்தில் எதிர்த்துத் தோற்றுப் போன இவானிஸெவிக்.

''ஐந்தாவது செட் ஆடும்படியான நிலைக்கு என்னைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டார் இவானிஸெவிக். அது அவருடைய மகத்தான போராட்ட உள்ளத்தை நிரூபித்தது. அவரை அல்ல, அவர் ஆட்டத்தைக் கொன்று விட வேண்டும் என்ற வெறி ஏற்படுகிறது; அதே சமயம் அவரிடம் பெருமதிப்பும் உண்டாகிறது'' என்றார் அகாஸ்ஸி..

இந்த மனப்பான்மை மட்டும் நமது அரசியல்வாதிகளிடம் வளருமானால்...? உம்... எதற்குப் பகல் கனவு!

- சித்தார்த்



குவைத் துறைமுகம்

பாலைவன ஆசைகள்!

அரேபியா!
வேலை வாய்ப்பற்ற இந்திய இளைஞர்களைக் கவர்ந்திழுக்கும் காந்த வார்த்தை!

'அரபு நாடுகளில் வேலை வேண்டுமா? பம்பாய் செல்' என்பதே இன்று தமிழக மற்றும் கேரள வாலிபர்களுக்குத் தாரக மந்திரம்!

இருக்கும் ஒருசில உடைமைகளை விற்றும் கடன் வாங்கியும் பம்பாய்க்கு வந்து, ஏதாவது ஏஜென்ஸியில் சிக்கிக் கொண்டுள்ள எண்ணற்ற இளைஞர்களைப் பம்பாயில் காணலாம்.

இன்று பம்பாயின் தாராவி, செம்பூர், பாண்டுப், சயான், மாதுங்கா பகுதிகளில் உள்ள பெரும்பான்மை லாட்ஜ்களை ஆக்கிரமித்துள்ளவர்கள் அரபு நாடுகளுக்குச் செல்ல வந்துள்ள தமிழர்களும் மலையாளிகளுமே! இவர்களை நம்பியே சில தமிழர்கள் நடைபாதைகளில் தோசை, இட்லிக் கடைகளை நடத்துகிறார்கள். இவர்களில் பலர் வெளிநாடு செல்லும் ஆவலில் இங்கு வந்து ஏமாந்தவர்கள்தான்!

சதாம் உசேன் :

பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பே அரபு நாடுகளுக்கு மக்கள் வேலை தேடிச் சென்றிருந்தாலும் 1980 தொடங்கி ஐந்து ஆறு ஆண்டுகள் வரை, அரபு மோகம் மக்களை ஆட்டிப் படைத்தது. பிறகு அது மிதமான நிலையை அடைந்திருந்தது.

சதாம் உசேன் குவைத்தை ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட போரினால் அரபு மோகம் குறைந்து, இன்று மீண்டும் பழைய நிலைமை தோன்றியுள்ளது.

சவுதி அரேபியாவில் சாதாரண ஹெல்ப்பர் விசாவில் செல்ல ரூ 25,000 முதல் 35,000 வரை ஏஜெண்டுகள் கேட்கிறார்கள்.

ஏஜெண்டுகள் பலவிதம்!

ஏஜெண்டுகளில் மெயின் ஏஜெண்ட், சப்-ஏஜெண்ட், சப்-ஏஜெண்டின் சப்-ஏஜெண்ட் என பல ரகங்கள். இதில் சப்-ஏஜெண்டுகளாக அலையும் பலர் முன் ஒரு காலத்தில் வெளிநாடு செல்ல பம்பாய் வந்து, மெயின் ஏஜெண்டிடம் ஏமாந்தவர்கள்! மெயின் ஏஜெண்டின் தில்லுமுல்லுகளை முற்ற முழுக்கப் புரிந்து கொள்பவர் துணிச்சலாக சப்-ஏஜெண்ட் தொழில் தொடங்கி விடலாம்! பம்பாயில் இன்று இத்

தொழில் செய்பவர் விரைவில் பல லட்சங்கள் சம்பாதித்து விடலாம்!

மினி தமிழ்நாடு!

தமிழர்கள் தங்கியிருக்கும் பம்பாய் லாட்ஜ்களில் எந்த ரூமில் நுழைந்தாலும் - பத்து இருபது இளைஞர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாவட்டம். ஆக, ஒவ்வொரு லாட்ஜூம் ஒரு மினி தமிழ்நாடுதான்.

இந்த லாட்ஜ்களின் முன் அடிக்கடி தகராறுகள் நடக்கின்றன. ஏமாற்றும் ஏஜெண்டுகள் சிலர் இளைஞர்களிடம் வசமாக மாட்டிக் கொள்வதுதான் தகராறுக்குக் காரணம். இந்த விஷயத்தில் அனைத்து இளைஞர்களிடமும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. ஏமாற்றிய ஏஜெண்ட் யாராக இருந்தாலும் அந்த ஏஜெண்டிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர் மட்டுமின்றி லாட்ஜில் தங்கியிருக்கும் ஏனைய இளைஞர்களும் சேர்ந்து அவரை அடித்து நொறுக்கி விடுகிறார்கள்!


பெரும்பான்மை இளைஞர்களை இங்கு கூட்டி வந்தது அவர்களுக்கு நன்கு அறிமுகமான சப்-ஏஜெண்டுகள்தான். ஆனால் மெயின் ஏஜெண்ட் தங்களை ஏமாற்றி விட்டதாகக் கூறி அவர்கள் இலகுவில் தப்பித்து விடுகிறார்கள். இறுதியில், வெளிநாடு செல்ல வேண்டி வந்த இளைஞர்கள் பணத்தையும் பாஸ்போர்ட்டையும் இழந்து, ஊருக்குத் திரும்பிச் செல்லவும் வகையற்று அலைகிறார்கள். பணத்தைப் பறிகொடுத்த இளைஞர்களது தற்கொலை முயற்சிகளும் அடிக்கடி நடப்பதுண்டு.

பம்பாயில் இப்படி வாழ்வைத் தொலைத்து விட்டு அலையும் ஒவ்வொரு இளைஞனிடமும் பேசிப் பார்த்தால் ஒரு தனிக் கதை கிடைக்கும்.


பேட்டிக்காகச் சந்தித்த எல்லா இளைஞர்களும் புகைப்படத்துக்கு மறுத்து விட்டனர். ''ஏமாந்தது ஏமாந்தோம்... அதுக்காக நான் ஏமாந்துட்டேன்னு என் போட்டோவைப் போடுறது கேவலமில்லையா?'' என்றனர் அவர்கள்.

'டுப்ளிகேட் விசா'

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த கதிர்வேல் முருகேசன் என்னும் இளைஞர் கூறுகிறார் : ''ஏற்கெனவே எங்க குடும்பத் துக்குக் கொஞ்சம் கடன் இருந்துங்க... வெளிநாடு போயிட்டா எப்படியாவது கடனைத் தீர்த்துடலாம்கிற நம்பிக்கையில மனைவியோட நகையை வித்து, பாக்கிக்கு மூணு வட்டிக்குக் கடன் எடுத்து வந்தேங்க... முதல்ல 5,000 ரூபாயும் பாஸ்போர்ட்டையும் ஏஜெண்டிடம் கொடுத்தேன். ஏஜெண்ட் எங்க ஊர்க்காரர்தான். ரெண்டு மூணு மாசம் அலைய வைத்தார். அதுலேயே கொஞ்சம் பணம் செலவாச்சது. கழிஞ்ச மாசம் 'விசா காப்பி' தந்தார். ஒரு வாரத்தில் 'பிளைட்'



☛ போலி விசா



☛ ஒரிஜினல் விசா

போலி விசா

போலி விசாக்கள் தயாரிப்பதற்கென்றே பம்பாயில் பல நிறுவனங்கள், நபர்கள் உள்ளனர். ஒரிஜினல் விசா போலவே போலி விசாக்கள் தயாரிக்கப்பட்டு, பணம் கட்டிய இளைஞர்களுக்கு அதன் ஜெராக்ஸ் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. அரபி மொழி எழுதத் தெரிந்தவர்களைக் கொண்டு சம்பந்தப்பட்ட இளைஞரது பெயரை அரபி மொழியிலேயே எழுதி விடுகின்றனர். ஒவ்வொரு போலி விசாவுக்கும் அதன் தயாரிப்பாளருக்கு ஏஜெண்டுகள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து விடுகின்றனர்!

அரபுச் சம்பளத்தின் உண்மை நிலை!

அரபு மோகம் மக்களிடையே அதிகரிக்க இந்திய ரூபாய் மாற்று மதிப்புக் குறைந்திருப்பதும் ஒரு காரணம். சவுதி ரியாலுக்கு இன்று இந்தியாவில் ஒன்பது ரூபாய் கிடைக்கிறது. இதை நம்பி சவுதியில் நுழைந்து சம்பாதித்து விடலாம் என்றால் அது சிரமமான காரியம். சாதாரண பி.ஏ., எம்.ஏ., டிகிரியை வைத்துக் கொண்டு சென்றால் 400 ரியால் முதல் 600 ரியால் வரைதான் கிடைக்கும். சாப்பாடு, இதர செலவுகள் போக மாதம் ரூ 3000 அல்லது 3500 வீட்டிற்கு அனுப்பலாம். (ஏஜெண்டுகள் மாதம் 10,000 வரை அனுப்பலாம் என்று கதை விடுவார்கள்!) சவுதி செல்பவர், தான் செலவழித்த பணத்தைத் திருப்பி எடுக்கவே ஓராண்டு உழைக்க வேண்டியிருக்கும்! வெல்டர்கள், பிட்டர்கள், மற்றும் தொழில் கல்வி கற்றவர்கள் ஓரளவு சம்பாதிக்கலாம். (ஏஜெண்டுகள் ஏமாற்றாமல் அனுப்பி வைத்தால்!)

இருக்கும் என்றார். விசா காப்பி கிடைத்ததும் ரூ 20,000/- கொடுத்துட்டேன். ஆனால் ரெண்டு மாசம் கழிஞ்சாச்சு. இப்பத்தான் என் விசா டூப்ளிகேட் விசா என்பது தெரிந்தது.

''எங்க ஏஜெண்டிடம் கேட்டால், மெயின் ஏஜெண்டிடம் அவர் ஏமாந்து விட்டதாகச் சொல்கிறார். மெயின் ஏஜெண்ட் யார் என்பது எனது ஏஜெண்டுக்கே தெரியாதாம்! என்ன செய்வது என்று புரியவில்லை!''

ஒரே விசா பத்துப் பேருக்கு!

மாயவரத்தைச் சார்ந்த முத்துக்குமார் என்கிற இளைஞரைச் சந்தித்தோம். ''இது எனக்கு ரெண்டாவது முறைங்க. முன்னே ஒரு தடவை இப்படி ஏமாந்துட்டேன். எனவே இந்தத் தடவை ஏஜெண்ட் யாரையும் நம்பக் கூடாதுன்னு நினைக்க வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்கு வரும் யாராவது 'விசா' கொண்டு வந்தால் அதை விலைக்கு வாங்கிச் செல்லலாம் என நினைச்சேன். சவுதியில் ஒரு பெட்ரோல் பங்கில் வேலைன்னு ஒரு விசா கிடைச்சது. ரூ 30,000க்கு வாங்கிட்டேன். ஆனா இங்க வந்த பிறகுதான் ஒரே விசாவை அந்த ஆள் பத்துப் பேரிடம் விலை பேசிப் பத்து பேரிடமும் ரூ 30,000 வீதம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்ட விஷயம் தெரியவந்தது!'' என்றார் அவர்.

''என் பாஸ்போர்ட் சவுதி போயிட்டுதுங்க!''

நெல்லை மாவட்டம் கூட்டப்புளியைச் சார்ந்த இளைஞர் சுப்பிரமணியன் சொன்ன செய்திகள் மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்கின்றன.

''வெளிநாடு போக ஆசைப்பட்டு பம்பாய் வந்தேனுங்க... இப்ப நான் பம்பாயில் இருக்கிறேன். என் பாஸ்போர்ட் சவுதிக்குப் போயிட்டுதுங்க...''

இது பற்றிய விளக்கம் கேட்ட போது அவரிடமிருந்து பல தகவல்களைப் பெற முடிந்தது. ஏஜெண்டுகள் பாஸ்போர்ட்டில் செய்யுகிற தில்லுமுல்லுகளுக்கு இங்கு அடையாள வார்த்தைகள் பல உண்டு என்ற இளைஞர் அவற்றை விளக்கினார்.

ஆபரேஷன் : பாஸ்போர்ட் ஃபோட்டோவில் ஒருவரது தலையை வெட்டி விட்டு வேறொருவர் தலையை ஒட்டுவது. (இப்படித்தான் இளைஞர் சுப்பிரமணியத்தின் பாஸ்போர்ட் சவுதி போனது!)

குளுக்கோஸ் அடைத்தல் : நாள் முடிந்து போன விசாவை அதிக நாள் வைத்துத் திருத்துவது.

போஸ்ட்மார்ட்டம் : ஒரிஜினல் பாஸ்போர்ட்டில் சில பக்கங்களைக் கிழித்து விட்டுப் புதிய பக்கங்களை ஒட்டுவது.

சவுட்டு (ஆங்கிலத்தில் Pushing என்கிறார்கள்) : எமிகிரேஷன் பணம் கட்டாமல் திருட்டுத்தனமாக அனுப்புவது. (இதில் பிடிபடும் நபரை ஏர்போர்ட்டிலேயே திருப்பி அனுப்பி விடுவர்.)

இப்படி ஆபரேஷன் செய்யப்பட்டு, குளுக்கோஸ் அடைக்கப்பட்டு, போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு, 'சவுட்டு'ப்பட்டு, வாழ்வை இழந்து நிற்கும் ஆயிரம் ஆயிரம் தமிழ், மலையாள இளைஞர்கள் இன்று நடைப்பிணங்களாகப் பம்பாய் வீதிகளில்!

ஆனாலும் தினசரி பம்பாய் ரயில் நிலையத்தில் சூட்கேஸ், ஏர்பேக் சகிதம் ஃபாரின் கனவுகள் கண்களில் மின்ன நூற்றுக் கணக்கான இளைஞர்கள் வந்து இறங்குகின்றனர்.

அந்த இளைஞர்கள் சந்தோஷமாகச் செல்கின்றனர். ஆனால் அவர்களைப் பார்க்கையில் நமது மனது ஏனோ கனத்துப் போகிறது!

– எம். ஜியோ பிரகாஷ்

கோமல் வழங்கும் நாடக விழா



துவக்க விழா...

கோமல் சுவாமிநாதனுக்கு எதற்குப் பாராட்டுச் சொல்லுகிறோமோ இல்லையோ, வட துருவம் - தென் துருவம் மாதிரி இருந்து வரும் சபா நாடகங்களையும், நவீன நாடகங்களையும் ஒரே (கிருஷ்ணகான சபா) மேடையில் வழங்க, விழா ஒன்று எடுத்திருக்கிறாரே. அதற்காகவாவது ஒரு மாலை போட வேண்டும்!

இங்கே சுஜாதாவின் 'சிங்கமய்யங்கார் பேரனை'யும் பார்க்கலாம். டாக்டர் ருத்ரனின் 'விசாரணை'யையும் காணலாம். முன்னதில் சரளமும், சபா-நாடகத்தனமும் தூக்கலாக இருக்கும்; யோசிக்காமல் சிரித்து வைக்கலாம். பின்னதில், காஃப்காவின் கதையைத் தமிழ் மொழி பெயர்ப்பில் கொஞ்சம் யோசித்துப் புரிந்து கொள்ளலாம். அல்லது புரிந்து கொள்ள முயலலாம்.

கோமலின் 'அன்புக்குப் பஞ்சமில்லை' ஒரு நாள். இன்னொரு நாள், மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவைச் சித்திரிக்கும் 'மிருகம்.'

'கார்த்திக்' ராஜகோபாலின் 'சபாக்களின் பிரச்னைகள்' நிச்சயம் சிரிப்பைத் தூண்டாது. அந்தச் சோகத்தை மறக்கடிக்க, கோமலின் 'குடும்ப நகைச்சுவை' பேச்சு இருக்கவே இருக்கிறது.

நம்மூர் ஞாநியின் பரீக்ஷா, மதுரை நிஜ நாடக இயக்கம், பிரளயனின் வீதி நாடகங்கள் என்று நிறையவே மூளைக்கு வேலை கொடுக்கும் அம்சங்கள் நாடக விழாவில் இருக்கின்றன.



''தப்பாட்டம்''

நாடகங்கள் வெறுமனே பார்த்துச் சிரித்துவிட்டுப் போக மட்டும் அல்ல என்ற நம்பிக்கை உள்ளவர் கோமல். ''தினசரி காலையில் அந்தந்த நாடகங்களை வழங்கும் இயக்குநர்களுடன் ஒரு கலந்துரையாடல் நடைபெறுகிறது'' என்றார்.

''ரசிகர்கள் வருகிறார்களா இவற்றுக்கு?''

''காலை, மாலை இரண்டு வேளை விலுமே ஆர்வமுள்ளவர்கள் நிறையப் பேர் வருகிறார்கள்.''



''அன்புக்குப் பஞ்சமில்லை''

''கேள்வி கேட்பவருக்குத் திருப்திப்படுத்தும் விதத்தில் பதில் கிடைக்கிறதா?''

''நிச்சயம்!''

தஞ்சை நார்த்தேவன் குடிகாட்டுக்கு வெளியே, முதன் முதலாக, சென்னைக்கு வந்து, 'பக்த பிரகலாதன்' தெருக்கூத்தை வழங்கப் போகிறது, 'பக்த பிரகலாதா மன்றம்.'

பேராசிரியர் ராமானுஜம் நாடக விழாவைத் தொடக்கி வைத்ததே ஒரு புதுமை.

முரசு அடித்து, பறை அடித்து அறிவித்துத் துவக்க விழா செய்தார்!

- எஸ்.வி.என்.

தேவிகாராணியின் போராட்டம்!

ரோரிச்-தேவிகாராணி தம்பதியின் எஸ்டேட்டுகளைக் கர்நாடக அரசு எடுத்துக் கொள்ள முடிவு செய்ததைத் தொடர்ந்து, தேவிகாராணி தமது போராட்டத்தைத் துவக்கியிருக்கிறார்.....

பெங்களூரின் ஐந்து நட்சத்திர ஓட்டலான அசோக்கில் நான்காவது தளத்தில் கடந்த மூன்றரை வருடங்களாகச் சகலவசதிகளுடன் ஒன்றாக இணைக்கப்பட்ட இரு அறைகளில் தங்கியிருக்கின்றனர் அந்த வயதான தம்பதி. கணவர் டாக்டர் ஸ்வெட்ஸ்லவ் ரோரிச். வயது எண்பத்தொன்பது. மனைவி திருமதி தேவிகா ராணி. வயது எண்பத்து மூன்று. ரோரிச் கிட்டத்தட்ட படுத்த படுக்கையில்தான் இருக்கிறார். தேவிகா ராணியால் ஓரளவு



☛ ரோரிச்





☛ தேவிகாராணி : அன்றும்.... இன்றும்

நடமாட முடிகிறது. ஆனாலும் இருவருக்குமே இருபத்துநான்கு மணிநேர மருத்துவக் கண்காணிப்பு, எந்த நேரமும் ஒரு டாக்டர், நான்கு நர்சுகள், வேலைக்காரர்கள், பாதுகாப்பாளர்கள் என்று ஒரு பட்டாளமே இருக்கிறது.

இருவரும் சாதாரணமானவர்கள் அல்ல. பெரிய கோடீஸ்வரர்கள் மட்டுமல்லாது, ரஷ்யாவைச் சேர்ந்த டாக்டர் ஸ்வெட்ஸ்லவ் ரோரிச் உலகப் புகழ் பெற்ற ஓவியர். அசப்பில் பெர்னார்ட்ஷாவைப் போன்ற தோற்றம். இவரது தந்தை நிக்கோலஸ் ரோரிச்சும் ரஷ்யாவின் புகழ் பெற்ற ஓவியர்களில் ஒருவர்.

தேவிகா ராணி அந்தக்காலத்து சினிமா ரசிகர்களின் கனவுக் கன்னி. இந்தியாவின் முதல் பேசும் படத்தில் கதாநாயகியாக நடித்த பெருமை இவருக்குத்தான். இருவரும் காதலித்து மணமுடித்தவர்கள். 1945 - ல் திருமணம் நடந்தது. வாரிசு யாரும் கிடையாது.

ரோரிச்சின் ஓவியங்கள் உலக அளவில் மிகுந்த விலைக்குப் போகக் கூடியவை. அவரது ஓவியங்களோடு அவர் தந்தையார் வரைந்த விலைமதிப்பற்ற பல ஓவியங்களுடனும் அரிய பல கலைப் பொருட்களுடனும் பெங்களூரில் வந்து தங்கலாம் என்று முடிவெடுத்து வந்த இந்தத் தம்பதி, நெடுநாட்களுக்கு முன்பே நகரிலிருந்து இருபது கிலோமீட்டர் தூரத்தில் ஏறக்குறைய நானூற்று எண்பது ஏக்கர் பரப்பளவு கொண்ட எஸ்டேட்டுகளை வாங்கினர்.

இந்த எஸ்டேட் பங்களாக்களில் நிம்மதியாக வாழ்க்கையைக் கழித்து வந்த இருவரும், அத்தனை பெரிய ஆளில்லாத எஸ்டேட்டுகளில் (ஒரு எஸ்டேட்டில் தொழிலாளர் பிரச்னை வந்ததால் தொழில் நின்றுபோனது) தொடர்ந்து நாட்களைக் கழிக்க முடியாது என்பதனால் நட்சத்திர ஓட்டலுக்கு வந்துவிட்டனர்.

இப்போதைய பிரச்னை என்னவெனில் இவர்களுக்குச் சொந்தமான அத்தனை சொத்துக்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று முடிவு செய்தது கர்நாடக அரசாங்கம். 'எஸ்டேட்டுகளில் பல அரிய மரங்கள் இருக்கின்றன. ரோரிச்சுக்குச் சொந்தமான ஓவியங்களையும் கலைப் பொருட்களையும் மியூஸியமாக மாற்றுவோம். எஸ்டேட்டில் பொட்டானிகல் கார்டன் அமைத்துப் பொது மக்கள் பயனடையும்படி செய்வோம். ஓவியக்


கலைக்கூடம் அமைக்கும் எண்ணமும் இருக்கிறது.' - என்பது அரசின் வாதம். ''இந்தத் தம்பதிக்கு வயதாகிவிட்டது. இனிமேலும் இவற்றையெல்லாம் இவர்களால் நிர்வகிக்க முடியாது. இந்தத் தம்பதிக்கு நெருக்கமானவர்கள் என்று சொல்லப்படும் சிலர் இவற்றைக் கைப்பற்றினார்களெனில் அநியாயமாய் ரியல் எஸ்டேட்டுகள் ஏற்படுத்தி பிளாட் போட்டு விற்று விடுவார்கள். இதனைத் தடுக்கத் தான் அரசாங்கம் இந்தத் திடீர் முடிவுக்கு வந்திருக்கிறது'' என்று விளக்கமளித்தார் முதல்வர் பங்காரப்பா.

ஆனால் அரசின் இந்தத் திடீர் முடிவு, ரோரிச் தம்பதியைக் கோபமடையச் செய்து விட்டது. ''இந்தத் தள்ளாத வயதில் எங்களுடன் விளையாடுகிறது அரசாங்கம். எங்களுடைய சொத்துக்களை அரசாங்கத்திற்குத் தாரை வார்க்க நாங்கள் தயாரில்லை. எங்கள் சொத்துக்களை நிர்வகிக்க எங்களுக்குத் தெரியும். நாங்கள் டிரஸ்ட் ஒன்று அமைத்து, அதனிடம் நிர்வாகப் பொறுப்பை விட்டு விடுகிறோம். அந்த டிரஸ்ட் நிர்வகிக்கட்டும்'' என்று அறிவித்துவிட்டார் தேவிகா ராணி.

அவசர அவசரமாக டிரஸ்ட் ஒன்று அமைக்கப்பட்டது. 'இன்டர் நேஷனல் ரோரிச் மெமோரியல் டிரஸ்ட்' என்ற பெயரில் அமைக்கப்பட்ட அந்த டிரஸ்டில் ரஷ்ய ஜனாதிபதி போரிஸ் எல்ஸ்தின், இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, டெல்லியிலுள்ள ரஷ்ய நாட்டுத் தூதர் அந்தோனி துருக்கோவ் ஆகியோர் டிரஸ்டிகள்....

'ரோரிச் தம்பதிகளுக்கும் டிரஸ்டுக்கும் வேண்டிய அத்தனை உதவிகளையும் ரஷ்யா செய்யும். இவர்கள் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் மட்டும் வேண்டியவர்கள் அல்ல. உலகமொத்தத்திற்கும் வேண்டியவர்கள்' - என்று ரஷ்ய அதிபர் செய்தி வெளியிட்டதும், ரஷ்யத் தூதர் டிரஸ்டின் துவக்க விழாவில் கலந்து கொண்டதும் கர்நாடக அரசாங்க நடவடிக்கைகளைக் கொஞ்சம் நிதானமடைய வைத்திருக்கிறது.

இதற்கிடையில் கே.டி. பகத் என்ற வேறொரு காப்பி எஸ்டேட் முதலாளி, அரசாங்கத்திற்கும் ரோரிச் தம்பதிகளுக்கும் மத்தியில், புகுந்து சிக்கலேற்படுத்தி விட்டார். ''அரசாங்கம் வசப்படுத்திக் கொள்ளப் போவதாகச் சொல்லும் எஸ்டேட், ரோரிச் தம்பதிக்குச் சொந்தமானதே அல்ல. உண்மையில் நான் அவர்களிடமிருந்து அந்த



எஸ்டேட்டுகளில் ஒன்று.....

எஸ்டேட்டை ஒரு கோடியே எண்பத்தோரு லட்சம் ரூபாய்க்கு வாங்கிவிட்டேன். இப்போது அரசாங்கம் அவர்களுக்கு நஷ்டஈடாகத் தரப்போவதாகச் சொல்லப்படும் ஐந்து கோடி ரூபாயை எனக்குத்தான் தர வேண்டும். அரசாங்கம் என்னிடம்தான் வியாபாரம் பேச வேண்டும். இல்லாவிட்டால் நான் கோர்ட்டுக்குப் போவேன்'' என்கிறார் பகத்.

இது உண்மைதானா? தேவிகா ராணியை உடனிருந்து கவனித்து வரும் உதவியாளர் மேரிஜாய்ஸ் பூவாச்சா என்பவர், ''பகத்திற்கு 141 ஏக்கர் நிலம் விற்கப்பட்டிருப்பது என்னவோ உண்மைதான். மொத்த எஸ்டேட்டும் தமக்கு விற்கப்பட்டதாக அவர் சொல்வது பொய்'' என்கிறார்.

''நான் அடிப்படையில் ஒரு வியாபாரி. இவ்வளவு பெரிய விஷயத்தில் மொத்த ஆதாரங்களும் டாக்குமெண்டுகளும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் என்னுடைய உரிமையைக் கோர நான் ஒன்றும் முட்டாளல்ல'' - என்கிறார் பகத் கோபமாக.

''இந்த விவகாரம் ஆரம்பமானதிலிருந்து என்னைச் சுற்றி சந்தேகப்படத்தக்க நபர்கள் எல்லாம் உலவுகிறார்கள். எனக்குக் கெடுதல் எதுவும் செய்வது அவர்களின் நோக்கமாக இருக்கலாம்'' - என்று அரசின் தலைமைச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியிருக்கிறார் தேவிகா ராணி.

இதற்கிடையில் கர்நாடக அரசாங்கம் சட்டம் நிறைவேற்றி டெல்லியின் ஒப்புதலுக்கு அனுப்ப, டெல்லியும் மாநில அரசாங்கத்தின் முடிவை ஒப்புக் கொண்டு ஒரு சில நிபந்தனைகளுடன் நிறைவேற்ற யோசனை கூறி உள்ளது.

ஆனாலும் தம்முடைய முடிவிலிருந்து மாறாமலேயே இருக்கிறார் தேவிகாராணி. ''நான் ஒரு வங்காளப் பெண்புலி. என்

அடுத்த இதழ்...

●● சேலம் நகரச் சிறப்பிதழ்

- கால் கொலுசுத் தொழிலாளர் முதல் கலெக்டர் பேட்டி வரை ஏராளச் செய்திகள்!

நகங்கள் இன்னமும் கூர்மையாகத்தான் இருக்கின்றன'' - என்று நிருபர்களிடம் கூறிய தேவிகாராணி, இந்த விவகாரம் குறித்துச் சோனியா காந்தியிடம் பேசியிருப்பதோடு, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் கடிதங்கள் எழுதியிருக்கிறார்

கர்நாடக அரசாங்கத்தின் இந்த திடீர் நடவடிக்கைகளுக்குக் காரணமே மாநிலத்தின் திட்ட மந்திரி கே.எஸ். நாகரத்தினம்மா தான் என்று சொல்லப்படுகிறது. ரோரிச் தேவிகாராணி தம்பதியின் நீண்டகால நண்பராம் அமைச்சர். நிலம், ஓவியங்கள், கலைப் பொருட்கள் மட்டுமல்லாது இவர்களின் ஏராளமான நகைகளும் பணமும், இவர்களுக்குப் பிறகு 'கண்டவர்களின்' கைகளுக்குப் போய்விடாமல் அரசாங்கச் சொத்தாக மாற்றும் நல்ல எண்ணத்துடன்தான் அமைச்சர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே இவர்கள் கொடுத்த நன்கொடைதான், 'கர்நாடக சித்ரகலா பரிஷத்' - என்ற அமைப்பு.

இந்த விவகாரம் ஆரம்பித்த புதிதில் பத்திரிகை நிருபர்களை சந்தித்துக் கொண்டிருந்த தம்பதியர், இப்போதெல்லாம் யாருக்கும் பேட்டி தருவதில்லை. தேவிகாராணியால்தான் ஓரளவு நடமாடவும் பேசவும் முடிகிறதே தவிர, ரோரிச் படுத்த படுக்கைதான். இந்த விவகாரங்களும் சிக்கல்களும் என்னவென்று கூட, அவருக்குச் சிறிதும் தெரியாது. தெரிந்துகொள்ளும் நிலையிலும் அவர் இல்லை என்றும் சொல்கிறார்கள்!

- அமுதவன்

படங்கள் நன்றி : ஃப்ரண்ட் லைன்.

ஏற்றுமதி ஸ்பெஷல்!

இந்தியாவில் ஷாம்பூவை 'சாஷே'வில் அறிமுகப்படுத்திய வெல்வெட் நிறுவனம், மேற்கத்திய வாடிக்கையாளர்களைக் கவர இப்போது புதிய உத்தி ஒன்றைக் கையாளவிருக்கிறது.

மூலிகை கொண்டு தயாரிக்கப்படும் ஷாம்பூ, முக அழகு கிரீம், தைலங்கள் என்று ஏறத்தாழ ஐம்பதுவிதமான காஸ்மெடிக் பொருட்களை ஏற்றுமதி செய்யப் போகிறார்கள். ஆனால் வழக்கமான பிளாஸ்டிக் புட்டிகளில் இல்லை. மூங்கில், கண்ணாம்பு, பிரத்தியேக கோந்து போன்றவற்றைக் கொண்டு தயாரான ஒரு வகைக் கூழ் இறுகுவதால் உருவாகும் புட்டிகளில்!

இதனால் என்ன அனுகூலம்?

ஷாம்பூ தீர்ந்த பிறகு பிளாஸ்டிக் புட்டி குப்பையாகும். அவை அழியாது. அழிக்கவும் முடியாது. அதனால் சுற்றுப்புற சூழலைப் பாதிக்கும். ஆனால் இந்த மூங்கில் முதலானவை கொண்டு தயாரிக்கப்பட்ட புட்டியில் இந்தப் பிரச்னை இல்லை. தானாடையில் மக்கி, மண்ணோடு மண்ணாகி விடும். இதன் காரணமாக சுற்றுப்புறச் சூழல் பற்றிய அதிக அக்கறை கொண்ட ஐரோப்பிய நாடுகளில், வெல்வெட் நிறுவனத்தின் இந்தப் புதிய புட்டிகளில் அடைக்கப்பட்ட காஸ்மெடிக் பொருட்களுக்கு நிச்சயம் நல்ல வரவேற்புக் கிடைக்கும்.

''சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு என்பது இங்கேயும் இருக்கிறதே! உங்கள் புதிய புட்டிகளை இந்தியாவிலும் அறிமுகப்படுத்தலாமே?'' என்று வெல்வெட் நிறுவன சேர்மன் டாக்டர் ராஜ்குமாரைக் கேட்டோம்.

''தானாடையில் மண்ணாகிப் போகும் (Bio degradable) புட்டிகள் என்றால் விலை சற்றுக் கூடுதலாக இருக்கும். அது மேலைநாட்டு வாடிக்கையாளர்களுக்கு ஓகே. இங்கே உள்ளவர்களுக்குக் கட்டுபடியாகாது. அடுத்த காரணம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிக அந்நியச் செலாவணி கிடைக்குமில்லையா?'' என்கிறார் அவர்.

ஆக, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டுமானால் மக்களும் அதற்குத் தகுந்த விலை கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும். அதற்கான விழிப்புணர்ச்சியை முதலில் மக்களிடம் உருவாக்க வேண்டும்.

பேட்டி :
எஸ். சந்திரமௌலி

▲ புதிய புட்டிகள்.....



DO YOU KNOW, NO OTHER COOKING OIL IS BETTER THAN RICEBRAN OIL?



Do You Know Only Branola Is 100% Refined And Clarified Ricebran Oil ?

WONDER OIL AND GOLDEN OIL WORLDWIDE.
Branola IN INDIA!



1. All purpose cooking medium
   From largest manufacturer of Ricebran oil in India with 'Japanese Technology'.
2. Remarkably reduces harmful cholesterol levels-
3. Established as healthier cooking oil in countries like Japan/USA.
4. Regular use of Branola
   a) Reduces cellular damage
   b) Smoothens blood circulation
   c) Works as anti-ulcerative.
   d) Nourishes Brain, Nervous system due to vitamin 'E'
   e) Guards against skin diseases.



SIRIS AGRO LTD.
SIRI NAGAR
HYDERABAD 500 963

YOU DESIRE GOOD HEALTH,
GOOD HEALTH REQUIRES BRANOLA.

உங்கள் செல்வம் :

இன்று விதை; நாளை அறுவடை!

மக்களிடம் முதலீடு கோரி பிரதான மார்க்கெட்டுக்கு வரும் வேறு சில நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் கீழே. இவற்றில் இன்று முதலீடு செய்வது நாளை லாபகரமாக அமையும் வாய்ப்புகள் மிகுதி.

ஸன்மாக் மோட்டார் ஃபைனான்ஸ் :

சென்னையில் அமைந்துள்ள இந்த நிறுவனம் 1987 தொடங்கி, இன்று நன்கு வளர்ந்துள்ளது. 98.26 லட்சம் மூலதனப் பங்குகள் உடையது. மோட்டார் கார்கள், லாரிகள், மற்றும் காரியாலய உபகரணங்கள் முதலியவற்றுக்குக் கடன் வழங்குதல், லீஸிங் என்ற முறையில் வாடகைக்குத் தருதல் போன்ற காரியங்களைச் செய்து வருகிறது. இத் தொழிலுக்கு இன்று நல்ல வரவேற்பு இருப்பதால் மூலதனப் பங்குகளை மேலும் அதிகரிக்கத் தீர்மானித்து, இன்று தலா பத்து ரூபாய் பெறுமானமுள்ள 18 லட்சம் பங்குகளைப் பொது மக்களுக்கு விநியோகிக்கவிருக்கிறது. ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் பங்குகளுக்கு விண்ணப்பிக்க நீங்கள் தயாராகலாம்.

குஜராத் நர்மதா எலெக்டிரானிக்ஸ் :

பிரபலமான வீடியோகான் நிறுவனம்தான் இதனைத் தொடங்குகிறது. டீவியில் படம் பார்க்கும் பிக்சர் டியூப்கள் உள்ளன அல்லவா? அந்த பிக்சர் டியூப்களின் கண்ணாடிக் கூடுகளைத் தயாரிக்கப் போகிறார்கள். குஜராத்தில் அமைகிறது தொழிலகம். 450 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுகிறது. இதில் வீடியோகான் நிறுவனத்தினரே முதலீடு செய்யும் பகுதி, கடனாக வழங்கும் பகுதி ஆகியன போக, மிச்சம் 240 கோடிக்கு டிபன்சர்களைப் பொது மக்களுக்கு வழங்குகின்றனர். இந்தக் கடன் பத்திரம் ஒவ்வொன்றும் ரூ 200 பெறுமானமுள்ளது. இதனைப் பதினெட்டு மாதங்களுக்குள் பங்குகளாக மாற்றிக் கொடுத்து விடுவார்கள். ஒவ்வொரு டிபென்சருக்கும் எட்டு பங்குகள் கிடைக்கும். ஒவ்வொரு பங்கும் ரூ 10 மதிப்புடையது. ஆக இந்தப் பங்குகளுக்குக் கூடுதல் தொகை கொடுக்கிறீர்கள் என்றாலும் இவற்றின் மதிப்பு மார்க்கெட்டில் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கலாம். வீடியோகான் உபகரணங்கள் பிரபலமானவை என்பதால் நிறுவனம் நன்கு நடக்கும்.

குஜராத் இண்டஸ்ட்ரீஸ் பவர் :

மின் உற்பத்திக்காக உருவாக்கப்படுகின்ற நிறுவனம் இது. எரிவாயுவைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிகபட்ச மின் உற்பத்திக்கு முயற்சி செய்யப்படும். இதற்கான தொழில் நுணுக்கங்களை, குஜராத் ஆல்கலி கெமிகல்ஸ், குஜராத் மாநில உர நிறுவனம், குஜராத் மின் வாரியம் போன்றவை அளித்து ஒத்துழைக்கும். மூலதனம் 26 கோடி ரூபாய். கம்பெனி தொடங்குகிறவர்களின் பங்கு 11 கோடி. மீதி 15 கோடிக்குப் பொது மக்களிடம் வருகிறார்கள். டிபென்சர்கள் எனப்படும் கடன் பத்திரங்களை இரண்டுவிதமாக வழங்குகிறார்கள். ஒன்று பகுதி அளவில் பங்குகளாக மாற்றிக் கொள்ளக்கூடிய டிபன்சர் பத்திரங்கள். இதற்கு வட்டி 12.5%. மற்றொன்று, பங்குகளாக மாற்ற முடியாத கடன் பத்திரங்கள். இதற்கு வட்டி 19%. இன்று மார்க்கெட்டில் இதைவிட அதிகமாக டிபன்சர் பத்திரங்களுக்கு வட்டி தருவோர் கிடையாது.

ஜூலை 13ம் தேதி முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. வாய்ப்பை நழுவ விடாதிருக்க வாசகர்கள் உடனடியாக இயங்குவது நலம்.

–வி. கோபாலன்

ராபின் ஹூட்

பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்றதாகக் கருதப்படும் ராபின் ஹூட் கதை இப்போது மீண்டும் திரைப்படமாகியுள்ளது. ஆனால் முன்னெப்போதையும் விட மிகப் பெரிய அளவில்.

இம்மாதிரி ஆங்கிலப் படங்களுக்கே உரித்தான அதே பிரும்மாண்டம். சின்னஞ் சிறு விஷயங்களிலும் செலுத்தப் படும் துல்லியமான கவனம். தொழில்நுட்ப உத்திகள். பாத்திரத் தேர்வு. படப்பிடிப்புக் கோணங்கள்... எல்லாவற்றுக்கும் மேலாக, நகைச்சுவை இழையோடும் கூர்மையான வசனங்கள். பளீர் பளீரெனத் தெறித்து விழுந்து அவ்வப்போது சிரிப்பலைகளை எழுப்புகின்றன.

இதற்கு முந்தின படங்களில் இடம் பெற்றிருக்காத ஒரிரு புதிய பாத்திரங்கள் கதையில் சேர்க்கப்பட்டிருந்தாலும், திரைக்கதையமைப்பில் செலுத்தப்பட்டுள்ள அக்கறையும் திறனும் அவற்றுக்குப் புதிய பொருளையும் பரிமாணத்தையும் வழங்கி விடுகின்றன.

பிரான்சிலும் இங்கிலாந்திலும் உள்ள புராதன நிலைக்களன்களில் படமாகியுள்ள இதன் மற்றொரு ப்ளஸ் பாயின்ட் - சண்டைக் காட்சிகளை அமைத்துள்ள விதம். அதில் தென்படும் கற்பனை வளம்.

ராபின் ஹூடாக கெவின் காஸ்ட்னர், அஜீமாக மார்கன், ஃப்ரீமான், வில் ஸ்கார்லட்டாக கிரிஸ்டியன் ஸ்லேட்டர், மரியனாக மேரி எலிசபெத் மாஸ்ட்ரான்டோனியோ என நீளும், சிறப்பாக நடித்தவர்கள் பட்டியல். இவர்களுள் தனித்து மனத்தில் நிற்பவர் வில்லத்தனத்துக்குப் புது மெருகு சேர்த்துள்ள ஆலன் ரிக்மான். என்னவொரு அலட்டலான நடிப்பு!


எத்தனை பத்தாண்டுகள் கடந்தாலும் இன்னமும் பசுமையாக இருக்கும் கதை. பலமுறை திரும்பத் திரும்பப் படமாக்கப்பட்டுள்ள மார்க்கண்டேயத்தனமான கதை.

நடிகர்கள் மாறலாம். தயாரிப்பாளர்கள் மாறலாம். இயக்குனர்கள் மாறலாம். ஆனால் கலை மட்டும் குன்றுவதே இல்லை. அதிலும் இந்தப் படத்தில் ஒவ்வொரு ஃப்ரேமிலும் பரபரப்பை உண்டு பண்ணும் அந்த உச்சக் கட்டத் தூக்குமேடைக் காட்சி. இயக்குனரின் கைவண்ணம் முழுக்க முழுக்க அதில்.

இரண்டரை மணி நேரம் - போவது தெரிவதில்லை.

- சி. ஆர். கே.




'பார்'வைச்சதிலே என்ன தப்பு? விளம்பரங்களுக்கு அரசாங்கப் பணத்தை வாரி விடறதில என்ன தப்பு? எனக்கு கட்-அவுட்டுங்க, பேனருங்க வைக்கிறதில என்ன தப்பு? அதில என்ன தப்பு... இதிலென்ன தப்பு....
நாங்க இந்த நாட்டில பிறந்து தொலைச்சது தான் தப்பு!
பொது ஜனம்
ஜீ, மந்திரகாளி! இப்போ யானை வரப்போவுது, பாரு...!
!
மியாவ்...
ஸ்டியரிங் பிடிச்சிருச்சி... இனிமே ... புல் ஸ்பீடுதான்!
ஐயோ... அரையும் குறையுமா அடிச்சிப் போட்டுப்பிட்டு கிளம்பிட்டியே... நான் எப்ப எழுந்து, எப்படி நடமாடப் போறேனோ...?



கல்கி



1992
ஜூலை 19
மலர் : 50
இதழ் : 51
ஆங்கீரச
ஆடி 4

சக்கரங்கள் சுழலட்டும்!

வேலை நிறுத்தம் முடிந்து ஒருவழியாக லாரிகள் ஓட ஆரம்பித்துள்ளன. இந்த ஒரு வாரத்தில் மளமளவென்று உயர்ந்த விலைவாசிகள், அதே வேகத்தில் குறைந்து, பழைய நிலைக்குத் திரும்பி விடப் போவதில்லை. கூடுதல் விலை தந்துதான் பொருள்களை மக்கள் வாங்க வேண்டியிருக்கும்.

மக்களுக்கு மட்டும்தான் இழப்பு என்பதில்லை. லாரி உரிமையாளர்களுக்கும்தான். லாரிகள் பலவும் கடனுக்குத்தான் வாங்கப்படுகின்றன. சக்கரங்கள் சுழலாத போது இல்லாத வருவாய்க்கு வட்டி தரும் வேதனை வேறு. இன்னும் லாரி ஓட்டிகள், கிளீனர்கள், சுமைக் கூலிகள், சிறிய பெரிய வியாபாரிகள் முதலிய பலருக்கும் நஷ்டம். அழுகும் பொருள்கள் வீணானது தேசிய நஷ்டம். நாட்டின் பொருளாதாரத்துக்கே பெரும் கஷ்டம்.

'இதெல்லாம் லாரி உரிமையாளர்களுக்குத் தெரியாதா என்ன? நன்கு தெரிந்திருந்தும் ஏன் வேலை நிறுத்தம் செய்தார்கள்?' என்றால் 'இப்படி ஏதாவது செய்தால்தான் அரசின் கவனத்தைக் கவர முடிகிறது; இல்லையேல் மெத்தனம்தான் நீடிக்கிறது' என்பதே பதில். வருமுன் காப்பது என்ற அம்சம் ஒன்றிருப்பதாகவே நமது தலைவர்கள் எண்ணுவதில்லை. வந்த பின்தான் விழித்துக் கொள்கிறார்கள். தீர்க்க தரிசனம் அரிதிலும் அரிதாகி விட்டது.

லாரி போக்குவரத்துத் துறையின் நீண்ட கால முக்கிய கோரிக்கை, ஆக்டராய் என்ற வரி நீக்கப்பட வேண்டும் என்பது. நகருக்குள் எந்தப் பொருள் கொண்டு வரப்பட்டாலும் அதற்கு நுழைவு வரி விதிப்பது என்பது எந்த நாளிலோ பிரான்ஸ் தேசத்தில் விதிக்கப்பட்ட கொடிய வரி. இந்த வரி அநீதியானது, காலத்துக்கு ஒவ்வாதது, வர்த்தகத்துக்குக் குந்தகம் செய்வது என்பதை எல்லா உலக நாடுகளும் ஒப்புக் கொள்ள, இந்தியா மட்டும் கெட்டியாகப் பற்றிக் கொண் டிருக்கிறது. மிக அதிகமாக வரி அறுவடை செய்வது பம்பாய். இந்தப் பிற்போக்கான வரி தவிர, லாரிகளுக்குச் சாலை வரிகளும் அதிகம்; பல இடங்களில் டோல்கேட் வரி வேறு; இவற்றின் உடன்விளைவாகக் கொழிக்கும் லஞ்ச ஊழல்கள். குவெய்த் போரின் போது டீசல் மீது போடப் பட்ட வரி போர் ஓய்ந்து பல காலமாகியும் நீடிக்கிறது.

இன்று மத்திய அரசு பல இனங்களில் வரிகளைக் குறைத்தும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும் விதிமுறைகளை எளிதாக்கியும் பொருளாதாரம் செழிக்க உதவி வருகிறது. இதைப் பார்த்து மாநில அரசுகளும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு, மக்களுக்குத் துன்பம் தரும் வரிகளை நீக்கி, அதிகச் சிரமம் இல்லாதவிதமாக கணிசமான வரி வசூலிக்க ஏற்ற வழிகளைக் கையாள வேண்டும். இந்த சாமர்த்தியம் இன்று மாநிலத் தலைவர்களிடம் காணப்படவில்லை. லாரி வேலை நிறுத்தம் தொடங்கிய பிறகேனும் மத்திய அரசு, யூனியன் பிரதேசங்களில் ஆக்டராய் ஒழித்து, மாநில அரசு களுக்கும் தன்னைப் பின்பற்றுமாறு சிபாரிசு செய்துள்ளது. இந்த சிபாரிசை ஏற்கும் மனத்துணிவு கூட இன்று பல மாநிலத் தலைவர்களிடம் இல்லை.

செக்போஸ்டுகளில் போலீஸாரிடம் பேரம் பேசும் நேரத்தில் லாரி இஞ்ஜின்கள் இயங்கியபடி இருப்பதால், ஆண்டு தோறும் ரூ 3000 கோடி நாட்டுக்கு நஷ்டமாவதாகவும் பல்வேறு அதிகாரிகளால் லாரிக்காரர்கள் கொடுமைப்படுத்தப் பட்டு வருவதாகவும் மத்திய அமைச்சர் டைட்லரே ஒப்புக் கொள்கிறார். இத்தகைய அபத்தமான நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டாமா?

லாரிகள் ஓடாததால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள சேதம் சீரடையவே வெகு காலமாகும் எனில், பொருளாதாரம் முன்னேறுவது எப்போது? இதுபோன்ற வேலை நிறுத்தங்களைத் தாங்கக்கூடிய நிலையில் நமது பொருளாதாரம் இல்லை. இதற்காக, 'வேலை நிறுத்தமே கூடாது' என்று சட்டம் இயற்றுவதும் தொழிலாளர் நலனுக்கு விரோதமானது. வேலை நிறுத்தமோ கதவடைப்போ பிளாக் மெயில் ஆயுதமாகச் செயல்படக் கூடாது.

லாரி சக்கரங்கள் மட்டுமல்ல, நாட்டிலுள்ள எல்லா இயந்திரங்களின் சக்கரங்களும் இடைவிடாமல் சுழன்றால்தான் நாம் இன்றைய போட்டா போட்டி உலகில் தாழ்ந்து போகாமல் நிமிர்ந்து நிற்க முடியும். இதற்கு எல்லாத் தரப்பினரும் நியாய உணர்வோடு ஒத்துழைத்து, 'வேலை நிறுத்தங்களைத் தடுப்பது அல்ல, தவிர்ப்பதே நோக்கம்' என்று செயல்பட வேண்டும். வேலை நிறுத்தம் என்ற சொல் அகராதியோடு நின்று போகட்டும்.

பம்பாய்க் கடிதம் :



சுஷீல் குமார் ஷிண்டே

91 வயது இளைஞர்!

வயது மனதைப் பொறுத்தது என்று கூறுவார்கள். அது சரியென நிரூபிக்கிறார் பேராசிரியர் எம்.பி. காந்தி. 91 வயதாகும் காந்தி, தாமே காரை ஓட்டுகிறார். இந்த வயதிலும் வாரம் தவறாமல் நன்றாக டென்னிஸ் விளையாடுகிறார். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட, ஒற்றையர், இரட்டையர் டென்னிஸ் போட்டிகள் இரண்டிலுமே ஜெயித்திருக்கிறார் என்பது ஆச்சரியமான விஷயமல்லவா?

பம்பாயின் நம்பிக்கை நட்சத்திரங்கள்

ஒற்றுமைக்கு இதுவா வழி?

'அஞ்சுமன் இஸ்லாம்' என்பது பம்பாய் முஸ்லீம்களின் முக்கிய அமைப்பு. இந்த அமைப்புடன் 'பாரதீய வித்யா பவன்' இணைந்து, ராஜேந்திர பிரசாத் பெயரில் ஒரு கல்வி நிறுவனத்தைத் துவக்கியது. துவக்கியவர் மகாராஷ்டிர கவர்னர் சி. சுப்ரமணியம். ஆனால் அதற்கு முன்பே குழப்பம் ஆரம்பித்து விட்டது. தங்கள் தனித்துவம் பாதிக்கப்பட்டு விடுமோ எனப் பயந்த சில முஸ்லீம் மதவாதிகள் முகப்பில் பெயர்ப் பலகையில் கறுப்பு வண்ணம் அடித்தனர். தொடர்ந்து முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கும் பம்பாயின் முக்கிய வியாபார வீதியான முகமது அலி ரோட்டில் கடைகள் அடைக்கப்பட்டன. முஸ்லீம் லீக் தலைவர் பனத்வாலா, சி. சுப்ரமணியம் பதவியை விட்டு விலக வேண்டும் என அறிக்கை விட்டுள்ளார். ஒற்றுமைக்கு இதுவா வழி?

தகுதி கிடைத்துவிட்டது!

சமீபத்தில் உள்துறை அமைச்சர் சவாண் பம்பாய் வந்திருந்தபோது, அவரது கார் ஓரிடத்தில் நின்றது. உடனே பின்னால் வந்த காரிலிருந்து பூனைப்படை வீரர்கள் குதித்துத் துப்பாக்கிகளுடன் அமைச்சரின் காரைச் சூழ்ந்து கொண்டனர். இதைப் பார்த்த ஒருவர் மற்றவரிடம் ''ஹர்ஷத் மேத்தாவிற்கு எவ்வளவு பாதுகாப்பு பார்த்தாயா?'' என்றார். பம்பாயில் ஹர்ஷத்மேத்தா அத்தனை பிரபலமாகி விட்டார். அண்மையில், 'டைம்ஸ் ஆப் இந்தியா' மற்றொரு நிறுவனத்துடன் சேர்ந்து நடத்திய கணக்கெடுப்பில், 56 சதவிகித மக்கள், ஹர்ஷத் மேத்தா 'ஸ்டாக் மார்க்கெட்டின் அமிதாப் பச்சன்' என்றே அபிப்பிராயப்பட்டனர்! யார் கண்டது? இந்த வழக்கு முடிந்ததும் ஹர்ஷத் மேத்தா அரசியலில் குதித்தாலும் குதிக்கலாம். அதற்கான பூரண தகுதிகளைத்தான் பெற்று விட்டாரே!


நம்பிக்கை நட்சத்திரங்கள்!

மகாராஷ்டிராவிலிருந்து ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இருவர் முன்னுக்கு வருவார்கள் என எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். ஒருவர் சுஷீல் குமார் ஷிண்டே. இவர் ஏற்கெனவே பிரதமரால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மற்றவர் டாக்டர் ஸ்ரீகாந்த் ஜிச்கர். 37 வயதாகும் இவர் பத்தொன்பது பட்டங்கள் (படிப்பில்) பெற்றவர்! அசல் டாக்டரான இவர், ஐ.ஏ.எஸ் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டும், அதை வேண்டாம் என்று உதறி விட்டு, அரசியல் களத்தில் குதித்தவர். வேதங்கள், உபநிஷத்துக்கள் இவருக்கு அத்துப்படி! இந்தியப் பண்பாட்டில் தீவிர நம்பிக்கை கொண்டவர். ராஜ்யசபையில் இவர் பேசுவதைக் கேட்க ஏராளமான எதிர் பார்ப்புகளோடு அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

கொள்கைப் பிடிப்பு!

மகாராஷ்டிராவின் முன்னாள் முதன் மந்திரியான பாபா சாஹேப் போன்ஸ்லே, சென்ற வருடம் காங்கிரஸிலிருந்து விலகிச் சிவசேனாவில் சேர்ந்தார். 'பாராளுமன்ற சீட் கிடைக்காததால் சிவசேனாவில் சேர்ந்தீர்களா?' எனக் கேட்ட போது, 'நான் சிவாஜிக்கு உழைத்த பாரம்பரையில் வந்தவன். பதவி எனக்கு ஒரு பொருட்டல்ல. மகாராஷ்டிரத்தின் முன்னேற்றமே எனது குறிக்கோள்' என்று அப்போது பக்கா அரசியல்தனமாக கொக்கரித்த இவர், சமீபத்தில் சிவசேனாவில் ராஜ்யசபா டிக்கெட் தராததால் அதை விட்டும் வெளியேறியிருக்கிறார். இவரைப் போலவே 'கொள்கைப் பிடிப்புள்ள' இன்னொருவர் சகன் புஜ்பல். சென்ற வருடம், 'காந்தியைக் கொன்ற கோட்ஸே ஒரு குற்றவாளி அல்ல' எனக் கூறிய சகன் புஜ்பல் இப்போது சிவசேனாவை விட்டு விலகி, காங்கிரஸில் சேர்ந்து, ரெவின்யூ மந்திரியாக இருக்கிறார். சமீபத்தில் இவர் காந்தி வசித்த மணிபவனுக்குச் சென்று அஞ்சலி (!) செலுத்தினார். இவர்களல்லவோ கொள்கைப் பிடிப்புள்ள அரசியல்வாதிகள்!

– அம்ருதா பார்த்தசாரதி



எழில் கேசத்தின் ரகசியம் !



அஸ்வினியின் அரிய உண்மைகள்


[illegible]

[illegible]

[illegible]

அஸ்வினி

ஹோமியோ ஹேர் ஆயில்



புதிய நற்குணங்களுடன் கூடிய சுத்தமான தேங்காய் எண்ணெய் கலந்தது...

- நரை மற்றும் முடி உதிர்வை தடுக்கிறது.
- வளமான, ஆரோக்கியமான முடிவளர தூண்டுகிறது.

மேலும் பலனை அறிய, இன்றே பயன்படுத்திப் பாருங்கள்.

தயாரிப்பாளர்கள்:

அஸ்வினி ஹோமியோ பார்மஸி,
12, 5வது தெரு, ரட்லண்ட் கேட் நுங்கம்பாக்கம்,
சென்னை-600 006.
போன்: 472417, 526821, 8256473.

அனைத்து பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

விரைவில் எல்லோர் நினைவிலும் நிலைத்து நிற்கும் ஹேர் ஆயில் — அஸ்வினி

MAC-1363

கொண்டாருங்க ஒலிம்பிக் தங்கம்; கொண்டாடறோம், பாருங்க!

கற்பனை :
மௌஷ்மி
படம் : அரஸ்.


வி.பி.சிங் :
மண்டல் வழியில், உலக நாடுகளின் மக்கள் தொகை அடிப்படையில், தங்கப் பதக்க ஒதுக்கீடு செய்தால்தான் சர்வதேச அளவில் சமுதாய நீதி கிடைக்கும். நமக்கும் தங்கம் கிடைக்கும். இப்படிச் செய்யவில்லை யெனில் நான் என் எம்.பி. பதவியை ராஜி னாமா செய்து விடுவேன்!



மன்மோஹன்சிங் :
நான்தான் தங்கம் கொண்டு வரதுக்கான கெடுபிடிகளைத் தளர்த்தி விட்டேனே. இன்னும் என்ன தயக்கம்? ஒலிம்பிக் தங்கம் தாராளமா கொண்டு வரலாமே! இதில் வேங்கடரமணனை ஏன் இழுக்கணும்? அவர் மேல் ஒரு தவறும் இல்லை!



கருணாநிதி :
தங்கம் கிடைக்கணுமாம் தங்கம். ராஜீவ் ஆட்சியில் கிடைத்ததா? எம்.ஜி.ஆர் ஆட்சி யில் கிடைத்ததா? அல்லது இப்போ டான்ஸி ராணி ஆளும் போதுதான் கிடைக்கப் போகி றதா? நமது ஓராண்டு ஆட்சிச் சாதனையில் ஒன்றாகக் கிடைத்திருக்கும். ஆனால் அப்போ ஒலிம்பிக்கே நடக்காமல் போய் விட்டதே, அதுதான் வேதனை!






ஹர்ஷத் மேத்தா :
ஒண்ணும் கவலைப்படாதீங்க! என்னை பார்ஸிலோனாவுக்கு அனுப்புங்க. தங்கப் பதக்கங்கள் பெறுவோரிடம் நைஸாகப் பேசி, அவரவர் ஊரில் அவற்றை பத்திர மாகக் கொண்டு சேர்ப்பதாகக் கூறி, இங்கே தட்டிக்கினு வந்துடறேன். கொஞ்ச நாளா வது நாம வைச்சுக்கிட்டு அனுபவிக்கலாம்.



ஜெயலலிதா :
தங்கம் பெற்று வரும் விளையாட்டு வீரர்களுக்கு மாநாடு நடத்தி அவர்களுக்கு நான் வாழ்த்துத் தெரிவிக்கும் போது, எனக்குத் தங்க சிம்மாசனமும், தங்க வாளும், தங்கக் கிரீடமும், வெள்ளிச் செங்கோலும் அரசின் ஆடம்பரச் செலவின்றி நியாயமான செலவுகளுடன் எனது கட்சித் தொண்டர் களே அளிப்பதைத் தவறு என்று யார் கூற முடியும்? அதனால் களம் நோக்கி வீரர் படை புறப்படட்டும். வென்று தங்கத்துடன் திரும் பட்டும்.

''காதல் காட்சிகளில் நடிக்கக் கூச்சமாக இருக்கிறது!''



☛ மம்முட்டி : ''இயற்கையாக அல்லாத விதத்தில் எதையும் நடிப்பில் நாம் செய்யக்கூடாது.''

— மம்மூட்டி சிறப்புப் பேட்டி

ஏ.வி.எம். ஸ்டுடியோவில் முதல் தளத்தைச் சேர்ந்த மேக்-அப் அறை ஒன்றில், ஷூட்டிங்குக்கு இடையே கிடைத்த நேரத்தில், மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டியைச் சந்திக்கிறோம்.

கை நீட்டி, நட்புடன் நம் கரத்தைக் குலுக்குகிறார். ''கல்கியிலிருந்து பேட்டிக்கு வருகிறீர்கள் என்றதும் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது. கல்கி சினிமா இதழ் அல்லவே என்பதுதான் சந்தேகத்துக்குக் காரணம்.''

ஆரம்பத்திலிருந்தே சினிமாவுக்கு அவ்வப்போது 'கல்கி' முக்கியத்துவம் அளித்து வந்துள்ளதைக் குறிப்பிட்டோம்.

''அப்படியானால் சரி. எனக்குச் சந்தோஷம்!'' என்கிறார் மம்முட்டி, வெகு இயல்பாக.

''உங்கள் பெயரே மம்முட்டிதானா, அல்லது....''

''என் முழுப் பெயர் மகமதுகுட்டி. அது சுருங்கி மம்முட்டி ஆகி, அதுவே பிரபலமும் ஆகி அப்படியே நிலைத்து விட்டது!''

''எது உங்கள் முதல் படம்?''

''முதல் படம் என்று சொன்னால் 'தேவலோகம்'தான். ஆனால் அது வெளிவரவே இல்லை! முதலில் வெளியான படம் 'வில்கான் உள்ள ஸ்வப்னங்கள்' (விற்பனைக்கு உள்ள கனவுகள்)தான். 1981 - ல், அதன் மூலம்தான் மலையாளத் திரை உலகுக்கு நான் அறிமுகமானேன்.''

''ஆனால் அப்போதே ஏதோ அவார்டு வாங்கி விட்டீர்கள் போலிருக்கிறது?''


''அது 1982 - ல். 'அகிம்சா' என்ற படத்துக்கு ஸ்டேட் அவார்டு வாங்கினேன். அப்புறம் பரிசுகளும், அவார்டுகளும் நிறையவே வந்தன. அதை எல்லாம் எதற்குச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்? வாசகர்களுக்கு போர் அடிக்கும்... நேஷனல் அவார்டு கிடைத்தது 'வடக்கன் வீர காதா' நடிப்பிற்கும், 'மதிலுகள்' நடிப்பிற்கும் தான்.''

☛ 'வடக்கன் வீர காதா' வில் மாதவியுடன்...



''மதிலுகள் படத்தில் மிகவும் வித்தியாசமான பாத்திரம் உங்களுக்கு. வைக்கம் முகமது பஷீரின் பிரபல நாவலான 'மதிலுகளில்' தனியாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிற காரெக்டர். கிட்டத்தட்ட கதாசிரியரின் கற்பனை வடிவத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்று கூடுதல் முயற்சிகள் எதுவும் எடுத்துக் கொண்டீர்களா?''

''அப்படி எல்லாம் எதுவுமே செய்யவில்லை. அந்த வகை நடிப்பு, கடவுள் அநுக்கிரகத்தில், என் உள்ளுணர்வின் தூண்டுதலாகவே வெளிப்பட்டது.



'யாத்ரா' படத்தில் ஷோபனாவுடன்...

குறிப்பிட்ட பாத்திரத்துக்குள் புகுந்து கொண்டு விடுவது என்பது ஒரு வகைப் பாணி. என்னைப் போன்ற நடிகர்கள் எல்லாருமே இரு வேறு 'ஸ்ப்லிட்-பெர்சனாலிடி' உள்ளவர்கள். என் ஆத்மா, தானாகவே குறிப்பிட்ட பாத்திரத்தோடு இழைந்து போன பின், அந்தப் பாத்திரம் மட்டுமே வெளிப்படுகிறது.''

''நடிப்பைப் பற்றி நிறையவே அனலைஸ் பண்ணியிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?''

''என்னைப் பொறுத்த வரை, நடிப்பு இரண்டு வகைப்படுகிறது: முதலாவது, பாத்திரத்துக்குள்ளே நாம் புகுந்து கொண்டுவிடுவது. இரண்டாவது, பாத்திரம் நமக்குள் தொற்றிக் கொண்டுவிடுவது. என்னுடைய பாணி, முதலாவது வகையைச் சேர்ந்தது. எனவே, குறிப்பிட்ட பாத்திரத்துக்குள் பிரவேசித்த பிறகு, என்னுடைய 'நடிப்பு' இயற்கையானதாகப் போய்

தளபதி : ரஜினி - மம்முட்டி.



விடுகிறது.

''இரண்டாவது வகை நடிப்பில், நடிகனின் மானரிசம் எல்லாம், ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படும். ஆனால், வெகு எளிதாக, அலட்டிக் கொள்ளாமல், இந்த வகை நடிப்பில் தேறிவிடலாம். வெகு சீக்கிரத்தில், லகுவாக, இந்த வகை நடிப்பை ரசிகர்கள் ஏற்றுக் கொண்டும் விடுவார்கள். இவ்வகை நடிப்பில், நடிகனின் கூடப் பிறந்த மானரிசம் எல்லாம் வெளிப்படும் என்கிற போது, அவனுடைய behaviour pattern தான் காரெக்டரையும் மீறிக் கொண்டு தெரியும் என்றுதான் சொல்ல வந்தேன். இப்படிச் செய்யும் போதுதான் நடிப்பு செயற்கையாக இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், இது சிரமமானது. இன்னொருவரைப் போல 'நடிப்ப'தே எனக்கு உடன்பாடில்லாதது. நான் சொல்லுவது உங்களுக்குப் புரிகிறதா? என்னை முழுமையாக மறக்காமல் என்னால் இன்னொருவர் போல நடிக்க முடியாது.

''இயற்கையாக அல்லாத விதத்திலும் நாம் எதையும் நடிப்பில் செய்யக் கூடாது. இதுதான் உலகம் முழுக்க ஒப்புக் கொள்ளப்பட்ட ஸ்டைல். நான் இயல்பாக நடிக்க முடிகிறது என்றால் அது கடவுளின் கருணை தான்.''

''இரண்டாவது வகை நடிப்பு செயற்கையான நடிப்பு என்றீர்களே, அதற்கு எது காரணம்?''

''ஸ்பிரிட் ஒரு காரணம். இரண்டாவது, ஆக்ரமித்துக் கொள்ளும் பாத்திரப் படைப்பு மற்றொரு

'நியூடெல்லி'யில் சுமலதாவுடன்....



காரணம். இந்த மாதிரி அம்சங்கள் இருந்து விட்டால் நான் அதோ கதிதான்! டோட்டல் டிஸாஸ்டர்தான்! என்னுடையது முதல் வகை நடிப்பு என்று குறிப்பிட்டேனே, அதில் பிரச்னையே இல்லை. அதில் நடிகன் மோசமான பாத்திரத்தை ஏற்று நடித்தாலோ, மோசமான ஸ்கிரிப்ட் இருந்தாலோ கூட, வெகு சுலபமாக நடித்துப் பெயர் வாங்கிக் கொண்டு போய் விட முடியும்.''

''உங்கள் 'கனல்காற்று' வித்தியாசமானதாக இருந்தது. பாதிவரை ஜோவியலான பாத்திரம். மீதிப் பாதி சோகமான நடிப்பை வெளிப்படுத்தும் பாத்திரம். ஆனால், அதிலும் உங்கள் நடிப்பு இயற்கையாகத்தான் இருந்தது....''

''பாத்திரம் 'என்னை'ப் போல இருக்கக் கூடாது. நடிகன் காரெக்டரை 'உணர்ந்து பார்க்கும்படி' இருந்தால்தான் இயல்பாக இருக்க முடியும் என்று நம்புகிறவன் நான். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன். என்னால் அப்பாவியாகவோ, முட்டாளாகவோ காட்சியளிக்க முடியாது. அது என் உருவம் செய்த தவறு!''

''நீங்கள் வக்கீலுக்குப் படித்தவர். எப்படி திரைப்படத் துறைக்கு வந்து சேர்ந்தீர்கள்?''

''என்னுடைய ஆசையே நடிகனாக வேண்டும் என்பதுதான். நான் லாயர் ஆனதுதான் இன்ஸிடென்டல்!''

''இந்த வேகமான சினிமா வாழ்க்கை உங்களுக்கு அலுப்புத் தரவில்லையா?''

''நானாக விரும்பி ஏற்றுக் கொண்டது தான் இந்தத் தொழில். யாரும் என் மீது இதைத் திணிக்கவில்லை. எனவே என் தொழிலைச் செய்வதில் திருப்தியும், சந்தோஷமுமே இருக்கிறது. அதுவுமல்லாமல், எட்டு முதல் பத்து மணி நேரம்தான் உழைக்கிறேன். இது ஒன்றும் அதிகம் இல்லையே! விடுமுறைகளில் குடும்பத்தோடு ரிலாக்ஸ் செய்து கொள்ளுகிறேன்!''

''மறுபடி உங்கள் ந டி ப் பு க் கு வர வேண்டியிருக்கிறது.... ரேப் கா ட் சி களிலோ, நெருக்கமான காதல் காட்சி களிலோ, உங்களை அதிகம் காண முடிவதில்லையே?''

''இது மாதிரி காட்சிகளில் நடிக்க இன்னும் எனக்குக் கூச்சமாக இருக்கிறது. I feel shy. ஆனால் இப்போது கொஞ்சம் தேறி வருகிறேன். இம்மாதிரி ரேப் காட்சிகள் அன்யூஷவல் மட்டுமல்ல, அந்நாட்கரலும் கூட. அதிர்ஷ்டவசமாக, எனக்குக் கிடைக்கிற பாத்திரங்களும் இவற்றுக்கு இடம் கொடுக்காத விதத்தில் அமைந்து விடுகின்றன.''

''இயற்கையான நடிப்புக்காக, நீங்கள் காலம் சென்ற சத்யனை முன் மாதிரியாக வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ?''

''அப்படி எல்லாம் இல்லை. எப்போது ஒரு நடிகன் செயற்கையாக உருவாக்கப்பட்ட சம்பவங்களுக்கு இயற்கையாக ரியாக்ட் பண்ணுகிறானோ, அப்போது நடிப்பும் இயற்கையாகவே அமையும். ஆனால் தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில், காரெக்டரின் தன்மையை வெளிப்படுத்த, வேறு வழியில்லாமல், கொஞ்சம் ஓவர் ஆக்ட் பண்ண வேண்டி வரும். கூடுதலாக இமோஷன் காண்பித்து நடிக்கும் நிலை உண்டாகும். அப்போது சற்று மிகையான நடிப்பு தேவைப்படும்.

''சிவாஜியைப் பற்றிச் சொல்லும் போது, அவர் பாணியை, ஓவர்-ஆக்ட் பண்ணுகிறார் என்று சிலர் சொல்லியதுண்டு. ஒரு நடிகனால் மட்டுமே ஓவர்-ஆக்ட் பண்ண முடியும். அவர் நடித்த பாத்திரங்கள் எத்தனை எத்தனை வகையானவை! பிரமிப்பில் ஆழ்த்தி விடுகிற மாதிரி அல்லவா அவர் நடிப்பை வாரி வாரி வழங்கினார்? ஆனால் • அன்றைக்கு வீரபாண்டிய கட்ட பொம்மனாக நடித்தபோது அவர் மேற்கொண்ட அதே பாணியை, இப்போது அவரே அத்தனை கஷ்டப்பட்டு, அத்தனை சிரமத்தோடு செய்ய மாட்டார். மாபெரும் கலைஞரான அவர், இப்போது வெகு எளிதான முறையில் அதே ரோலை நாம் நம்பி ஏற்கும்படி அநாயாசமாக நடித்துக்காட்ட முடியும். அப்போது நடிப்புக்குப் பல மூலிகைகள் கொண்ட கலவையைப் பெரிய குளிகை மாதிரி உருவாக்கித் தர வேண்டியிருந்தது. இப்போது காப்ஸ்யூல் வடிவத்துக்கு வந்துவிட்டது!''

''அழகன், த ள ப தி படங்களுக்குப் பிறகு தமிழில் நீங்கள் ஏன் அதிகம் நடிக்கவில்லை?''

''மலையாளப் படங்களே எனக்கு நி றை ய



உலகிலேயே அதிகமான மரியாதைத் தன்மை வாய்ந்த மொழி சீனமொழிதான். திருடர்களைக் கூட அவர்கள் கூரை மீது நடந்து செல்லும் கனவான்கள் என்றுதான் சொல்கிறார்கள்.

- சீனக் குட்டிக் கதைகள்
என்ற நூலிலிருந்து;
கே. ஏ. காளிமுத்து

இருக்கின்றன. தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரை நான் ஒரு கற்றுக்குட்டி. ஆனால் தமிழ்ப்படங்களில் நடிப்பதை நான் உண்மையில் ரொம்பவும் ரசித்தேன். அதி லும் பிரபல இயக்குநர்களின் படங்களில் நடிப்பதை என்ஜாய் பண்ணினேன். இப் போது கூட பாஸிலின் படம், பாலசந்தர் படம், மணிரத்தினத்தின் படம் என்று மூன்று தமிழ்ப்படங்கள் செய்கிறேன். இந்தி யில் இக்பால் துரானியின் 'தர்த்தி புத்ரா' படத்தில் ஜெயப்பிரதாவுடன் நடிக்கிறேன். தெலுங்கில் கே. விசுவநாத்தின் 'ஸ்வாதி கிரணம்' செய்தேன். எந்த மொழிப் பட மானாலும் என் சொந்தக் குரலில்தான் பேசு கிறேன். டப்பிங் குரல் கிடையாது!''

''உங்களுக்கு ரசிகர் மன்றங்கள் இருக் கிறதா?''

''மக்களுக்குச் சில நடிகர்கள் மீது ஒரு பிடிப்பு இருக்கிறது. அவர்கள் மீது தங்கள் அன்பைக் காட்ட ரசிகர் மன்றங்கள் அமைக் கிறார்கள். ஆனால் இங்கே தமிழ் நாட்டில் இருப்பது போல கேரளத்தில் இல்லை.''

வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு மென்று மென்று சுவாரசியமாக அதை ரசிக்கிறார் மம்முட்டி. புருவம் உயர்த்திப் புன்னகை செய்யும்போது, காந்தம் போன்ற விழிகளும் மலர்ச்சியில் புன்னகை செய்வது மாதிரி இருக்கின்றன.

சென்னை வாழ்க்கை அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ''சென்னை ஆர்ப்பாட் டம் இல்லாத அமைதியான நகரம்'' என் கிறார். ரஜினிகாந்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''தளபதி படப்பிடிப்பில் தாம் ஒரு சூப்பர் ஸ்டார் என்கிற பந்தாவே இல்லா மல் பழகினார். தளபதி படத்திற்குப் பிறகு என் நெருங்கிய நண்பராகிவிட்டார் அவர்!'' என்கிறார் மம்முட்டி.


மனைவி சுல்ஃபத், மகள் சுர்மி, மகன் துல்கர் ஆகியோருடன் இனிமையான வாழ்க்கை நடத்துகிறார். சுர்மியும், துல் கரும் அடையாறு 'சிஷ்யா' பள்ளியில் படிக் கிறார்களாம்....

ஷூட்டிங்குக்குத் தயாராக, ஒப்பனைக் கலைஞர் தாடியை ஒட்ட வைக்கக் காத் திருக்கிறார். அதே ஃபேமஸ் மம்முட்டி- புன்னகையுடன் எழுந்திருந்து கைகுலுக்கி, சிநேகத்துடன் நன்றி சொல்லி விடை கொடுக்கிறார்.

- சாருகேசி

அட்டை வண்ணப்படம் : யோகா

ஸ்டில்ஸ் உதவி : ஆனந்தன்



பாலத்துக்கு மரியாதை

சோழன் பஸ்ஸில் நாகூருக்குப் போனேன். பஸ், வாஞ்சூரைத் தாண்டி - ஆற்றுப் பாலத்தை நெருங்கியதும் கண்டக்டர் - ''எல்லோரும் பாலத் துக்கு மரியாதை செய்யுங்க...'' என் றார். உடனே - இருபுறமும் அமர்ந் திருந்த பிரயாணிகள் எழுந்து நின் றார்கள். எனக்கு வியப்பு! சுற்றுமுற் றும் பார்த்தேன். பஸ், பாலத்தைக் கடந்த போது - காற்றின் சுழற்சியில் - தரையிலிருந்து புழுதிகள் கிளம்பி - பஸ்ஸுக்குள் புகுந்து கொண்டிருந் தன. பிரயாணிகள் உட்கார்ந்திருந்தால் - கண் - காது - மூக்கு - அனைத்துப் பகுதிகளிலும் - தூசுகள் படிந்துவிடும். மையத்தில் எழுந்து நின்றுவிட்டால் அவ்வளவாய் புழுதி ஒட்டாதல்லவா? அதனால்தான் பஸ் நடத்துனர் பால மரியாதை என அறிவித்திருக்கிறார்!

- திட்டச்சேரி இபுறு இபுறாஹிம்

கைக்குழந்தைகளுக்குக் கருணை காட்டுங்கள்!

கைக்குழந்தைகளுக்கு ஆவின் பால்தான் சுகாதார மானது என்று டாக் டர்கள் கூறுகின்ற னர். டின் பால் விற் கும் விலையில் எவ் வளவு பேரால் வாங்க முடியும்? ஆனால் புதுக் கார்டு கொடுக்க மாட் டேன் என்கிறார் கள். பர்த் சர்ட்டிபி கேட் கொடுத்தால் எந்த 'பூத்'திலும் புதுக் கார்டு கொடுக்க வேண் டும் என்று அரசு சொல்லக் கூடாதா?



- ஆர். பார்வதி, சென்னை - 53.

நிலா மயக்கம்

15

அந்த 'ஆவா ஒன்னு...' என்னவாக இருக்க முடியும் என்ற சஸ்பென்ஸை சில வினாடிகளுக்குக் கூட தாங்க முடியாமல், தேவராஜ், பையனின் அம்மாவைப் பார்த்தான்.

''என்ன நிறுத்திட்டீங்க. சொல்ல நெனைச்சதைச் சொல்லிடுங்க,'' என்றான்.

''சொல்றேன்'' என்று பட்டுப் புடைவை அம்மா தொண்டையைச் செருமிக் கொண்டாள். வாயில் ஊறியிருந்த வெற்றிலை எச்சிலை வாசல் வரை சென்று துப்பி விட்டு, உதட்டோரம் வழியப் பார்த்த சிவப்புச் சாறை உள்ளங்கையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள்.

''யாராவது தியாகம் பண்ணாத்தானே, யாருக்காவது வாழ்வு கெடைக்கும்! ஏன்டா தனபாலு?''

''ஆமாம்மா.''

''அதுக்குன்னு தியாகம்னா காந்தி மாதிரி முக்காவேஷ்டியே போறும்னு நீங்க நெனைக்கக் கூடாது. ஏன் தனபாலு?''

''ஆமாம்மா.''

''பொண்ணு அம்சந்தான். அதுக்காக வெறுங்கைல முழம் போடறதுன்னா எப்படி? அதும் பேர்ல வீடு கீடு இல்ல. அதனால ஒரு மூணு லட்சமாவது கொடுத் 'தீங்கன்னா சின்னதா ஒரு ஃப்ளாட் வாங்கிக்கலாம். போக வர ஒரு காரு. உங்க பொண்ணு போட்டு மினுக்க ஒரு அம்பது பவுனு. அப்புறம் எங்க கௌரவத்துக்கு ஒரு வைர நெக்லஸ். ஏன்டா தனபாலு?''

''ஆமாம்மா.''

''போட்டு அனுப்பறதா இருந்தாச் சொல்லி அனுப்புங்க. கல்யாணத்தை அடுத்த முகூர்த்தத்திலேயே வச்சிக்கலாம்.''

''ஆமாம்மா.''

அவர்கள் புறப்பட்டுப் போன பின்பும் மாப்பிள்ளை பையனின் 'ஆமாம்மா' கல்யாணி வீட்டின் ஒவ்வொரு செங்கலிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

புவனா கல்யாணி வீட்டின் உள்ளறை ஒன்றில் முடங்கினாள். தேவராஜ் தனக்கு அவ்வளவாக அறிமுகமில்லாத கல்யாணி வீட்டில், உரிமையுடன் கோபிக்கக் கூட முடியாமல் விட்டத்தை வெறித்துப் பார்த்தான். தன் வீட்டு அந்தரங்கமெல்லாம் அடுத்த வீட்டில் அம்பலமாவதை அவன் மனது செரிக்க முடியாமல் தவித்தது. கோபிக்கவும் முடியவில்லை. பாட்டி எடுத்துச் சொன்ன பிறகு, உண்மையைச் சொல்லாமல் புவனாவை யார் வீட்டுக்கும் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அனுப்பவும் மனம் வரவில்லை. பாட்டிக் குத்திக் காட்டியது நியாயம்தானே? தனது ஆண்மை நந்தினியையே சந்தேகப்பட்ட பேடித்தனமான ஆண்மைதானே? நாகரிகத் தட்டில் ஏறி நிற்பவன், நாசூக்கானவன் என்று தன்னைப் பற்றி ஒரு மதிப்பீடு வைத்துக் கொண்டு கம்பீரமாக வளைய வந்தபோதிலும், மனத்தின் மூலையில் எங்கோ ஒளிந்திருந்த ஓர் அழுக்குத் திட்டு வெளிவந்து விட்டது தானே?

எவ்வளவு பூசி மெழுகினாலும், மூடி மறைத்தாலும் ஆண்கள் அழுக்கானவர்கள் தான். இறுக்கமான சூழ்நிலை நிலவியது தெரிந்தது. நந்தினி குற்ற உணர்வுடன் தவித்தது தெரிந்தது. அந்தக் குற்ற உணர்வே அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கும். அவளுக்கு அந்தக் குற்ற உணர்வை ஏற்றி விட்டதே தான்தான். அதைக் களைய வேண்டும். சூழ்நிலையை லேசாக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

''எங்க, உங்க ஹஸ்பெண்ட் இன்னும் வரலை?'' என்று கல்யாணியைப் பார்த்துக் கேட்டான்.

''ஸாரி. உங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன். அவர் அவசரமா ஹைதராபாத் போயிட்டார். போன் பண்ணாரு. அவர் கம்பெனி இன்ஸ்டால் பண்ண மெஷின்ல ஏதோ ரிப்பேராம். உங்ககிட்ட ஸாரி சொல்லச் சொன்னாரு.''

''எப்ப வருவாரு?''

''ரிப்பேர் பண்ற வரைக்கும் ஹைதராபாத்தான். ரெண்டு நாள்லயும் வருவாரு. ஒரு வாரமும் ஆகும்.''

வேற்று ஆள் வீட்டில் யாரும் இருக்கிற மாதிரி தெரியவில்லை. கல்யாணியும் அவள் கணவனும் மட்டும்தான். அப்படி இருக்கும் போது வீட்டிற்கு ஒரு விருந்தாளிக்

குடும்பம் வந்திருக்கும் போது, மனைவியைத் தனியாக விட்டு விட்டு ஹைதராபாத் வரை அவள் கணவன் போயிருக்கிறான். பரஸ்பர நம்பிக்கை. ச்சே. நந்தினியைப் போய் ஏன் அப்படி கேட்கத் தோன்றியது?

கல்யாணியிடம் அதற்கு மேல் என்ன பேசுவதென்று தெரியவில்லை. கல்யாணி சமையலில் தீவிரமாயிருந்தாள். அன்றைக்கு இரவே பெங்களூருக்கு ஏதாவது ஒரு பஸ் பிடித்துப் போய் விடுவது என்று அவன் தீர்மானித்திருந்தான். அதனால் கல்யாணி அவசர சமையலில் ஈடுபட்டிருந்தாள்.

''நந்தினி, உன் ஃப்ரெண்டுக்கு சமையல்ல கொஞ்சம் ஹெல்ப் பண்றதுதானே?'' என்று கேட்டான் தேவராஜ்.

''எதுக்கு? அவ பாட்டுக்குக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டுமே. நைட் ட்ரெய்ன்ல வந்த களைப்பு இருக்கும். திருப்பியும் ராத்திரியே பஸ் பயணம். நாளைக்குப் போலாம்னாலும் நீங்க ஒத்துக்க மாட்டேங்க நீங்க'' என்றாள் கல்யாணி.

அவளுக்கும் நந்தினியைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது. நந்தினியின் குடும்பம் தன் வீட்டிற்கு வந்து முகத்தில் கரி பூசிக் கொண்டிருக்கிறது. தேவராஜ் அடங்கின எரிமலையாகத் தென்படுகிறான். எப்போது வெடிக்கப் போகிறானோ?

நந்தினியின் வருகை பற்றி அருண்குமாருக்குத் தெரிவித்திருந்தாள். அருண்குமார் சந்தோஷப்பட்டு, வீட்டுக்கு வந்தாலும் வருவேன் என்கிற மாதிரி சொல்லியிருக்கிறான்.

இந்த நேரத்தில் அவன் வந்தால் தேவராஜ் என்ன நினைத்துக் கொள்வான், எப்படி நடந்து கொள்வான் என்றே அவளுக்குப் புரியவில்லை.

நறுக்கிய கறிகாயை ஒரு தட்டில் எடுத்துப் போட்டுக் கொண்டு, சமையலறைப் பக்கம் அவள் நடந்த போது, அழைப்பு மணி அழைத்தது.

நந்தினி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

அருண்குமார்.

''வாங்க...'' என்றாள் நந்தினி திகைப்புடன். அருண்குமாரை அந்த நேரத்தில் அவள் எதிர்பார்க்கவில்லை என்பது அவள் குரலிலேயே வெளிப்பட்டது.

''வாங்க இளம்புயல்'' என்றாள் கல்யாணி.

''ஹலோ'' என்றான் தேவராஜ். ''இளம்புயலா... அப்படீன்னா?''

''சார் இன்னிக்குப் பெரிய டைரக்டர். அஞ்சி படம் பண்ணியிருக்கு. இவரோட மொதல் படம் நனைந்த ஓவியம் சக்கைப் போடு போடுது. இவரோட ரசிகர்கள்தான் இவருக்கு இளம்புயல் இயக்குனர்னு பட்டம் கொடுத்திருக்காங்க...''

அருண்குமார் சங்கோஜத்துடன் புன்னகை செய்தான்.

''என்ன சாப்பிடறீங்க இளம்புயல்?''

''பழையபடி அருண்குமார்னு கூப்பிடுங்க. நான் பதில் சொல்றேன்.''

''இளம்புயல்னு கூப்ட்டா பிடிக்கலையா? நல்லாத்தானே இருக்கு?''

''நாளைக்கே இந்தப் பட்டம் போயிடலாம். அது எதுக்கு. எனக்கு சங்கோஜமா இருக்கு. நீங்க என்னை அன்னியப்படுத்தற மாதிரி இருக்கு.''



''அப்படீல்லாம் இல்ல அருண்குமார். சொல்லுங்க. சமையல் முடிஞ்சாச்சி. நம்ம வீட்ல சாப்பிடறீங்களா?''

''எல்லாரும் பேசிக்கிட்டே சாப்பிட லாம் இல்லியா?''

''ஓயெஸ்.''

சாப்பாட்டு மேஜை அமர்க்களப் பட்டது. புவனா கூட சகஜ நிலைக்குத் திரும்பி இருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். எல்லோரையும் உட்கார வைத்து அவள்தான் பரிமாறினாள்.

அருண்குமார் ரசித்துச் சாப்பிட்டான். அவ்வப்போது அவன் கண்கள் அவனை அறியாமலேயே நந்தினியின் பக்கம் திரும்பின. நந்தினியின் முகத்தில் வாட்டம் தெரிந்தது. அவளுடைய முகவாட்டம் அருண்குமாரின் உற்சாகத்தை அவ்வப் போது உறிஞ்சி எடுத்துக் கொண்டிருந்தது.

''நீங்கல்லாம் உங்க சொந்த வேலையா இங்கே வந்திருக்கீங்கன்னு மிஸஸ் கல்யாணிதான் சொன்னாங்க'' என்றான் அருண்குமார்.

தேவராஜ் நடந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்பாமல், சாப்பாட்டிலேயே கவனமாக இருந்தான்.

''நான் உங்களையெல்லாம் பார்க்கத் தான் வந்தேன்'' என்றான் அருண்குமார் விடாமல்.

நந்தினி நிமிர்ந்தாள். அவள் பார்வை கல்யாணியைத் தொட்டு மீண்டது. என்னை தர்மசங்கடத்தில் மாட்டி விடப் பார்க்கி றாயே கல்யாணி என்ற குற்றச்சாட்டு அதில் இருந்தது.

''படம் எப்படிப் போகுது?'' என்று ஒரு மரியாதைக்காக தேவராஜ் கேட்டான்.

''உங்களைப் படத்துக்குக் கூட்டிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''நாங்களா... இன்னிக்கா? ஊருக்குப் போகலாம்னு... நெனைச்சிட்டிருக்கோம்'' என்றான் தேவராஜ் தயங்கி.

''நாளைக்குப் போங்களேன். மெட் றாஸ் வரைக்கும் வந்து என் படத்தைப் பாக்காமப் போனா என்னை அவமதிக்கிற மாதிரி. அதுவும் மிஸஸ் நந்தினி காஸ்ட்யூம் டிஸைன் பண்ணியிருக்கிற படம். அவங்க எப்படி டிஸைன் பண்ணியிருக்காங்கன்னு இதுவரைக்கும் நீங்க பாத்திருக்க மாட்டீங்க. இந்தப் படத்தைப் பாத்தா அவங்களோட திறமை என்னன்னு தெரிஞ்சிக்குவீங்க. ஏற்கெனவே மார்க்கட்ல நனைந்த ஓவியம் மிடி, நனைந்த ஓவியம் ஷர்ட்னு ரெடிமேட் டிரஸ் எல்லாம் ஏகப்பட்ட டிமாண்ட்லே வித்துக்கிட்டிருக்கு.''

''ஈஸிட்?'' என்றான் தேவராஜ் ஆச்சரி யத்துடன்.

''நான் பெங்களூருக்கே வந்து கூப்ட்டேன். நீங்க வரலை. இங்கயும் வர மாட்டேன்னு தட்டிக் கழிக்கப் பாக்காதீங்க ப்ளீஸ்.''

''போய்ட்டு வரலாம் நந்தினி'' என்றான் தேவராஜ்.

''கல்யாணி நீங்களும் வாங்க. மூணாவது தடவை பாக்கறது தண்டனை யாத்தான் இருக்கும். உங்க ஃப்ரண்டுக்காக வரக் கூடாதா?''

பெங்களூர் பயணத்தை ரத்து செய்து விட்டு, அருண்குமாருடன் அத்தனை பேரும் சினிமாவுக்குப் புறப்பட்டார்கள்.

நனைந்த ஓவியம் வெளியாகி இருந்த தியேட்டரில் அந்த இரவுக் காட்சிக்கு கூட்டம் மிதிபட்டுக் * கொண்டிருந்தது. இரவுக் காட்சிக்கு இவ்வளவு பெண்களா வருகிறார்கள் என்று தேவராஜ் பிரமித்தான்.

தியேட்டர் மானேஜர் அருண்குமாரை அவனுடைய காருக்கே வந்து வரவேற்றார். அடையாளம் கண்டுகொண்ட ஒரு கூட்டம்



''மனுஷனுக்கு இப்படி ஒரு கஷ்டம் வரக் கூடாது...''

''என்ன புலம்பறே?''

''மனைவியும், சின்ன வீடும் ஒரே சமயத்தில் மாங்காய் கேட்கிறாங்க...!''

- சி. நாச்சிமுத்து

''இவர் பிழைக்கத் தெரிஞ் சவர் சார்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''அவர் பொண்ணு கல்யா ணத்தை நாலு கம்பெனிங்களை ஸ்பான்சர் பண்ண வைச்சிட் டார்!''

- ராதா வாசுதேவன்



அருண்குமாரை ஆட்டோகிராஃபிற்காக மொய்த்தது.

பால்கனியில் அவர்களுக்காக என்று ஒதுக்கப்பட்டிருந்த பாக்ஸில் உட்கார்ந்து கொண்டார்கள்.

நனைந்த ஓவியம் என்ற பெயரைத் திரையில் பார்த்தவுடன் கைதட்டல். இயக்கு னர் பெயரைத் திரையில் காண்பித்தவுடன் கைதட்டல்.

இடைவேளை வரை அசைவின்றித் திரையிலேயே கவனம் செலுத்திப் படத் தைப் பார்த்தார்கள். நடுவில் அருண்குமார் ஒருமுறை எழுந்து வெளியே போய் வந்தான்.

இடைவேளையில் அவர்கள் வெளியே வந்தார்கள். பால்கனி சுவரில் கண்ணாடிச் சட்டத்திற்குப் பின்னால் நனைந்த ஓவியத் தைப் பற்றி பத்திரிகைகள் எழுதியிருந்ததை கிளிப் செய்திருந்தார்கள்.

அத்தனை பத்திரிகைகளும் பாராட்டி யிருந்தன.

படத்தில் வந்த ஒரு காட்சி பற்றிச் சந்தே கம் கேட்கலாமென்று பார்த்தால் அருண் குமாரைக் காணவில்லை. இடை வேளைக்கு முன் வெளியே போனவன் இன்னும் திரும்பவில்லை.

நந்தினியும் ஒவ்வொரு பத்திரிகையின் விமர்சனத்தையும் ஆவலுடன் படித்தாள். அருண்குமாருக்கு இளம்புயல் இயக்குனர் என்ற அடைமொழியை ஒரு பத்திரிகைதான் தந்திருந்தது. நந்தினிக்கு உள்ளூர தானே பட்டம் வாங்கிய மாதிரி பெருமிதமாக இருந்தது.

இடைவேளைக்குப் பின் படம் தொடங்கியவுடன் அருண்குமார் மறுபடி அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டான். பின்னாலேயே கட்லெட், காஃபி.

படம் முடிவடைந்த போது தேவராஜ் பிரமித்துப் போய் அருண்குமாரின் கை களைப் பற்றிக் குலுக்கோ குலுக்கென்று குலுக்கினான்.

''ஒண்டர்ஃபுல் அருண்குமார். படம் இவ்வளவு நல்லா வந்திருக்கும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏனோதா னோன்னு வந்த என்னை ஆணியடிச்சி உட்கார வச்ச மாதிரி பண்ணிட்டீங்க.''

''தாங்க்ஸ்'' என்றான். ''உங்க மிஸஸ் பண்ணியிருக்கற காஸ்ட்யூம் டிஸைனெல் லாம் எப்படி வந்திருக்கு?''


''அதெல்லாம் கண்ல தெரியலை அருண்குமார். காரெக்டர்ஸ்தான் நின் னுது.''

''நான் உங்களைக் கல்யாணி வீட்லயே ட்ராப் பண்ணிடறேன்'' என்றான் அருண் குமார். நந்தினி படத்தைப் பற்றி ஏதாவது அபிப்ராயம் சொல்லுவாள் என்று எதிர் பார்த்தான். நந்தினி இறுக மூடின உதடு களுடன் இருந்தாள். அவள் முகத்தில் மலர்ச்சியே இல்லை. படம் அவளுக்குப் பிடிக்கவில்லையா?

உம்மணாமூஞ்சி என்றும் முன்கோபி என்றும் நினைத்துக் கொண்டிருந்த தேவ ராஜே இவ்வளவு வெளிப்படையாகப் பேசியது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நந்தினியின் மௌனமும், அவள் முகத்துச் சோகமும் அவனுக்கு வேதனை யாக இருந்தது. அவளாகச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். அவளுடைய அபிப்ராயத்தை வலியக் கேட்பது என்பது புகை போட்டு பழுக்க வைக்கிற வாழைப் பழம் போல.

'ம். நல்லாயிருக்கே. குட். படம் பிரமா தம்.'

வெறும் உதட்டு வார்த்தைகளாக இருக் கும்.



''மாப்பிளே, நீங்க போலீஸ்காரரா இருக்கலாம். அதுக் காக நீங்க வேலை செய்யிற ஊரில் பத்தாயிரம் ரூபாய் மாமூல் குடுக்கிற மாதிரி ரெண்டு கேடிகள் ஏற்பாடு பண்ணித் தரணும்னு சொல்லுவது கொஞ் சம் கூட நல்லா இல்லே!''

- ராஜூராயன்

கார் கல்யாணியின் வீட்டு வாசல் வரை மௌனமாகச் சென்று நின்றது. நந்தினி கடைசியாக இறங்கினாள்.

''ஒரு நிமிஷம் நந்தினி'' என்றான் அருண்குமார் மெல்லிய குரலில்.

தேவராஜ் உள்ளே போய் விட்டான். புவனாவும் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள். கதவைத் திறந்து விட்டுக் காத் திருந்த கல்யாணி, அருண்குமாரின் பேச் சொலி கேட்டு அவனையும், நந்தினியையும் ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஏன் சோகமா இருக்கீங்க? வாழ்க்கை சுமையா இருக்கா?'' என்று கேட்டான் அருண்குமார்.

''ம்?'' என்று ஏறிட்டு அவனைப் பார்த்த நந்தினி விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

(தொடரும்)



வரதட்சணை வாங்காமல்...

'சே! ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தோம்? வெளியே சொல்லப் பெருமையாக இருக்கு. ஆனால் நடைமுறையில்?' கார்த்தியின் மனம் புலம்பியது.

தன்னை விடச் சாதாரணமானவனெல்லாம் ஹீரோ ஹோண்டாவில் போகிறான். கேட்டால், 'பெண் வீட்டில் கொடுத்தது. உன்னைப் போல நாங்களும் என்ன ஏமாளியா?' என்று கூறிச் சிரிக்கிறார்கள்.

'அட! இந்த ரகுபதி! சாதாரணமான கிளார்க். அவனுக்கு முப்பது சவரன், பைக் , இருபதாயிரம் ரொக்கம். இதே கம்பெனியில் இன்ஜினியர் நான். வெளியே சொன்னா வெட்கம்!'

தெரியாத்தனமாகக் கொஞ்சம் இலக்கிய சம்பந்தம். கொஞ்சம் முற்போக்குச் சிந்தனை. இரண்டு தங்கைகளைக் கட்டிக் கொடுத்த பொழுது பட்ட வேதனை. அதனால் வரதட்சணை வேண்டாம், எளிமையான திருமணம் போதும் என்று கூறி விட்டான். அதன் விளைவு?

''என்னடா சாப்பாடு? ஒன்னும் சரியில்லையே....''

''மாலை கொஞ்சம் பெரிய சைசா வாங்கி இருக்கக் கூடாது?''

''என்னது? வீடியோ கூட இல்லையா?''

''சே! சே! உன் கஞ்சத் தனத்தைக் கல்யாணத்துலையா காட்டுறது?''

''ஒன்னும் இல்லாதவன் எல்லாம் ஒகோன்னு பண்றான்...''

- திருமணத்திற்கு வந்திருந்தவர்களின் விமர்சனம் காதில் விழுந்து சங்கடப்படுத்தியது. தவறான ஒரு முடிவை எடுத்து விட்டோமோ? முதல் முறையாக மறுபரிசீலனை செய்தான் கார்த்தி.

இரண்டு நாள் கழித்து வீட்டிற்கு வந்திருந்த மானேஜர் தணிகாசலம் மீண்டும் அவனைச் சிந்திக்க வைத்தார்.

''சாரிப்பா! கல்யாண சமயத்தில கம்பெனி விஷயமா டூர்ல இருந்தேன். அதனால வரமுடியலை!''

''பரவாயில்ல சார்! அதான் வீடு தேடி வந்திருக்கீங்களே!''

''கல்யாணம் ரொம்ப சிம்பிளா இருந்ததாமே!''

''ஆமா சார்! பெண் வீட்டில் கொஞ்சம் சிரமம்.''

''ம்! அதையும் கேள்விப்பட்டேன். பொண்ணு சொந்தமா?''

''அதெல்லாம் இல்லை சார்.''

''பின்ன ஏன் இப்படி?''

''புரியலையே சார்.....''

''எத்தனை பவுன் போட்டாங்க.''

''கமலா எத்தனை பவுன்?''

கார்த்தி திரும்பிக் கதவோரம் சாய்ந்தபடி இருந்த தன் புது மனைவியைப் பார்த்தான்.

''எட்டு.''

மானேஜர் தணிகாசலம் அவனைச் சற்று வியப்புடன் பார்த்தார்.

''பரவாயில்லையே!''

கார்த்தியின் மனத்திற்குள் எரிச்சல் மூண்டது. வரதட்சணை வாங்காதது வியப்பிற்கு உரிய ஒன்றாகி விட்டதை எண்ணி வருத்தமும் எழுந்தது. கூடவே தவறு செய்து விட்டோமோ? என்ற உறுத்தல் தலை தூக்கியது.

பவுன் பஸ்ஸில் நெருக்கியடித்து ஏறிப் பயணம் செய்த போதெல்லாம் எரிச்சல் வந்தது. தன்னைக் கடந்து செல்லும் எல்லா டூவீலரும் மாமனார் வீட்டுச் சீதனமாகத் தோன்றின.

அன்று வழக்கத்திற்கு விரோதமாக அரைமணி நேரம் தாமதமாக கம்பெனிக்கு வந்தான் கார்த்தி.

வந்தவுடன் மானேஜரிடமிருந்து அழைப்பு வந்தது. 'ம்! ஒரு டூவிலர் இருந்திருந்தால் நேரத்திற்கு வந்திருக்கலாம். இன்று விழித்த முகமே சரியில்லை. வழக்கம் போல வரதட்சணை தராத மனைவியின் முகம்தான். யாரைச் சொல்லி என்ன பயன்? தவறான முடிவை எடுத்தவன் நான்தானே?' என்று நினைத்தபடி மானேஜர் அறைக்குள் நுழைந்தான்.

''வாங்க மிஸ்டர் கார்த்தி. உட்காருங்க'' என்று வழக்கத்திற்கு மாறாக வரவேற்றார் மானேஜர்.

அவர் எதிரே அமர்ந்தான்.

''உங்களை அஸிஸ்டெண்ட் மானேஜரா பிரமோட் பண்ணியிருக்காங்க.''

கார்த்திக்கால் நம்ப முடியவில்லை.

அஸிஸ்டெண்ட் மானேஜர் என்றால் கம்பெனி வீடு, கார், அதிக சம்பளம்.

''சார் எப்படி? எனக்கு மேலே மூணு சீனியர்ஸ் இருக்காங்க...''

''இருக்கட்டுமே. உன் சின்ஸியாரிட்டி எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம். ஆனாலும் எல்லாரை விடவும் நீ ஒரு படி மேலே நின்னது உன் கல்யாண விஷயத்துலதான். இன்னைக்கு வரதட்சணை ஒரு ஃபாஷன். இவ்வளவு அதிகமா வாங்கினேன்னு சொல்லிக்கிறது பெருமை. முதுகெலும்பு இல்லாத பசங்க. நானும் என்னோட ஒரே பொண்ணுக்கு இன்னைக்கி வரை கொடுத்துக் கொடுத்து அலுத்தவன்தான். ஆனா கட்டின மனைவிக்கு எத்தனை பவுன் போட்டாங்கன்னு கூட தெரியாம கல்யாணம் பண்ணிக்கிட்ட பாரு, அப்பவே நான் தீர்மானிச்சிட்டேன். உன் உழைப்பு மேலே உள்ள தன்னம்பிக்கைதான் உன்னை அப்படி நடந்துக்கத் தூண்டியிருக்கு. அடுத்தவன் காசுக்கு ஆசைப் படாத நல்ல எண்ணம் உனக்கு இருக்கு.....''

தணிகாசலம் பேசிக் கொண்டே போனார். அவர் எடுத்த சரியான முடிவை எண்ணித் தனது இனிய மனைவியை மானசீகமாக மனத்திற்குள் வணங்கினான்.

நெய்வேலி நெடுஞ்செழியன்

ஊருவிட்டு ஊருபோறவரே...!

'அடிக்கடி மாற்றலாகும் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, டிரான்ஸ்பர் வந்து விட்டால் ஒரே டென்ஷன்தான்! அத்தனை சாமான்களையும் மூட்டை கட்டி, எடுத்துக் கொண்டு போய்ப் புதிய இடத்தில் செட்டில் ஆவதற்குள் போதும் போதும் என்றாகி விடும். அந்தச் சமயத்தில் உபயோகமாகும்படியாகச் சில டிப்ஸ்களைத் தருகிறோம்.



● எந்தெந்தச் சாமான்களை உங்களுடன் எடுத்துச் செல்வது, அவசியமில்லாதவற்றையெல்லாம் விற்று விட்டுப் போவது என்று முதலில் முடிவு செய்யுங்கள்.

● மேஜை, கட்டில், நாற்காலி, ஃபிரிஜ் போன்றவற்றை வாங்கி, விற்பதை விட வாடகைக்கு எடுப்பது எளிது.

● நல்ல உறுதியான அட்டை அல்லது மரப் பெட்டிகள் செய்து தயாராய் வைத்திருங்கள். வெவ்வேறு அளவுகளில் பெட்டிகள் இருப்பது சௌகரியம்.

● புறப்பட இரண்டு வாரங்கள் இருக்கும்போதே, பாக்கிங் வேலைகளை ஆரம்பித்து விடுங்கள்.

● இப்போது, இதுபோன்ற பாக்கிங் வேலைகளைச் செய்ய சில நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் உதவியை நாடலாம். என்றாலும், சில பர்சனல் சாமான்களை நீங்களே அதிக கவனத்துடன் பாக் பண்ணுவது நல்லது.

● உள்ளே வைக்க வேண்டியவற்றை எல்லாம் வைத்துக் கட்டியபின், பலிச் சென்று ஒரு பட்டியல் எழுதிப் பெட்டி மீது ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். அல்லது பெட்டிகளுக்கு வரிசை எண் கொடுத்து விட்டு, எந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்று டைரியில் குறித்துக் கொள்ளுங்கள்.

● கண்ணாடி, மற்றும் பீங்கான் பொருட்களை, துணிகளில் சுற்றி, ஆடாமல் அசங்காமல் டைட்டாகப் பாக் பண்ணுங்கள்.

● சிறு சிறு பெட்டிகளாய் நிறைய எடுத்துச் செல்வதை விட, பெரிய மற்றும் மீடியம் சைஸ் பெட்டிகளைப் பயன்படுத்தினால், பிரயாணத்தின் போது கண்காணிக்க எளிதாய் இருக்கும்.

● ஃபைல்கள், தஸ்தாவேஜுகள், ஆல்பம் முதலியவற்றை பிளாஸ்டிக் கவருக்குள் போட்டு, தப்பித் தவறி ஈரம் ஆனாலும் பாதிக்காதவாறு பாதுகாப்பாய் வையுங்கள்.

● ஷோகேஸ், டிரஸ்ஸிங் டேபிள் முதலியவற்றை பாக் செய்யும் போது, முடிந்தால் கண்ணாடிகளைப் பிரித்தெடுத்து, பத்திரமாய் பாக் செய்யுங்கள்.

● பீரோ, ப்ரிஜ் போன்றவற்றைத் துப்புரவாய்க் காலி செய்து விட்டு, மேலே பழைய புடைவை, போர்வை, வைக்கோல் போன்றவற்றால் மூடிக் கட்டி எடுத்துச் செல்வதன் மூலம் கீறல் விழாமல் பாதுகாக்கலாம்.

● சமையலறையின் அத்தியாவசியப் பொருட்களைக் கடைசியாய்ப் பாக் செய்வதன் மூலம், உங்கள் சமையல், சாப்பாடு கடைசி வரை பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

● புறப்படும் முன் வீடு முழுக்க நோட்டம் விட்டு, எதையும் விட்டு விட்டுப் போகவில்லை என்று ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள்.

● வீட்டை காலி செய்யும் முன்பே தண்ணீர் வரி, மின்சார பில், டெலிபோன் பில் முதலியவற்றைக் கட்டி விடுங்கள்.

● காஸ் ஏஜென்ஸியில் சிலிண்டரைத் திருப்பித் தந்து, புதிய இடத்தில், சிலிண்டர் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்தை ஞாபகமாய்ப் பெற்றுக் கொள்ளுங்கள்.

● பேப்பர் போடுபவரிடம் பேப்பரைப் போட வேண்டாம் என்று கூறி பில் செட்டில் பண்ணி விடுங்கள்.

● புதிய முகவரியை தபால் ஆபீஸ், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்குத் தெரிவித்து விடுங்கள்.

● அக்கம்பக்கத்தில் புதிய முகவரியைக் கொடுத்து யாராவது வந்து விசாரித்தால் தரும்படி சொல்லுங்கள்.

● குழந்தைகளுக்குப் பள்ளியிலிருந்து டி.சி. போன்றவற்றை வாங்கிச் செல்ல மறந்து விடாதீர்கள்.

● எல்லாவற்றையும் மூட்டை கட்டி கொண்டிருப்பானேன்? உங்களுக்குத் தேவையற்ற, விற்கவும் முடியாத பொருட்கள் இருக்கும். அவற்றை அக்கம் பக்கத்தாருக்கும் நண்பர்களுக்கும் கொடுத்து உங்கள் ஞாபகமாய் வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அது அயலூர் சென்ற பிறகும் உங்கள் நட்பு தொடர உதவிகரமாய் இருக்கும்.

நன்றி : Helpful hints

தொகுப்பு : பாரதி மௌலி

◆ ஸ்ரீமதி எம்.எஸ். அவர்களின் தேனினும் இனிய குரலில் ஒலிக்கும் இசைப் பாடல்கள் அடங்கிய கேஸட் ஒன்றினை கல்கி பொன் விழா மலர் வாங்கும் ஒவ்வொரு வாசகருக்கும் அன்பளிப்பாக வழங்க ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம்.எஸ். தம்பதி இசைவு தந்துள்ளனர்.



◆ ஆதி சங்கரர், அருணகிரிநாதர், ராஜாஜி, மகாகவி பாரதியார், அமரர் கல்கி முதலிய பலரது அற்புதமான பாடல்கள் தொகுக்கப்பட்டு, கல்கி பொன் விழாவுக்காகவே இந்தப் பிரத்யேக காஸெட் கிராமஃபோன் கம்பெனி (HMV) யாரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிகிறது!

◆ ஒரு மணி நேரம் நீடிக்கும் இந்த தேவகானத்துக்கு விலை மதிக்கவா முடியும்! இந்த ஒப்புயர்வற்ற காஸெட் உங்களுக்குப் பொன்விழா மலரோடு இலவசமாக அல்லவா வருகிறது! உங்களைப் போன்ற பாக்கியசாலி வேறு யார்!



◆ சர்க்கரைப் பந்தலான கல்கி பொன்விழா மலரில்தான் எத்தனை கலை அழகுகள்! சிந்தனைச் சிற்பிகளின் பொறுக்குமணியான சிறுகதைகள், குறுநாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், பயண அனுபவங்கள், அரசியல், சினிமா, நுண்கலைகள் என்று எதையும் விட்டுவைக்க வில்லை.

◆ கைதேர்ந்த ஓவியர்கள், புகைப்படக்காரர்களின் வண்ணமயமான படங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

◆ தெய்வீகத் திருவுருவங்கள் நெஞ்சை நிறைக்கின்றன.

ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதுங்கள்.

கல்கி பொன் விழா மலர்

விலை ரூ. 50/- ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ. 8/-

மானேஜர், கல்கி, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097.

சிவகாமியின் சபதம்

பதினாறாம் அத்தியாயம்

அரண்மனைப் பூங்கா

திருநாவுக்கரசரின் மடத்தில் குலச்சிறையாரை மங்கையர்க்கரசி பார்த்து ஏறக்குறைய ஒரு வாரம் ஆயிற்று. இந்த ஒரு வாரம் செம்பியன் வளவனுடைய மகளுக்கு ஒரு யுகமாகச் சென்றது. பாண்டிய குமாரர் இன்று வருவார்; நாளை வருவார் என்று அரண்மனையில் பேச்சாயிருந்தது. நெடுமாற பாண்டியன் வரவைக் குறித்து மங்கையர்க்கரசிக்கு எவ்வித ஆவலும் ஏற்படவில்லையென்றாலும், பாண்டியனோடு அன்று தான் மடத்தில் பார்த்த வாலிபனும் வருவான், அவனிடம் அவனுடைய சிநேகிதனைப் பற்றி விசாரிக்கலாம் என்ற ஆவல் அவள் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் கார் காலத்தில் விடா மழை பெய்து கொண்டிருந்த ஒருநாள் மாலை நடந்த சம்பவமும் மங்கையர்க்கரசியின் மனத்தில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அன்று இந்தப் பாண்டிய வாலிபனும் இவனுடைய சிநேகிதன் ஒருவனும் மழையில் சொட்ட நனைந்த வண்ணம் செம்பியன் வளவனின் அரண்மனை வாசலில் வந்து நின்று இரவு தங்க இடம் கேட்டார்கள். விருந்தோம்புவதில் இணையற்ற செம்பியன் வளவனும் அவர்களை ஆதரவுடன் வரவேற்று உபசரித்தான். வந்த இளைஞர்கள் இருவரும் தங்களை வர்த்தகர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். சிரிக்கச் சிரிக்கக் குதூகலமாய்ப் பேசினார்கள். அப்புராதன சோழ அரண்மனையில் அன்று வெகுநேரம் வரை ஒரே கோலாகலமாயிருந்தது.

மங்கையர்க்கரசியின் தந்தை அவளிடம் இரகசியமாக, "இவர்கள் வர்த்தகர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள் அல்லவா? வெறும் பொய்! நான் சொல்கிறேன், கேள்! இவர்கள் மாறுவேடம் பூண்ட பெரிய குலத்து இராஜகுமாரர்கள்!" என்று சொன்னார். இது மங்கையர்க்கரசிக்கும் மகிழ்ச்சி தந்தது. ஏனெனில், அந்த இளைஞர்களிலே ஒருவன் தன்னுடைய உள்ளத்தை எப்படியோ மெள்ள மெள்ளக் கவர்ந்து கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள்.

மறுநாள் உதயமானதும் இளைஞர் இருவரும் பிரயாணமாயினர். ஆனால், போவதற்கு முன்னால் அவர்களில் ஒருவன், அதாவது குலச்சிறையின் சிநேகிதன், "மீண்டும் ஒருநாள் திரும்பி வருவோம்" என்று உறுதி கூறியதோடு, மங்கையர்க்கரசியிடம் நயன பாஷையில் அந்தரங்கமாகவும் சில விஷயங்களைச் சொன்னான்.

இந்தச் சம்பவத்தைப் பற்றிச் சில நாள் வரையில் தந்தையும் மகளும் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு வெறுங் கனவு என்று எண்ணி மறந்தார்கள்.

அப்போது மங்கையர்க்கரசியின் மனங் கவர்ந்த அதே சுந்தர புருஷன்தான் இப்போது சில நாளாக அவளுடைய பயங்கரக் கனவுகளிலே தோன்றிக் கொண்டிருந்தவன். எனவே, தாய் தந்தையின் பாதுகாப்பற்ற அந்த அநாதைப் பெண் இப்போது பெரிதும் பரபரப்புக் கொண்டிருந்ததில் வியப்பு ஒன்றுமில்லையல்லவா?

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒருநாள் காஞ்சி அரண்மனை அல்லோலகல்லோலப் பட்டது. நெடுமாற பாண்டியன் அவ

னுடைய பரிவாரங்களுடன் காஞ்சிக்கு வந்து விட்டதாக மங்கையர்க்கரசி அறிந்தாள்.

வானமாதேவியின் நடுமாளிகையில் நெடுமாறன் தங்கியிருப்பதாகவும், அவனுக்கு இன்னும் உடம்பு பூரணமாகக் குணமாகவில்லையென்றும் பேசிக் கொண்டார்கள்.

ஆனால், குலச்சிறையைத் தனிமையில் சந்தித்து விசாரிக்க வேண்டுமென்னும் மங்கையர்க்கரசியின் மனோரதம் நிறைவேறும் என்பதாக மட்டும் காணப்படவில்லை.

புவனமகாதேவி தினந்தோறும் சிவபூஜை செய்த பிறகு தன் மருமகள் வானமாதேவிக்குப் பிரசாதம் அனுப்புவதுண்டு. மங்கையர்க்கரசி தானே பிரசாதம் எடுத்துக் கொண்டு போவதாகச் சொன்னாள். அம்மாளிகையில் இருக்கும் போது மங்கையர்க்கரசியின் கண்கள் நாற்புறமும் சுழன்று சுழன்று தேடியும் அந்த வாலிபன் காணப்படவில்லை.

ஒருநாள் மனத்துணிவை வரவழைத்துக் கொண்டு புவனமகாதேவியையே கேட்டாள். ''அம்மா! அன்று சைவத் திருமடத்தில் ஓர் இளைஞரைப் பார்த்தோமே? அவர் பாண்டிய குமாரரோடு வந்திருப்பதாகத் தெரியவில்லையே?'' என்றாள்.

அதற்குப் புவனமகாதேவி, ''அதை ஏன் கேட்கிறாய், குழந்தாய்! பாண்டிய குமாரன் நிலைமை ரொம்பவும் கவலைக்கிடமாயிருக்கிறது...'' என்பதற்குள், ''அடடா! அப்படியா? அவருக்கு உடம்பு இன்னும் குணமாகவில்லையா? அதனால்தான் வானமாதேவி எப்போதும் ஒரே கவலையாயிருக்கிறார் போலிருக்கிறது. முன்னேயெல்லாம் நான் சிவபூஜைப் பிரசாதம் கொண்டு போனால் முகமலர்ச்சியுடன் வாங்கிக் கொண்டு என்னிடமும் அன்பாக வார்த்தையாடுவார். இப்போதெல்லாம் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை!'' என்றாள்.

''ஆமாம், குழந்தாய்! வானமாதேவி கவலைப்படுவதற்கு ரொம்பவும் காரணமிருக்கிறது. நெடுமாறனுக்கு உடம்பு இப்போது சௌகரியமாகி விட்டது. ஆனால், அவனுடைய மனத்தைச் சமணர்கள் ரொம்பவும் கெடுத்திருக்கிறார்கள். அவனோடு பாண்டிய நாட்டின் புகழ்பெற்ற வீரமறவர் சைனியம் வந்திருக்கிறது. அந்தச் சைனியத்தைத் திருக்கழுக்குன்றத்தில் தங்கச் செய்திருக்கிறார்கள். இலங்கை இளவரசனும் நாம் அன்று பார்த்த குலச்சிறை என்ற வாலிபனும் திருக்கழுக்குன்றத்திலேதான் இருக்கிறார்களாம். குழந்தாய்! விபரீதம் ஒன்றும் நேராதிருக்க வேண்டுமே என்று அம்பிகைபாகனை அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். என்னைக் காட்டிலும் வானமாதேவியின் தலையில் பெரிய பாரம் சுமந்திருக்கிறது. பாவம்! அவள் ஒரு வாரமாய்த் தூங்கவில்லையாம்!'' என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

பாண்டிய குமாரனுடைய வரவினால் என்ன விபரீதம் ஏற்படக்கூடும், எதற்காக எல்லோரும் இவ்வளவு கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதெல்லாம் மங்கையர்க்கரசிக்குத் தெளிவாக விளங்கவில்லை. அதைப் பற்றி அவ்வளவாக அவள் கவனம் செலுத்தவும் இல்லை. அவளுக்குத் தன்னுடைய கவலையே பெரிதாக இருந்தது. குலச்சிறை என்று பெயர் சொன்ன வாலிபனை ஒருவேளை தான் பார்க்க முடியாமலே போய் விடுமோ, அவனுடைய சிநேகிதனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள முடியாமற் போய் விடுமோ என்ற ஏக்கம் அவள் உள்ளத்தில் குடிகொண்டு, வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் செய்தது.

இத்தகைய மனோநிலைமையில் ஒரு நாள் மாலை நேரத்தில் அரண்மனைப் பூங்காவனத்தில் புவனமகாதேவியின் சிவபூஜைக்காக மங்கையர்க்கரசி மலர் பறித்துக் கொண்டிருந்தாள். பன்னீர் மந்தாரை, பொன்னரளி, செவ்வரளி முதலிய செடிகளிலிருந்தும், சம்பங்கி, சாதி, மல்லிகைக் கொடிகளிலிருந்தும் அவளுடைய மலர்க் கரங்கள் புஷ்பங்களைப் பறித்துப் பூக்கூடையில் போட்டுக் கொண்டிருந்தன. ஆனால், அவளுடைய உள்ளமோ இரண்டு வருஷங்களுக்கு முன்பு விடாமழை பெய்த ஒருநாள் சாயங்காலம் தன் தந்தையின் புராதன மாளிகையைத் தேடி வந்த இளைஞர்களைப் பற்றியும் அவர்களில் ஒருவன் தன் உள்ளத்தைக் கொண்டு போனதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தது. 'ஒரு நாள் உன்னைத் தேடிக் கொண்டு மறுபடியும் வருவேன்' என்று அவன் கூறிய வாக்குறுதி, நீரின் மேல் எழுதிய எழுத்துத்தான் போலும்! 'இந்த உலகில் எனக்கு ஒரே துணையாக இருந்த தந்தையும் போர்க்களத்துக்குப் போய் விட்டார். இனிமேல் என் கதி என்ன ஆகப் போகிறது?' என்று எண்ணிய போது மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

செடி கொடிகளின் வழியாக யாரோ புகுந்து வருவது போன்ற சலசலப்புச் சப்தம்

அமரர் கல்கி

கேட்டு, மங்கையர்க்கரசி சப்தம் வந்த திசையை நோக்கினாள். ஆம்; யாரோ ஒரு மனிதர் அந்த அடர்ந்த பூங்காவின் செடிகளி னூடே நுழைந்து வந்து கொண்டிருந்தார். ஆனால், அவருடைய முகம் தெரிய வில்லை.

அந்தப்புரத்துப் பூந்தோட்டத்தில் அவ் விதம் அலட்சியமாக வரும் மனிதர் யாரா யிருக்கும்? மாமல்ல சக்கரவர்த்தியைத் தவிர வேறு ஆண்மக்கள் யாரும் அந்தத் தோட் டத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று மங்கையர்க்கரசி கேள்விப்பட்டிருந்தாள். பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி அந்தப் பூங்காவனத்தைப் பராமரிப்பதற்குக் கூட ஸ்திரீகளே நியமிக்கப்படிருந்தார்கள். அப் படியிருக்க, இவ்வளவு துணிச்சலாக அந்தத் தோட்டத்தில் நுழைந்து வரும் அந்நிய மனிதர் யார்?

யாராயிருந்தாலும் இருக்கட்டும், நாம் திரும்பிப் புவன மகாதேவியின் அரண் மனைக்குப் போய் விடலாம் என்ற எண்ணத் தோடு மங்கையர்க்கரசி சட்டென்று திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அதே சமயத்தில், ''யார் அம்மா, அது? இந்தப் பூந்தோட்டத்துக்குள் தெரியாத் தனமாகப் புகுந்து விட்டேன். திரும்பிப் போக வழி தெரியவில்லை. வானமாதேவி யின் அரண்மனைக்கு எப்படிப் போக வேண் டும்? கொஞ்சம் வழி சொல்லு, அம்மா!'' என்று யாரோ சொல்லுவது கேட்டது.

அவ்விதம் சொல்லிய குரலானது மங்கையர்க்கரசியின் தேகம் முழுவதையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அவ ளுடைய காலடியிலிருந்த தரை திடீரென்று நழுவிப் போவது போல் இருந்தது. அந்தப் பூங்காவனத்திலுள்ள செடி கொடிகள் எல்லாம் அவளைச் சுற்றி வருவதாகத் தோன் றியது. பக்கத்திலிருந்த மந்தார மரத்தின் கிளையைப் பிடித்துக் கொண்டு கீழே விழா மல் சமாளித்தாள். அவளுடைய இடக் கை யில் பிடித்திருந்த வெள்ளிப் பூங்கூடை மட்டும் நழுவிக் கீழே விழ, அதிலிருந்து பலநிறப் புஷ்பங்கள் தரையில் சிதறின.

''ஓஹோ! பயந்து போய் விட்டாயா என்ன? ஏதும் தவறாக எண்ணிக் கொள் ளாதே, அம்மா! உண்மையாகவே வழி தெரி யாததனால்தான் கேட்டேன். நான் இந்த ஊர்க்காரன் அல்ல; பாண்டிய நாட்டான். வானமாதேவியின் மாளிகை எந்தத் திசையி லிருக்கிறது என்று சொன்னால் போதும்; போய் விடுகிறேன். இந்தத் தோட்டத்தில் வேறு யாருமே காணப்படாமையால் உன் னைக் கேட்கும்படி நேர்ந்தது. நீ யார் என்று கூட எனக்குத் தெரியாது'' என்று அந்த மனி தன் சொல்லி வந்த போது மங்கையர்க் கரசிக்குப் பூரண தைரியம் வந்து விட்டது. சட்டென்று தான் பிடித்திருந்த செடியின் கிளையை விட்டு விட்டுத் திரும்பிப் பார்த் தாள்.

அவள் நினைத்தது தவறாகப் போக வில்லை.

ஆம், அவன்தான்!

அன்றொரு நாள் விடாமழை பெய்த இரவு தன் தந்தையின் வீட்டுக்கு அதிதியாக வந்து தன் உள்ளங்கவர்ந்து சென்ற கள்வன்தான்!

மங்கையர்க்கரசியின் அதிசயத்தைக் காட்டிலும் பாண்டிய குமாரனுடைய அதிச யம் பன்மடங்கு அதிகமாயிருந்தது.

''ஆ'' என்ற சப்தத்தைத் தவிர வேறொரு வார்த்தையும் அவன் வாயி லிருந்து வரவில்லை.

பேச நா எழாமல் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் அடங்கா அதிசயத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டு கைதேர்ந்த சிற்பி அமைத்த கற்சிலைகளைப் போல் சற்று நேரம் நின்று கொண்டிருந் தார்கள்.

கடைசியாக, பாண்டிய குமாரன், உணர்ச்சியாலும் வியப்பாலும் கம்மிய குர லில், ''பெண்ணே! உண்மையாக நீதானா! செம்பியன் வளவன் மகள் மங்கை யர்க்கரசிதானா? அல்லது இதுவும் என் சித்தப்பிரமையா?'' என்றான்.

மங்கையர்க்கரசி மறுமொழி சொல்ல விரும்பினாள். ஆனால் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வரவில்லை. கண்ணி லிருந்து கண்ணீர்தான் வந்தது.

உடனே பாண்டிய குமாரன் அளவில் லாத ஆர்வத்துடன் அவள் அருகில் வந்து, ''பெண்ணே! இது என்ன? ஏன், உன் கண்களில் கண்ணீர் பெருகுகிறது? ஏதேனும் நான் பெரிய பிசகு செய்து விட்டேனா? என்ன செய்து விட்டேன்?'' என்று பரபரப் புடன் வினவினான்.

மங்கையர்க்கரசி, விம்மலுக்கிடையில், ''ஐயா! அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த மங்கை யர்க்கரசி நான்தான்!'' என்றாள்.

''ஏன் இப்படி மனம் நொந்து பேசு கிறாய்? ஏன் இப்படிக் கண்ணீர் விடுகிறாய்? கொஞ்சமும் எதிர்பாராத விதமாய் உன்னை இங்கே பார்த்ததும், எனக்குச் சொல்லி முடியாத சந்தோஷம் உண்டாயிற்று. பிறவிக் குருடன் கண் பெற்றது போன்ற மகிழ்ச்சி யடைந்தேன். கடல் கடைந்த தேவர்கள் அமிர்தம் எழக் கண்டதும் அடைந்த ஆனந் தத்தை நானும் அடைந்தேன். எவ்வளவோ மனக் குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந் திருந்தவன் உன்னைக் கண்டதும் அவை யெல்லாம் மறந்து ஒருகணம் எல்லையற்ற குதூகலம் அடைந்தேன்! ஆனால், உன்னு டைய விம்மலும் கண்ணீரும் அந்த

மகிழ்ச்சியையெல்லாம் போக்கி என்னை மறுபடியும் சோகக் கடலில் மூழ்க அடித்து விட்டது. உனக்கு என்ன துயரம் நேர்ந்தது? ஏன் உன்னைத் துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக் கொள்கிறாய்? உன் துயரத் துக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் நான் எந்த விதத்திலாவது காரணம் ஆனேனா? ஏற்கெனவே நான் பெரிய மனத் தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாகியிருக்கிறேன். அவ்வளவுக்கும் மேலே உனக்கு எவ்விதத்திலாவது துன்பம் கொடுத்திருப்பேனானால், இந்த வாழ்க்கைதான் என்னத்திற்கு? உயிரையே விட்டு விடலாம் என்று தோன்றுகிறது.''

இவ்வாறு நெடுமாறன் உண்மையான உருக்கத்தோடு சொல்லி வந்த போது, பேதைப் பெண்ணாகிய மங்கையர்க்கரசி பலமுறை குறுக்கிட்டுப் பேச விரும்பினாள். என்றாலும், அதற்கு வேண்டிய தைரியம் இல்லாதபடியால் விம்மிக் கொண்டே சும்மா நிற்க வேண்டியதாயிற்று. கடைசியில், பாண்டிய குமாரன் உயிர் விடுவதைப் பற்றிப் பேசியதும் அவளுக்கு எப்படியோ பேசுவதற்குத் தைரியம் ஏற்பட்டு, ''ஐயா! தங்களால் எனக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை!'' என்றாள்.

''அப்படியானால் என்னைப் பார்த்ததும் நீ கண்ணீர் விடுவதற்கும் விம்மி அழுவதற்கும் காரணம் என்ன? இரண்டு வருஷ காலமாக உன்னை மறுபடி எப்போது பார்க் கப் போகிறோம் என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் உன்னைச் சந்திக்கும் போது சந்தோஷத்தினால் உன் முகம் எப்படிச் சூரியனைக் கண்ட செந் தாமரையைப் போல் மலரும் என்று கற்பனை செய்து சந்தோஷப்பட்டுக் கொண் டிருந்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக என்னைப் பார்த்ததும் உன் முகம் அஸ்தமன அரக்கனைக் கண்ட தாமரையைப் போல்



அருள்வாக்கு

நமஸ்காரம் செய்வதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பார்கள். தண்டம் என்றால் கழி அல்லது கோல் என்று அர்த்தம். கையில் பிடித்திருக்கிற ஒரு கோலை விட்டு விட்டால், அது அப்படியே தடாலென்று கீழே விழுந்து விடும். அப்படியே இந்தச் சரீரத்தை நமதல்ல; இது ஈசுவரனுடையது என்கிற எண்ணத்துடன் கீழே போடுவதுதான் நமஸ்காரம். நம் சரீரம் வெறும் மரக்கோல்தான். உதவாத பொருளை 'அது தண்டமாகி விட்டது' என்கிறோம். அப்படி தண்டமான வஸ்து தான் நம் சரீரம். இதைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி வைத்து ஆட்டுகிற சக்தி ஈசுவரன் கொடுத்ததே ஆகும். இந்த உடம்பை ஏதோ நாமே தாங்கி நடத்துகிறோம் என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு, அதாவது அகங்காரத்தை விலக்கி விட்டு அதற்கு அடையாளமாக, ஈசுவரன் முன் இந்தச் சரீரத்தைக் கீழே போட வேண்டும். அதுதான் தண்டம் சமர்ப்பிப்பது. ஜ்வரம் வந்தால் நம் சரீரத்தால் நிற்கவும் நடக்கவும் முடிகிறதில்லை. இந்த ஜன்மாவே பெரிய ஜ்வரமாக வந்திருக்கிறது. இதிலிருந்து நம்மைக் கடைத்தேற்றுவதற்காக, நமக்கு வந்திருக்கிற சம்ஸார ஜ்வரத்தைப் புரிந்து கொண்டு, அதற்கு அடையாளமாக ஸ்வாமியின் முன் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

'நாம் செய்கிறோம்' என்கிற எண்ணம் போய் விட்டால், அதுவே ஸதா கால நமஸ்காரம். அந்த அநுபவம் நமக்குச் சித்திக்காத போதிலும் ஈசுவர

வாடிக் குவிந்தது. உன் கண்களும் கண்ணீர் பெருக்கின. ஏன் அப்படி?''

பாண்டிய குமாரனுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் மங்கையர்க்கரசி, ''ஐயா! தாங்கள் சொன்னது உண்மைதானா? என்னைத் தாங்கள் அடியோடு மறந்து விடவில்லையா? என்னை மறுபடியும் சந்திக்கும் உத்தேசம் தங்களுக்கு இருந்ததா?'' என்று கேட்டாள்.

''அதைப் பற்றி உனக்கு ஏன் சந்தேகம் ஏற்பட்டது? மீண்டும் உன்னைச் சந்திப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஓயாமல் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. மதுரையிலிருந்து இந்த நகரத்துக்கு வரும் வழியில் அன்றொரு நாள் விடாமழை பெய்த இரவில் எனக்கு அடைக்கலம் தந்த செம்பியன் வளவன் மாளிகையை அடைந்தேன். அந்த மாளிகை பூட்டிக் கிடந்ததைப் பார்த்ததும் எனக்குண்டான ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. உலகமே இருளடைந்து விட்டதாக எனக்குத் தோன்றியது. அப்புறம் குலச்சிறை உன்னை இந்த நகரில் பார்த்ததாகச் சொன்ன பிறகு கொஞ்சம் மன அமைதி உண்டாயிற்று'' என்றான் நெடுமாறன்.

''ஆகா! அவர் வந்து சொன்னாரா? அப்படியானால், தாங்களும் பாண்டிய குமாரரிடம் உத்தியோகத்தில் இருக்கிறீர்களா? என்று மங்கையர்க்கரசி கேட்டாள்.

நெடுமாறனுடைய முகத்தில் ஒருகணம் மர்மமான புன்னகை தோன்றி மறைந்தது. தான் இன்னான் என்பதை மங்கையர்க்கரசி இன்னமும் தெரிந்து கொள்ளாமலே பேசுகிறாள் என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். அந்தத் தவறுதலை இன்னமும் நீடிக்கச் செய்வதில் அவனுக்குப் பிரியம் ஏற்பட்டது.

''ஆம்! பாண்டிய குமாரரிடந்தான் நானும் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறேன். அதைப் பற்றி உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?'' என்று கேட்டான்.

மங்கையர்க்கரசி, ''எனக்கு என்ன ஆட்சேபம்? தாங்கள் நல்ல பதவியில் இருந்தால் எனக்குச் சந்தோஷந்தானே? தங்களுடைய சிநேகிதரைத் திருநாவுக்கரசர் மடத்தில் பார்த்த போது என் மனத்திலும் அம்மாதிரி எண்ணம் உண்டாயிற்று. ஆனால், அதையெல்லாம் பற்றி 'இனி என்ன? என் குலதெய்வம் தங்களையேதான் என் முன் கொண்டு வந்து விட்டதே?'' என்று ஆர்வம் பொங்கக் கூறினாள்.

''ஆனாலும் உன் தெய்வம் என்னை உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்திய போது நீ சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லையே! உன்னைத் துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் விட்டாயே?'' என்று நெடுமாறன் விஷமப் புன்னகையுடன் கேட்டான்.

''சுவாமி! எதிர்பாராதபோது தங்களைத் திடீரென்று பார்த்ததில் பேசத் தெரியாமல் திகைத்து நின்றேன். தாங்களும் என்னைத் தெரிந்து கொள்ளாதது போல் ஒரு மாதிரியாகப் பேசவே, எனக்குக் கண்ணீர் வந்து விட்டது! என்னுடைய பேதைமையைப் பற்றிச் சொல்லிக் காட்டாதீர்கள்!'' என்று மங்கையர்க்கரசி கூறிய போது அவளுடைய கண்களில் மறுபடியும் கண்ணீர் துளித்தது.



சந்நிதியிலாவது அப்படி பாவித்து வணங்கித் தரையோடு தரையாக, எளிமையாகக் கிடக்க வேண்டும் - இங்கே வணங்கி விட்டால், அப்புறம் வெளியே எங்கேயும் வணங்காமல் இ ரு க் க லா ம்.

'பொறுப்பை உன்னிடமே பூரணமாகப் போட்டேன்' என்பதற்கு அடையாளம் சரீரத்தைத் தரையில் போடுவது. கொஞ்சம் பொறுப்பை நமக்கு என்று வைத்துக் கொண்டால் கூட ஸ்வாமி தம் பங்கைக் குறைத்துக் கொண்டு விடுவார். இதில் அரைகுறைக்கு இடமே இல்லை. நம்முடைய நல்லது பொல்லாதது அவ்வளவும் அவர் விட்டபடி என்று சகல பொறுப்பையும் அவரிடம் தள்ளுவதற்கு வெளி அடையாளமாக உடம்பைத் தரையில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம் பாரம் அனைத்தையும் கிருபாசமுத்திரமான ஸ்வாமியே ஏற்று அநுக்கிரகிப்பார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

''என் கண்ணே! என்னை மன்னித்து விடு! இந்த மூர்க்கன் உன் கண்களில் மறுபடியும் கண்ணீர் வரச் செய்தேனே?'' என்று சொல்லிக் கொண்டு நெடுமாறன் தன் அங்கவஸ்திரத்தின் தலைப்பினால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான்.

சற்றுப் பொறுத்து மங்கையர்க்கரசி, ''சுவாமி! வெகு நேரம் ஆகி விட்டது. பூஜை நேரம் நெருங்கி விட்டது. நான் போக வேண்டும்'' என்றாள்.

''கட்டாயம் போகத்தான் வேண்டுமா?'' என்று நெடுமாறன் விருப்பமில்லாத குரலில் கேட்டான்.

''ஆம், போக வேண்டும், புவனமகாதேவி காத்துக் கொண்டிருப்பார்கள். ஒருவேளை நானே வரவில்லையேயென்று தாதியை அனுப்பினாலும் அனுப்புவார்கள்.''

''அப்படியானால் நாளைய தினம் இதே நேரத்தில் இங்கு நீ வர வேண்டும்; தவறக் கூடாது. மேலே நம்முடைய காரியங்களைப் பற்றி ஒன்றுமே பேசவில்லையே?'' என்றான் நெடுமாறன்.

மங்கையர்க்கரசி திடுக்கிட்டவளாய் நெடுமாறனை நிமிர்ந்து பார்த்து, ''பாண்டிய குமாரர் வாதாபி யுத்தத்துக்குப் போனால் நீங்களும் அவரோடு போவீர்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாம், போக வேண்டியதுதானே? ஏன் கேட்கிறாய்? நான் போருக்குப் போவது உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்றான் நெடுமாறன்.

''எனக்குப் பிடிக்கத்தான் இல்லை. யுத்தம், சண்டை என்பதே எனக்குப் பிடிக்கவில்லை. எதற்காக மனிதர்கள் ஒருவரையொருவர் துவேஷிக்க வேண்டும்? ஏன் ஒருவரையொருவர் கொன்று கொண்டு சாக வேண்டும்? ஏன் எ ல் லா ரு ம் சந்தோஷமாகவும் சிநேகமாகவும் இருக்கக் கூடாது?'' என்றாள் மங்கையர்க்கரசி.


நெடுமாறன் மீண்டும் மர்மமான புன்னகை புரிந்து, ''யுத்தத்தைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயத்தைப் பாண்டிய குமாரரிடம் சொல்லிப் பார்க்கிறேன். ஒருவேளை அ வ ரு டை ய மனம் மாறினாலும் மாறலாம். எல்லாவற்றிற்கும் நாளை மாலை இதே நேரத்துக்கு இங்கு நீ கட்டாயம் வரவேண்டும்; வருவாயல்லவா?'' என்றான்.

''அவசியம் வருகிறேன். இப்போது ரொம்ப நேரமாகி விட்டது. உடனே போக வேண்டும்'' என்று கூறி மங்கையர்க்கரசி கீழே கிடந்த புஷ்பக் கூடையை எடுப்பதற்குக் குனிந்தாள்.

நெடுமாறனும் குனிந்து தரையில் சிதறிக் கிடந்த புஷ்பங்களைக் கூடையில் எடுத்துப் போட்டு, மங்கையர்க்கரசியின் கையில் அதைக் கொடுத்தான். அப்படிக் கொடுக்கும் போது பயபக்தியுடன் பகவானுடைய நிருமால்யத்தைக் கண்ணில் ஒற்றிக் கொள்வது போல் அவளுடைய மலர்க் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

மெய்சிலிர்ப்பு அடைந்த மங்கையர்க்கரசி பலவந்தமாகத் தன் கையை நெடுமாறனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு புவனமகாதேவியின் அரண்மனையை நோக்கி விரைந்து நடந்தாள்.

(தொடரும்)



கனவு தேசம்

பஸ் நின்றதும் தணிகாசலம் இறங்கினான். சிறிது நேரம் அப்படியே நின்றான். கண்களைச் சுற்றிலும் அலைய விட்டான். மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து செல்லும் சாலை அகலப்படுத்தப்பட்டு, தார் மினு மினுப்புடன் இருந்தது. முன்பு கப்பிச் சாலையாக இருந்தது. சாலையோரத்தில் சிமிண்ட் தொட்டியின் பாதுகாப்பில் வேப்பங்கன்றுகள். டீக் கடை முத்தண்ணன், கடையிலிருந்து கத்தினார் : ''அட! பட்டாளத்துத் தம்பியா...?''

''ஆமாண்ணே... சௌக்யமா...?''

''சௌக்யம்தான் தம்பி... வர்றீங்கன்னு அம்மா சொல்லிச்சி... நீங்க சௌக்யமா....?''

''சௌக்யம்தாண்ணே.... வர்றேன்...'' தணிகாசலம் சிரித்துக் கொண்டே நடந்தான்.

பிறந்த மண்ணைப் பார்த்ததும் மனத்தில் சந்தோஷம் ஏறியிருந்தது. மூன்று வருடத்தில் செம்மங்குடி நிறைய மாறியிருப்பதாகத் தெரிந்தது. டூரிங் டாக்கீஸ் ஒன்று முளைத்திருந்தது. டீக் கடையை ஒட்டி ஹோட்டல் ஒன்று தெரிந்தது. சைக்கிள் கம்பெனி இருந்த இடத்தில் 'வெங்கடேஸ்வரா கிளினிக்... டாக்டர் ஸ்ரீதரன்....,' பரவாயில்லையே! தணிகாசலம் சந்தோஷமாக நடந்தான்.

வேப்ப மரம் தாண்டியதும், எப்படி போகலாம் என்று யோசித்தான். பாலத்தைத் தாண்டி வயலில் இறங்கிக் குறுக்கே போனால் செட்டியார் தோப்பு வழியாகச் சீக்கிரம் வீட்டுக்குப் போய் விடலாம்.

வேண்டாம். மூன்று வருடத்திற்குப் பிறகு வருகிறேன். நேர் வழியாகவே போவோம். ஊர்க்காரர்களைப் பார்த்த மாதிரி இருக்கும் என்று நினைத்தவன், நேர் வழியிலேயே நடந்தான்.

பெரும்பாலான வீடுகளில் எப்போதும் வாசலில் உட்கார்ந்திருப்பவர்கள் வெயில் காரணமாக உள்ளேயிருந்தனர்.

முத்துசாமி சாலையில் கிடந்த பார வண்டி ஓரமாகச் சாய்ந்து கொண்டு நின்ற கோலமே அவன் போதையில் இருக்கிறான் என்று புரிந்தது. சுயநிலையில் இருந்திருந்தால் இந்நேரம் தணிகாசலத்தைப் பார்த்து ஆர்ப்பாட்டம் பண்ணியிருப்பான்.

''முத்துசாமி....'' அவன் அருகே சென்று சத்தமாகக் கூப்பிட்டான்.

முத்துசாமி கஷ்டப்பட்டு கண்களைத் திறந்து, தணிகாசலத்தை அடையாளம் கண்டுகொண்டு, கைகளால் அவன் முகத்தைத் தடவி ''வா'' என்றான்.

''இந்தப் பழக்கத்தை விடமாட்டியே நீ... பேசாம உள்ள போய்ப் படு'' என்றவன் சூட்கேஸை வைத்துவிட்டு அவனை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றான். முத்துசாமி ஏதோ சொல்ல முயல... ''பேசாம படுத்துத் தூங்கு... சாயங்காலம் பேசிக்கலாம்.''

வீட்டு வாசலில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் படுக்க வைத்து விட்டு சூட்கேஸை எடுத்துக் கொண்டு நடந்தான். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் கிராமத்திற்கு விடிவு காலமே கிடையாது. ஏன் இப்படி குடித்துத் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறார்கள்?

வீட்டுவாசலில் நின்றிருந்த அம்மா தணிகாசலத்தைப் பார்த்ததும், மகனைப் பார்த்த உற்சாகத்தில் வயதை மறந்து, ''தம்பி...'' என்று [illegible]திக் கொண்டே ஓடி வந்து அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். ''எப்படிப்பா இருக்க...? எப்ப வர்றேன்னு கடுதாசி போட்டிருந்தா பஸ்ஸுக்கு வந்து நின்னிருப்பேனே.... ஏம்ப்பா இளைச்சு போயிட்ட...?''

தொண்டை கமறக் கேட்ட அம்மாவைத் தணிகாசலம் அணைத்தபடி வீட்டுக்குள் நுழைந்தான்.

சூட்கேஸை வைத்துவிட்டுச் சட்டையைக் கழற்றினான்.

''எப்படிம்மா இருக்க....?''

''எனக்கென்ன ராசா... ஒண்டிக்கட்டை.... உன்னையே நினைச்சுக்கிட்டு... ஏதோ உசிரு ஒடம்புல ஒட்டிக்கிட்டு இருக்கு... ஏன் ராசா போன மாசம் என்னவோ கயவாளிப் பசங்க நம்ம நாட்டுக்குள்ள துப்பாக்கியோட நுழையப் போறதா பெரிய அண்ணன் சொல்லிச்சி... பத்து நாள் பக்குபக்குன்னு... சோறு தண்ணி இறங்கல... என்னப்பா ஆச்சி....?''

''அதெல்லாம் யாரும் வரல.... வந்தவனுங்க அவனுக்குள்ளேயே அடிச்சிக்கிட்டு ஓடிப் போயிட்டானுவோ.... பயப்படாதேன்னு நான்தான் உனக்குக் கடுதாசி எழுதியிருந்தேன்ல... தேச சேவைம்மா... நான்தான் உன் கிட்ட முன்னமேயே சொல்லியிருக்கேன்ல.... எனக்கு என்ன ஆனாலும் அதுக்காக நீ கவலைப் படக்கூடாதுன்னு... நாட்டுக்காக உயிர் துறக்கிற பாக்கியம் எல்

திருவாரூர் பாபு

லோருக்கும் கிடைச்சிடாதும்மா...''

''அச்சானியமா பேசாதப்பா... என்னவோ போ... உன்னைப் பார்த்ததும் தான் எனக்கு நிம்மதியா இருக்கு. காப்பித் தண்ணி கலக்கவா...?'' என்றபோது உள்ளே நுழைந்தான் கதிர்.

''ஏய் தணிகாசலம்...'' என்றபடி அவனை கட்டிப்பிடித்துக் கொண்டான். இரண்டு பேரும் ஆத்ம நண்பர்கள். சிறு வயது முதலே ஒன்றாகப் படித்தவர்கள்.

''எப்படிடா இருக்க...?'' கதிர் கேட்டான்.

''நல்லா இருக்கேன்டா....''

''எவ்வளவு நாள் லீவு?''

''மூணு வருஷமா வரலேல்ல... ஆறு மாசம் இருப்பேன்.''

''அப்பாடா!'' என்றவன், ''இரு மாயவரம் போயிட்டு வந்தேன்.... நீ வந்திருக்கிற விஷயத்தை முத்தண்ணன் சொல்லிச்சி... அப்படியே புகுந்துட்டேன்... வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்..''

வயிறு முட்ட கருவாட்டுக் குழம்பை ஒரு பிடி பிடித்துவிட்டுக் கயிற்று கட்டிலை விரித்துப் படுத்தான் தணிகாசலம். மூன்று நாட்கள் தொடர்ச்சியான ரயில் பயணம் உடம்பை அசத்த... லேசாகக் கண்ணயர்ந்த போதுதான்... அந்த சத்தம்... யாரோ சாலையில் படபடப்பாய் ஓடும் சத்தம். உடன் விருட்டென்று எழுந்து வேகமாக வாசலுக்கு வந்தான். எல்லோரும் கூட்டமாய் ஓடிக் கொண்டிருந்தனர்.

தணிகாசலம் கத்தினான் : ''எலே... தங்கராசு... என்னடா... எங்க ஓடற...?'' தங்கராசு நின்று மூச்சிரைத்துவிட்டு, திணறித் திணறிப் பேசினான். ''விஷ சாராயத்தைக் குடிச்சி.. கிராமத்து ஆளுங்க அரசமரத்தடியில விழுந்து கிடக்காங்க... முத்துசாமி செத்துப் போயிட்டு....'' அவன் கத்திக் கொண்டே ஓட, அதிர்ந்த தணிகாசலம் பனியனோடு அரச மரத்தடியை நோக்கி ஓடினான்.

ஒரே சத்தம். அழுகை. பரபரப்பு. அரசமரத்தடியில் மயங்கிக் கிடந்த அத்தனை பேரையும் டிராக்டரில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். தணிகாசலம் அவர்களோடு சேர்ந்து கொண்டான். தணிகாசலத்திற்கு ஒன்று புரிந்தது. மூன்று பேருக்கு உயிரில்லை.

டிராக்டர் மயிலாடுதுறையை நோக்கிப் புறப்பட்டது.

ஆஸ்பத்திரி வாசலில் டிராக்டர் நின்றது. அவசர அவசரமாக அனைவரையும் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். டாக்டரை எதிர்பார்த்தவர்கள் நர்ஸ் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தனர்.

''டாக்டர்ஸ் ஸ்டிரைக்... வாசல்ல உண்ணாவிரதம் இருக்காங்களே... கவனிக்கலியா...?''

தணிகாசலத்திற்கு தூக்கி வாரிப்போட்டது.

''விஷ சாராயம் சிஸ்டர்... உடனே டிரீட்மெண்ட் கொடுக்கணும்... தே ஆர் டையிங்...''

''ஏற்கெனவே அந்த பேருக்கு உயிரில்லை ஸார்...'' நர்ஸ் சொன்னதைக் கேட்டு தணிகாசலம் திடுக்கிட்டான். ஊரிலிருந்து வந்த பெண்கள் ''ஓ''வென்று அலற, ரகளையாகியது ஆஸ்பத்திரி.

தணிகாசலம் வாசலுக்கு ஓடி வந்தான். எதிரே ஷாமியானா அமைத்து புகைத்துக் கொண்டிருந்த டாக்டர்களை நெருங்கினான். தலைவர் மாதிரி முன்னால் உட்கார்ந்திருந்தவரிடம் கெஞ்சினான். ''ஸார்... ப்ளீஸ்... உங்க ஸ்டிரைக்கை நாளைக்கு வச்சிக்குங்க... ஏற்கெனவே அந்த பேரு செத்துப் போயிட்டாங்க... மத்தவங்களையாவது காப்பாத்துங்க ப்ளீஸ்....''

டாக்டர் நிதானமாகச் சொன்னார் : ''ஸ்டிரைக் இங்க மட்டுமில்ல... தமிழ்நாடு முழுதும்... நாங்க வர மாட்டோம். எங்க முக்கியத்துவம் அரசாங்கத்துக்குத் தெரிய வேணாம்? மெடிக்கல் ஸ்டுடண்ட் மேல போலீஸை ஏவி விட்டா என்ன நடக்கும்னு புரிய வேணாம்.? நாங்க கண்டுக்காம இருந்தா இன்னிக்கு ஸ்டூடண்ட்ஸ்... நாளைக்கு நாங்க... தகுந்த நடவடிக்கை எடுக்கிறவரைக்கும் ஆஸ்பத்திரி உள்ள நுழைய மாட்டோம்.''

தணிகாசலம் கெஞ்சினான் : ''உங்க கோரிக்கை நியாயமாவே இருக்கலாம்... அதை அரசாங்கத்துக்குப் புரிய வைக்கிறதுக்கு இது சந்தர்ப்பம் இல்ல ஸார்... விலை மதிக்க முடியாத உயிர்கள்.. போயிட்டாத் திரும்பாது டாக்டர் ஸார். நீங்க தாமதிக்கிற ஒவ்வொரு விநாடியும்... ஆபத்து ஸார் ப்ளீஸ்...''

''யாருய்யா கள்ளச் சாராயத்தைக் குடிக்கச் சொன்னா.... சாகட்டும். அப்பயாவது புத்தி வரட்டும். பத்துப் பேர் செத்தாத்தான் அரசாங்கத்துக்கு டாக்டர்களோட அருமை தெரியும்.''

அலட்சியமான டாக்டரின் பேச்சைக் கேட்டு ஆத்திரத்தின் உச்சிக்குப் போனான் தணிகாசலம்.

''டேய்... ஏழைங்க உயிருன்னா... அவ்வளவு இளப்பமாடா உங்களுக்கு... உன் அப்பன் ஆத்தான்னா இத மாதிரி பேசுவியாடா....'' என்று டாக்டரின் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான். மற்ற டாக்டர்கள் தணிகாசலத்தைப் பிடித்துத் தள்ள... முறுக்கேறியிருந்த இராணுவப் பயிற்சி பெற்ற உடம்பு. தணிகாசலம் டாக்டர்களைப் பந்தாடத் தொடங்கினான். அப்போதுதான் வந்திறங்கிய போலீஸ் கும்பலாய்த் தணிகா



சென்னை ஸ்ரீ V. சுப்ரமண்யத்தின் குமாரி சௌபாக்கியவதி சரஸ்வதிக்கும், காமாட்சிபுரம் ஸ்ரீ சேதுராமன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி S. நாகராஜனுக்கும் 18.6.92 வியாழக்கிழமை அன்று கும்பகோணத்தில் வேத கோஷங்கள் முழங்க வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!!

சலத்தைப் பிடித்து இழுத்து அவனை ஜீப் பில் ஏற்றினர்.

பலமுறை போலீஸிடம் அடிவாங்கிய ரௌடிகள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திப் பழிவாங்கத் தயாராயினர். கலவ ரத்தை உண்டு பண்ணத் தி ட் ட மி ட் டு போலீஸை நோக்கிக் கல்லெறிய... பின்னந் தலையில் நச் என்று அடி வாங்கிய எஸ். பிக்கு பிரஷர் எகிறியது... ''சார்ஜ்...'' என்றார். அடுத்த விநாடி... போலீஸ் ஆங்காரமாய் லட்டியைச் சுழற்ற... பட் பட் என்று மண்டை திறந்தது. ஆத் திரமிகுதியில் பொது மக்களும் திருப்பித் தாக்க... வி யூ க ம் அமைத்தாற்போல் எங்கிருந்தோ சோடா பாட்டில் வந்து விழுந்து வெடித்துச் சி த றி ய து. ஒரு போலீஸ்காரர் எசகுபிசகாகக் கூட் டத்தில் சிக்க... இரத்தக் களறி யானார். போலீஸ் ஜீப்பும், வேனும் க ல் ல டி பட்டு நொறுங்க... நிலைமை கட்டுப் பாட்டை மீறியது.

''ஃபயர்''... எஸ்.பி. உத் தரவு கொடுக்க... போலீஸார் துப் பாக்கி உயர்த்தினர். நா ன் கு ரவுண்ட் துப்பாக்கி முழங்க.... கூட்டம் சிதறியது. ஆ ஸ் ப த் திரியைச் சுற்றிய இடம் போர்க்கள பூமியானது. அரைமணி நே ர ப் படபடப்பு அடங்க... இரண்டு உயிர்கள் கு ண் ட டி பட்டுப் போயிருந்தன. இருபது பேர் படு காயமடைந்தனர்.

விரைந்து வந்தார் கலெக்டர். டாக்டர்களோடு பே சி னா ர். பெரிய டாக்டரை காருக்குள் அழைத்துச் சென்று ஒயர்லெஸ் ஸில் யாருடனோ பேச வைத்தார். பத்து நிமிடப் பேச்சில் டாக்டர் கள் மசிந்தனர்.

ஆஸ்பத்திரிக்குள் நு ழை ந் தனர். ஆனால்... அதற்குள் பன்னி ரெண்டு உயிர்கள் விடைபெற்றுச் சென்றிருந்தன.

சென்னை இராணுவத் தலைமையகம் தணிகாசலத்தை உடனடியாக விடுவிக்கச் சொன் னது. இரவு இரண்டு மணிக்குப் போ லீ ஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தவனைக் கதிர் பாய்ந்து கட்டிக் கொண்டான்.

''கிராமமே சுடுகாடுடா... முத்துசாமி அண்ணன்... வேலு... சின்னத்தம்பி.. ப ட் டா ணி... அவன் புள்ளை.. எல்லாரும் செத்துட்டாங் கடா...''

தணிகாசலம் கண்களை மூடிக் கொண் டான். நெஞ்சு வெடித்துவிடும் போலிருந் தது.

''ஆறுமாச லீவுல வந்திருக்கேன்னு சொன்னியேப்பா...'' அம்மா தொண்டை யடைக்கக் கேட்டாள்.

''ஆமாம்மா... ஆனா என்னால இங்க இனிமே ஒரு நாள் கூட இருக்க முடியா தும்மா.... எந்தப் பக்கம் போனாலும் அழு கைச் சத்தம். நெத்தி நிறையப் பொட்டும்... தலை கொள்ளாம பூவுமாப் பார்த்தவங் களை எல்லாம் வெறுமனே பார்க்க நெஞ்சு பதறுதும்மா...''

''அது விடுடா தம்பி.. எழுத்து அவ்வள வுதாங்கிறப்ப நாம என்ன பண்ண முடி யும்?''

''விதி இல்லம்மா... அலட்சியம். மனி தாபிமானம்... அனுதாபம் ஒன்னும் இங்க யாருக்கும் இல்லம்மா.... எல்லையிலேயும் அப்பப்ப சிலர் சாகறாங்கதான். ஆனா இப் படி இல்லே. போன மாசம் அத்துமீறி நம்ம பகுதியில நுழைஞ்ச பாகிஸ்தான் சிப்பாய் களைச் சுட்டோம்... எல்லாரும் திரும்ப ஓடிட்டாங்க. நாங்க சுட் ட து ல ரெண்டு பேரு குண்டடி பட்டுக் கிடந்தாங்க. செத் துப் போயிட்டாங்கன்னு நினைச்சி அவுங்க விட்டுட்டுப் போயிட்டாங்க... நாங்க பார்க் கிறப்ப உயிர் இருந்துச்சி... தூக்கிகிட்டு வந்து எங்க கேம்புல வச்சி.. நாலு நாள் எங்க டாக்டர்ஸ் போராடி ரெண்டு பேரை யும் காப்பாத்தினாங்க... எதிரி நாட்டுக் காரன்.. நம்மளோட சண்டை போட வந் தவன்... நாங்க ஏம்மா அவுங்களக் காப்பாத் தணும்.... மனிதாபிமானம். மொதல்ல அவன் மனுஷன்... அப்புறம்தான் எதிரி... ஒரு மாசம் கழிச்சி ரெண்டு பேரையும் பாகிஸ்தான் இராணுவத்துகிட்ட ஒப்படைச் சோம். ஒரு நாள் இந்த ரெண்டு பேரோட பொண்டாட்டியும் எல்லைதாண்டி கேம் புக்கு வந்து எல்லார் கையிலயும் முத்தம் கொடுத்துட்டுப் போனாங்க. இங்க என் னன்னா சாராயம் காய்ச்சறான்... கைப்பத் தின சா ரா ய த் தை போலீஸ்காரனே குறைஞ்ச விலைக்கு விக்கிறான். வாங்கிக் குடிச்சிட்டு மயங்கி விழறான். ஆஸ்பத் திரிக்குத் தூக்கிட்டுப் போனா டாக்டருங்க வரமாட்டோம் ஸ்டிரைக்குங்கிறான்.... உயி ரைப் பணயமா வச்சி அரசாங்கத்தை மிரட் டறாங்க... எவன் செ த் தா எனக்கு என்னங்கற எண்ணம்...''

கதிர் ஆதரவாக அவன் தோளை தொட் டான். தணிகாசலம் அவனை அணைத்துக் கொண்டு சொன்னான் : ''உன் கல்யாணத் துக்குப் பத்திரிகை அனுப்புடா... வர் றேன்!'' என்றவன் தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

ஆந்திராவில் பல லக்ஷ ரூபாய்கள் செலவழித்துக் கிராமங்கள் உள்பட ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகள் வழங்கப்பட்டன. தூரத்தில் உள்ள பல பள்ளிகளில் பூஸ்டர் ஆண்டனாவும் பொருத்தினால்தான் அவை வேலை செய்யும். அதற்குப் பணம் இல்லாததால் ஓர் ஆய்வின்படி 82 சதவிகிதப் பெட்டிகள் பூட்டிவைக்கப்பட்டுப் பாழாகிக் கொண்டிருக்கின்றன. அதே பள்ளிகளில் கழிவறைகளோ, விளையாட்டு மைதானங்களோ, குடிநீர் வசதியோ, கரும் பலகைகளோ கூட இல்லாததற்கும் நிதிப் பற்றாக்குறையே காரணம் என்பது வேறு விஷயம். -அ. ஷண்முகசுந்தரம்.



அம்மா வந்தாச்சு

மோதலில் தொடங்கி, காதலாக வளர்ந்து, சந்தேகத்தில் பிரிந்து, உச்சகட்டத்தில் தெளிவு... கதை மெலிதான நூலிழை.

பாக்யராஜ் மீது குஷ்புவுக்குச் சந்தேகம் பிறக்கும் கட்டம் வரையில் நிகழ்ச்சிகள் பி.டி. உஷா ஓட்டம்.

மெடிகல் ரெப்ரசன்டேட்டிவ் பாக்யராஜ் தங்கள் நிறுவனத்தின் மருந்தைப் பிரபலப்படுத்த விளம்பரப் படத்தில் நடித்து சமூக விரோதிகளைக் கும்கும் என்று குத்துவது என்ன...

குஷ்புவை அவ்வப்போது சந்தித்துக் காதல் வயப்பட்டு வழிவது என்ன..

வீட்டுக் கதவை விடாமல் தட்டித் தன் தலையில் எப்படியாவது ஒரு கட்டு ஊதுவத்தியைக் கட்டிவிட முயலும் விற்பனைப் பிரதிநிதியை விரட்ட முடியாமல் தவிப்பது என்ன....

கதவைத் தட்டுவது ஊதுவத்திக்காரர் தான் என்கிற நிச்சய முடிவில் கதவைத் திறந்து ஒரு வாளித் தண்ணீரை ஆக்ரோத்தோடு வீசி, அதில் அபிஷேகமாகிறவர் அவர் அல்ல - குஷ்புதான் என்பதை உணர்ந்து கருகி இறங்கிப் போவது என்ன....

இஸ்திரி „போடும் பையனின் கேள்விகளுக்கும் அவன்" உதிர்க்கும் வாழ்க்கைத் தத்துவங்களுக்கும் பதில் சொல்ல முடியாமல் திணறுவது என்ன.....

நிகழ்ச்சிகள் ஒரு பக்கம் இப்படி வேகம் பிடிக்க, இன்னொரு புறத்தில் அந்த வேகத்துக்கு உந்து விசையாக குஷ்பு.

வீடு வீடாகச் சென்று சோப்பு விற்பனையில் ஈடுபடும் குஷ்பு, ஒவ்வொரு முறை பாக்யராஜைச் சந்திக்கும் போதும் தன்னிகரற்ற உயர்வு மனப்பான்மையை வெளிப்படுத்தி, தான் ஒரு பெரிய தொழிலதிபரின் மகள் என்றும் தான் சோப்பு விற்பது ஒரு சோஷியல் சர்வீஸ் என்றும் கூறி அவரைத் திணற அடிக்கிறார்.

பள்ளி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்று, மிகவும் கஷ்ட நிலையில் இருக்கும் டெல்லி கணேஷ், மருந்துக்கடை வாசலில் பாக்யராஜைச் சந்தித்து எதிர் பாராத வகையில் அவரிடமிருந்து உதவி பெற்று, அதன் தொடர்ச்சியாக அவரைத் தம் வீட்டுக்கு அழைத்து வர, டெல்லி கணேஷின் மகள்தான் குஷ்பு, உண்மையில் அவர் ஒரு பெரிய இடத்துப் பெண் அல்ல என்கிற உண்மை வெளிப்பட....

நிகழ்ச்சிகளின் விறுவிறுப்பு மேலும் கூடுகிறது.

''டாடி'' என்றழைத்தவாறு பாக்யராஜின் வீட்டில் பேபி ஸ்ரீதேவி வந்திறங்கும் வரையில் இப்படிச் சிரிப்பு மேகத்தில் மிதக்கும் கதை அதன்பின் ஒரு வித சந்தேகக்கனத்தோடு பூமியின் மீது வந்திறங்கி சோகத்துக்கும் சென்டிமென்டுகளுக்கும் வழி வகுக்கிறது. பேபி ஸ்ரீதேவி யார் என்பது கதையின் சஸ்பென்ஸ். அதன் பின் -

தொடரும் சம்பவங்களின் மீது செயற்கைச் சாயம் தென்பட்டாலும் பேபி ஸ்ரீதேவியின் சோகப் பார்வையும் மழலைப் பேச்சும் கொட்டும் மழையாய் அந்தச் சாயத்தைக் கரைத்துக் கொண்டு போக, அதன் பின் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டிருக்கும் ஓரிரு சினிமாத் திருப்பங்களும் கூட அதனோடு கரைந்து போய் விடுகின்றன.

தயாரிப்பு பாக்யராஜ் என்றாலும் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருப்பவர் பி.வாசு.

சுவாரஸ்யமான வித்தியாசம்.

- சி. ஆர். கே.

●● ஆனந்தவிகடன் அ க ர ா தி (கடைசி பதிப்பு) தேவைப்படுகிறது. ரூ. 300/- தரத் தயாராயிருக்கிறேன். நேரில் அணுகவும்.

- வி.எஸ். சதாசிவம்,
42, கல்வே செனப்ராய
செட்டி தெரு,
பாண்டிச்சேரி - 605 001.

●● சென்னை அருகே குன்றத்தூருக்குப் பக்கத்தில் காட்ராம்பாக்கம் உள்ளது. இங்கு அமையவிருக்கும் ஆச்ரமத்தில் ராமமந்திரத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அன்னையின் ஸ்ரீபீடம் அமையவிருப்பதால் இறைப்பணியில் விருப்பம் கொண்ட ஆன்மீக அன்பர்கள் ''ராம'' மந்திரம் எழுதிய நோட்டுப் புத்தகங்களை 15.8.92 தேதிக்கு முன்னதாக நேரிலோ தபால் மூலமோ அனுப்பவும்.



- வி. பாலசுப்பிரமணியன்,
"தத்வலோக ஆசிரமம்",
22, கிழக்கு மாட வீதி,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

●● எங்கள் தயாரிப்பில் உருவாகும் ஜமுக்காளம், படுக்கை விரிப்பு முதலியவற்றைப் பகுதி நேரத்திலோ அல்லது முழு நேரத்திலோ விற்பனை செய்து லாபம் அடையலாம். ஜவுளிகளைத் தவணை முறையில் விற்பனை செய்பவர்கள் அல்லது புதிதாக இதில் இறங்க நினைப்பவர்கள் தொடர்பு கொள்ள முகவரி :

- கு. காந்திராஜ்,
த/பெ. குமாரசாமி,
மெயின் ரோடு, மணக்கால்,
லால்குடி - 621 601.

●● மின் பொறி இயல் (Electrical Engineering) நூல்கள் விற்பனைக்குக் கிடைக்கும். நாற்பது ச த ம் தள்ளுபடி. 20.7.92 க்கு முன் தொடர்பு கொள்க.

- ஆர். வெங்கடேசன்,
22/10, வேலூ தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 33.

●● வங்கிக் கடன் உதவியோடு கோழிப் பண்ணை ஆரம்பிக்க எண்ணம். முன் அனுபவம் உள்ள அ ன் ப ர் க ள் விவரங்கள், ஆலோசனைகள் வழங்கினால் நன்றியுடன் ஏற்பேன்.

- தஞ்சைத் தரணியன்,
'தஞ்சைக் குடில்',
முத்துப்பேட்டை - 614 704.

●● 1985 முதல் சில ஆண்டுகள் என்னுடன் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று வேறிடம் சென்ற, செய்யாறு வட்டம், கோவிலூர் அரசு உயர் நிலைப் பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் திரு வி. நாராயணன் அவர்களுடன் மறுபடி தொடர்பு கொள்ள அவா.

- ஆபிரஹாம் போஸ்,
உதவித் தலைமை ஆசிரியர்,
கே.பி.ஆர். குடியிருப்பு,
உப்பிடமங்கலம் - 639 114.

●● 1990 - ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள தினமலர் இணைப்புகள் சிறுவர் மலர், கதை மலர், வார மலர் ஆகியன எனது பிஎச்.டி. ஆய்வுக்குத் தேவை. பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்கிறேன். உதவ விரும்புவோருக்கு முகவரி :

- அ.லோ. பழனிசாமி,
ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 115.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

ஐம்பது லட்சத்துக்கு மேல் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பெரிய நகரமும் தனி மாநிலமாகக் கருதப்பட வேண்டும். இவை சிங்கப்பூர் மாதிரி தனியாக வரி வசூலித்துத் தம் நிலையை உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.



நா. மகாலிங்கம்

மாநகரங்களின் மாபெரும் பிரச்னைகள்

எப்படியும் நகரத்தில் ஒரு வேலை கிடைத்து விடுகிறது. அது அவசியமான வேலையா, அவசியமில்லாத வேலையா என்பது ஒருபுறம் இருக்கட்டும்; வேலை கிடைத்து விடுகிறது. ஆகவே கிராமத்தில் உள்ள வேலையில்லாத மக்கள் எல்லாம் நகரத்துக்கு வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரில் பூமி விலை குறைவு, மனை விலை குறைவு என்று, பம்பாயிலிருந்து தொழிலதிபர்கள் சென்னையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகச் சென்னை நகரில் கூட்டம் அதிகமாகிப் பழைய ஆட்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. நகரத்தின் பிரச்னைகள் நாளுக்கு நாள் அதிகமாகின்றனவே தவிரக் குறைவது கிடையாது.

என்னுடைய கருத்து என்னவென்றால், ஐம்பது லட்சத்துக்கு மேல் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பெரிய நகரமும் தனி மாநிலமாகக் கருதப்பட வேண்டும். காரணம் சொல்கிறேன். பொதுவாக இப்போது எந்த மாநிலத்தின் வரவு செலவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், பெரிய நகரங்களில்தான் அதிகப் பணம் செலவாகிறது. கிராமப்புறங்களுக்கு அந்தப் பணம் போய்ச் சேருவதில்லை.

ஆறு ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பார்த்த வரையில் தமிழ்நாட்டின் தண்ணீர்த் திட்டங்களுக்காக 1500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 800 கோடி ரூபாய் கிருஷ்ணா - கங்கைத் திட்டத்திற்கும் - அப்புறம் பெரிய தலைநகரங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதில் 400 கோடி ரூபாயும் செலவானது போக, முந்நூறு கோடி ரூபாய் மட்டுமே கிராமப்புறங்களுக்கு என்று பணம் ஒதுக்க முடிந்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலும் நேர்வதைத் தவிர்க்கத்தான் பெரிய நகரங்கள் ஒவ்வொன்றையும் தனி மாநிலமாக்க வேண்டும் என்பது. இவை சிங்கப்பூர் மாதிரி தனியாக வரிவசூலித்துத் தம் நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

மாநிலத் தலைநகரில் மாநில அரசு என்று ஒன்று இருப்பதால் மாநகராட்சி சரிவர இயங்குவதில்லை. எனவே திருச்சியைத் தலைநகராக ஆக்க வேண்டும். சென்னை ஒரு மாநிலமாக வேண்டும். தலைநகரங்கள் சிறியவையாக இருந்தால் பிரச்னைகள் அதிகம் இராது. பம்பாய், கான்பூர், கல்கத்தா, தில்லி, பெங்களூர் - இந்த மாதிரி பெரிய நகரங்களையெல்லாம் தனித்தனி மாநிலங்களாகக் கருதி, அவற்றின் பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்று தேசிய அளவில் யோசிக்க வேண்டும். அந்தந்த நகரங்களில் திறமைமிக்க நிர்வாகம் அமைந்தால் சிங்கப்பூர் மாதிரி, அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு உலகச் சந்தையில் தங்கள் உற்பத்திப் பண்டங்களை விற்பனை செய்து தங்களை வளர்த்துக் கொள்ளலாம். இதை அனுமதித்து ஒரு நம்பிக்கையை உருவாக்கினால் ஒவ்வொரு நகரமும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறும்.

தற்போது தில்லி ஒரு மாநிலம்தான். ஆனால் அங்கு மத்திய அரசு செயல்படுவதால், மாநில அரசு செயல்படுவதே இல்லை. மத்திய அரசு உள்ள ஊரில் இன்னொரு மாநில சர்க்கார் இருக்கவே கூடாது. மத்திய அரசில் பணம் நிறைய இருப்பதால் டெல்லிக்கு நிறையச் செலவிடுகிறார்கள். அதே போல் மற்ற ஊர்களிலும் மாநில அரசு செலவழிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மாநில அரசுகளுக்கு அவ்வளவு நிதி வசதி இல்லை.

இந்த நிலைமையில் 'சென்னையை அழகுபடுத்துவோம்' என்று கூறிப் பயன் என்ன? சொல்லளவில்தான் அது நிற்கும். செயலில் நிறைவேறுவது கஷ்டம்.

மொய் எதிர்ப்பு

அகிலா கார்த்திகேயன்

ஏழுமலை என் மேஜையை நோக்கி வரும்போதே எனக்கு பகீரென்றது. ஏழுமலை ஊழியர் சங்கத் தலைவன். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் வாடிக்கையாக சங்கத் தலைவர்கள் கோரிக்கைகளைக் கொண்டு வந்துதான் மிரட்டுவது வழக்கம். ஏழுமலையோ ஏதாவதொரு அழைப்பிதழோடு அவ்வப்போது வந்து அவஸ்தைப்படுத்துபவன்.

பயந்தது போலவே ஒரு 'லிஃப் பேட்'டில் கவ்விய அழைப்பிதழையும் கடிதத்தையும் பவ்யமாக நீட்டினான்.

''ஹி... ஹி... என்ன ஏழுமலை?'' வழிந்தேன்.

''அதான் ஐயா... நம்ப வாட்ச்மேன் சுந்தரத்தோட பையனுக்கு அடுத்த வாரம் கல்யாணம்... ஐயாவுக்கு அந்த பேமாவிய பத்திரிகை வைக்கச் சொல்லியிருந்தேன்... வைக்கலையா?''

மெய்யாலுமே எனக்கு அந்த வாட்ச்மேன் யார் என்றும் தெரியாது... அப்படி ஒரு பத்திரிகையும் பார்க்கவில்லை. இருந்தாலும் மொய்யாக எதையாவது போட்டே தீர வேண்டும். சங்கத் தலைவனைப் பகைத்துக் கொள்ளவா முடியும்.

''ஹி... ஹி... அதனால என்ன ஏழுமலை... கொண்டா அதை!'' என்று வாங்கிப் படித்தேன். வழக்கம் போல அதே வார்த்தைகள்.

'அன்புடையீர்... நம் தோழர் சுந்தரத்தின் மகனுடைய திருமணத்திற்குத் தங்களுடைய அன்பளிப்பை வழங்க வேண்டுகிறோம்.''

மனோகரனின் அச்சுப் போன்ற கையெழுத்து. அடியில் வெற்றிடம், இன்னும் நிரப்பப்படாமலிருந்தது. நான்தான் ஆரம்பிக்க வேண்டும்.

''எவ்வளவு போடலாம் ஏழுமலை?''

''ஐயா நீங்கெல்லாம் ஐம்பதாவது போட்டாத்தான், மத்த செய் தெங்கிட்ட ஐந்தோ பத்தோ வாங்க முடியும்.''

ஏழுமலையின் குரல் மிரட்டலாக வந்தது. வசூல் செய்வதில் எமகாதகன். பங்குமார்க்கெட் மேத்தாவின் தாத்தா!

''ஒரு முப்பது போடறேன் ஏழுமலை. இந்த மாசமே இத்தோட நாலு ஐந்து வந்தாச்சி...'' என்று பேரம் பேசினேன், அல்லது கெஞ்சினேன்.

அன்பை அளிப்பதில் அவ்வளவு ஓர் அவலமான நிலை இந்த ஆபீஸில்.

''சரி... ஐயா இஷ்டம்'' என்று கஷ்டமாக ஏழுமலை கூறியதைக் கண்டுகொள்ளாமல் என் பெயருக்கு நேராக முப்பது என்று எழுதி அனுப்பினேன்.

ஏனோ என் மனைவி என் மனக்கண்முன் கட்-அவுட்டாய் விஸ்வரூபமெடுத்து மிரட்டுவது போலிருந்தது. ஜானவாசத்திலிருந்து கட்டு சாதம் வரை அழுத்தம் திருத்தமாக, குடும்ப சகிதம் சாப்பிட்டதுமல்லாமல் ரவிக்கை, எவர்சில்வர் இன்னமென்று வசூல் வேறு செய்து கொண்டு வரும் உறவுக்காரர்களின் கல்யாணங்களுக்கே, ''ஆனாலும் அவ்வளவு ரூபா ஓதியிட்டிருக்க வேண்டாம்'' என்று பிசாத்து இருபது ரூபாய்க்கே என்னைப் பிய்த்தெடுக்கும் ரகம் அவள். இந்த மாதமே ஆபீஸில் 'அன்புடையீர்' தொல்லையால் நூறுக்கு மேலே பறந்திருப்பது அவளுக்குத் தெரிந்தால், விவகாரம் விவாகரத்துக்கே போய் விடும்.

நாலு செக்ஷன்கள் அடங்கிய இந்தத் தலைமை அலுவலகத்தில் சுமார் இருநூறு ஊழியர்கள். இடறி விழுந்தால் கல்யாணம், காது குத்தல் என்று, ஆபீஸில் ஃபைல்களை போடுகிறார்களோ இல்லையோ பத்திரிகையைப் போட்டுக் கொண்டே இருப்பார்கள். தரித்திர பட்சம் ஆளுக்கு ஐந்தோ பத்தோ போட்டாலும் இருநூறு பேருக்கு ஒரு கணிசமான தொகை சேர்ந்து விடுவதென்னமோ உண்மை. ஆனால் மாதா மாதம் மஞ்சள் பத்திரிகை மானாவாரியாக வருவதில் 'அன்புடையீர்'களுக்கு மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும்



போலிருக்கிறது.

சிலருக்கு போட்ட
முதலை எடுக்க ஆத்திரம்.
அதனால் வீட்டோடு நடத்த
வேண்டிய விசேஷங்களுக்
கெல்லாம் ஆபீஸ் ஆட்க
ளைக் கூப்பிடத் தொடங்கி
விட்டார்கள். மஞ்சள்
நீராட்டு விழா, கேபிள்
டீ.வி. காட்டு விழா என்று
இல்லாத பொல்லாதவைக
ளுக்கெல்லாம் அழைப்
பிதழ் நீட்டி ஆபத்தை உரு
வாக்கி விட்டார்கள்.

ஆபத்து முதலில் பிச்சை
முத்து வடிவில்தான் வந்தது.
தன் பேரனுக்கு மொட்டை
யடித்துக் காது குத்துவதாக
போஸ்ட் கார்டில் கைப்பட
எழுதிய பத்திரிகையை விநி
யோகித்து, ஏழுமலை மூலம்
வசூலும் செய்து கொண்
டான். விழுப்புரத்துக்குப் பக்
கத்தில் எங்கோ நடந்த விசே
ஷம் ஆதலால் அதைப் பற்றி
யாரும் கவலைப்பட
வில்லை. ஒரு மாதம் கழித்து
ஒரு நாள் பிச்சைமுத்துவின்
பேரனே தன் தாத்தாவை
எதற்கோ தேடி வர, பிச்
சைக்கு இருப்பது ஒரே
பேரன் என்றும் அவனும்
ஒன்பதாம் வகுப்பு படித்துக்
கொண்டு ஃபங்க் கட்டிங்கும்
தலையுமாகத் திரிபவன்
என்றும் தெரியவந்தது. இது
பற்றிப் பிச்சையிடம் மிரட்டி
விசாரிக்க, அவனும் தனக்
குப் பணமுடையாய் இருந்த
தால், இப்படி போலியாக
பத்திரிகை தந்து எங்களை
மொட்டையடித்துக் காது
குத்தியதாக ஒப்புக் கொண்டு
புலம்பவே போனால்
போகிறதென்று விட வேண்
டியதாயிற்று.

அடுத்து பாலகிருஷ்
ணன் செய்தது படு அக்கிர
மம். ஒடுக்கத்தூர் பக்கத்தில்
புதுமனை புகுவிழா என்று
அழைப்பிதழ் தந்து வசூல்
பிழைப்பைச் செய்து விட்
டார். ஊருக்கு ஒதுக்குப்புற
மான ஒடுக்கத்தூருக்கு யார்
வரப் போகிறார்களென
நினைத்திருப்பாரோ என்
னவோ... தாங்கள் போட்ட
அல்ப ஐந்து ரூபாய்க்கு

விசேஷம் துபாயில் நடந்தால் கூட விடாமல் போய்ச் சாப்பிட்டு விட்டு வரும் சில விடாக் கொண்டர்கள், ஒடுக்கத்தூர் சென்று வீட்டைப் பார்த்ததும் நடுக்கமே வந்து விட்டதாம்! பாலகிருஷ்ணனுக்கல்ல, போனவர்களுக்கு! புதுமனை புகுவிழா என்று போட்டு விட்டு விழுமோ விழாதோ என ஊசலாடிக் கொண்டிருந்த உத்திரமும், ஓடு வேய்ந்த கூரையுமாக இருந்த அந்தப் பழைய வீட்டில் பாலகிருஷ்ணன் பால் காய்ச்ச அப்போதுதான் தயார் செய்து கொண்டிருந்தாராம். விட்டருக்கு நாலு சொட்டு பால் கணக்கில் ஒரு தண்ணீர் பாலைக் காய்ச்சி, ஆளுக்குக் கால் தம்ளர் கொடுத்த போது, 'இது என்ன கலாட்டா, பார்வையை எல்லோரும் வீச -

''ஹி... ஹி... நீங்களெல்லாம் கிரஹப் பிரவேசம்னு தப்பாப் புரிஞ்சுகப்பேங்கன்னு நான் நினைக்கலே. புது வீட்டுக்குக் குடி போறதும் புதுமனை புகுவிழாதான்னு உங்களுக்கு எப்படி தெரியாம போச்சு?'' என்று எல்லோரையும் எரிச்சலூட்ட, இவர்கள் அனைவரது சாபத்தினால் ஆடிக் கொண்டிருந்த உத்திரம் விழுந்து காலில் அடிபட்டு மொய்ப் பணம் அத்தனையும் ஆஸ்பத்திரிக்குச் செலவாயிற்று.

இப்படிச் சிலர் துஷ்பிரயோகம் செய்ய, மற்றும் பெண்ணைப் பெற்ற சில ஆசாமிகள் பெண் கல்யாணத்திலிருந்து ஆரம்பித்து அவள் சீமந்தம், பேரனுக்குப் பெயர் சூட்டு விழா, ஆண்டு நிறைவு என்று அடுத்தடுத்து ஆறு மாத பிராவிடெண்ட் ஃபண்ட் கடன் போல தொடர் வசூலைச் சாமர்த்தியமாக நடத்திக் கொண்டிருந்தனர்.

இப்படி ஏதடா சாக்கு என்று தாங்கள் அளித்த 'அன்பை' அப்படியே திருப்பிப் பெற ஆளாளுக்குப் பறந்து கொண்டிருந்தனர். செக்ஷன் அதிகாரியான எனக்கு மட்டும் இருக்காதா என்ன... இந்த ஆபீஸுக்கு வந்ததிலிருந்து நான் அளித்த அன்பளிப்பு இரண்டாயிரத்தைத் தாண்டி விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த அழகில் நாலைந்து மாதங்களில் எனக்கு மாற்றல் வேறு வர வாய்ப்பிருந்தது. இதற்கு மேல் விட்டு வைப்பது அவ்வளவு உசிதமல்லவென்று தோன்றினாலும் அதற்கான உபாயமும் எனக்குத் தெரியவில்லை. பையனுக்கோ, பெண்ணுக்கோ கல்யாணத்தைச் செய்யலாமென்றால் அதற்கும் வழியில்லாமல் அரசாங்கம் பால்ய விவாக தடைச் சட்டம் போட்டு விட்டது. அதிகாரி என்ற வகையில் அல்பமாக பர்த்-டே-பார்ட்டி, என்றெல்லாம் அழைப்பிதழ் வழங்குவதும் அழகல்ல எனப்பட்டது... பின் இந்த இரண்டாயிரத்துக்கு என்னதான் வழி?

வழி, அன்று மாலை விழி மேல் வழி வைத்து என் வரவை எதிர்பார்த்து நின்ற என் மனைவி நிர்மலாவிடம் இருந்தது. வந்ததும் வராததுமாக, ''ஒரு ஹேப்பி நியூஸ்'' என்றபடி காப்பியை நீட்டினாள். அவளுடைய 'சி.பி.எஸ்.ஸி.' தம்பிக்கு ஸ்டேட் காலேஜ் அட்மிஷன் கிடைத்திருக்குமோ?

''என்ன அப்படி பார்க்கறீங்க என் தங்கை வித்யாவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்தாம். நீங்க ஆபீஸுக்குக் கிளம்பினதும் அப்பா வந்தார். திடீர்னு ஒரு பத்து நாள்ல எல்லாம் கூடி வந்து, அடுத்த மாசம் இருபதாம் தேதி கல்யாணத்தை நடத்திடலாம்னு பிள்ளை வீட்டுக்காரங்க அவசரப்படுத்திட்டாங்களாம்... பையனோட அப்பாவை உங்களுக்கும் தெரிஞ்சிருக்கலாம்னு அப்பா சொன்னார். பத்திரிகையெல்லாம் கூட அடிச்சிட்டு வந்துட்டார். 'மத்த கல்யாண வேலையெல்லாம் கவனிக்கணும், மாப்பிள்ளையைக் கோவிச்சுக்க வேணாம்னு சொல்லு. அப்புறம் அம்மாவோட வந்து அழைக்கறேன்'னு சொல்லிட்டு மத்தியானமே திருச்சிக்குத் திரும்பிப் போயிட்டார். ஒரு பத்துக் கல்யாண பத்திரிகையை உங்களுக்கு இருக்கட்டும்னு வைச்சிட்டுப் போயிருக்கார்.''

காதினில் எனக்குத் தேன் வந்து பாய்ந்தது போலிருந்தது. மாநாட்டு பலூன் கணக்காய் என் மனம் குதூகலிக்க, மச்சினி கல்யாணத்தை வைத்து ஆபீஸில் மொய் மகசூல் செய்யத் தீர்மானித்தேன். என் முகத்தில் தெரிந்த பூரிப்பைத் தன் தங்கைக்குக் கல்யாணமென்றவுடன் நான் அடைந்ததாய்த் தவறாகப் புரிந்து கொண்ட நிர்மலா பூரித்தாள்.

அவசர அவசரமாகப் பத்திரிகையைப் படித்தேன். இரு வீட்டார் அழைப்பாயிருந்தாலும் என் மாமனார் மறக்காமல், 'தங்கள் வரவை விரும்பும்' என்று முதல் மாப்பிள்ளையான என் பெயரையும் போட்டிருந்தார். ஆபீஸில் கொடுக்கத் தோதாக இருக்கும். மேலும் கல்யாணம் திருச்சியில் என்பதால் ஆபீஸ் ஆட்கள் அண்டுவதற்கும் வாய்ப்பில்லை.

சரி, இவர் வைத்து விட்டுப் போன பத்துப் பத்திரிகை பத்தாது என்ற காரணத்தால், அதே அச்சாக இருநூறு காப்பிகளை அடிக்கச் சொல்லி எனக்குத் தெரிந்த அச்சகத்தில் ஆர்டர் கொடுக்க, அவசர அவசரமாய் நான் கிளம்பிய போது, நிர்மலா திக்குமுக்காடிப் போனாள்.

அடுத்த நாள், என் அவசரத்திற்குக் காய்த்தும் காயாததுமாக அச்சடித்துக் கொடுத்த பத்திரிகைகளை வாங்கிக் கொண்டு ஆபீஸ் போனேன். இன்றே விநியோகம் செய்தால்தான், ஏழுமலை 'அன்புடையீர்' எழுதி சர்குலேஷனுக்கு

விட்டு, ஒன்னாம் தேதி வாக்கில் கட்டாய கலெக்ஷன் பண்ணிக் கல்யாணத்திற்குப் பத்து நாட்களுக்கு முன் மொய் கவரை கொடுக்க ஏதுவாயிருக்கும். அச்சடித்த செலவையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு இரண்டாயிரத்து ஐநூறு ஆகிறது. எப்படியும் தேறாமலா போய் விடும்... பலவிதமாக எண்ணியபடி பத்திரிகை தரத் தருணத்திற்குக் காத்திருந்தேன்.

அப்போதுதான் ராஜகோபால் வந்தார். பதினைந்து நாட்களாக விடுப்பில் இருந்து விட்டு என்னிடம் சார்ஜ் வாங்க வந்திருப்பார் போலும். என் ஆபீஸின் அடுத்த செக்ஷன் சக அதிகாரி. என்னை விடப் பல வயது மூத்தவர்.

''என்ன சார் திடீர்னு லீவிலே போயிட்டீங்க...'' என்றபடி அவரை அமரச் சொன்னேன்.

''எல்லாம் நல்ல சமாசாரம்தான். என் பையனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு'' என்றார் முகமலர்ச்சியோடு... போச்சுடா! இவர் வேறு பத்திரிகை கொடுப்பார் போலும்... குறைந்தது நூறு ரூபாயாவது போட வேண்டியிருக்கும். அதனாலென்ன, நாமும்தான் பத்திரிகை கொடுத்து வசூல் செய்யப் போகிறோமே...

''அப்புறம் உங்களுக்கு ஒரு சர்ப்பரைஸ் நியூஸ்... பை திஸ் டைம் உங்க மாமனார் சொல்லியிருப்பார்னு நினைச்சேன்... உங்க மச்சினிதான் என்னோட வருங்கால மருமகள். நாம எப்படி நெருங்கிட்டோம் பார்த்தீர்களா...'' என்றபடி கைப் பையைத் திறந்து கல்யாணப் பத்திரிகையை என்னிடம் நீட்டினார். எனக்குத் தலையைச் சுற்றியது... அதே இரு வீட்டார் அழைப்பு, அதே உங்கள் வரவை எதிர்பார்க்கும்... என் பெயர்...

அடப்பாவி ராஜகோபாலா... இப்படியா என் திட்டத்தில் மண்ணைப் போடுவீர்.... ஒரே ஆபீஸில் ஒரே கல்யாணத்திற்கு இரண்டு பேர் அழைக்கவா முடியும்... அப்படியே அழைத்தாலும் மச்சினி கல்யாணத்தை விட மகன் கல்யாணத்திற்கல்லவா முதல் உரிமை...

இரண்டாயிரத்து ஐநூறு போனால் போகிறதென்று, விட்டால் போதுமென்று இந்த தலைமை ஆபீஸை விட்டு அடுத்த இரண்டாவது மாதம் மாற்றல் வாங்கிக் கொண்டு சேலம் ஆபீஸ் போனேன். அங்கு போன அடுத்த நாளே பியூன் சின்னசாமி 'ஷிப்'பேடும் கையுமாகத் தலையைச் சொறிந்தபடி நின்றான்... அதே 'அன்புடையீர்.....' என் முகம் அஷ்டகோணல் பிளஸ் கோரமாவதைப் பார்த்துப் பயந்து போன சின்னசாமி பத்து நாள் மெடிகல் லீவ் போட்டு விட்டான் போங்கள்!

டாக்டர் பதில்கள் :

குறட்டையைப் போக்க வழி உண்டா?

● ந. ஆனந்தன், சவரப்பூண்டி.

குறட்டையைப் போக்க வழி உண்டா?

●● டாக்டர் எஸ். ராமமூர்த்தி, சென்னை - 20

உடல் பருமனாக இருப்பவர்கள் குறட்டை விடும் பழக்கம் உள்ளவர்களாய் இருப்பார்கள். இவர்கள் தம் எடையைக் குறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டால், குறட்டையைக் குறைக்கலாம். சிலர் உறங்கும் போது வாயைச் சிறிது திறந்தபடி தூங்குவார்கள். இவர்களிடமிருந்தும் குறட்டை எழும். வாயை மூடியபடி உறங்கும் பழக்கத்தைக் கொண்டு வர முடிந்தால், இவர்களும் குறட்டைச் சத்தத்தைக் குறைக்கலாம். 'நேஸல் செப்டம் டீவியேஷன்' காரணமாகவும் குறட்டை வருவதுண்டு.

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.

புகை பிடிப்பவரின் அருகிலிருந்து அவர் விடும் புகையைச் சுவாசிப்பதால் தம் உடலும் பாதிக்கப்படுமா?

பாதிக்கப்படும். ஆனால் எத்தனை தடவை அம் மாதிரி புகையைச் சுவாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பதைப் பொறுத்தது அது. மனைவியை அருகில் வைத்துக் கொண்டு, விடாமல் தொடர்ந்து புகை பிடித்தபடியே பேசுபவர்கள் உண்டு. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மனைவியையும் புகை பாதிக்கும். இம் மாதிரி பாதிக்கப்படுபவர்களை Passive Smokers என்பார்கள்.

● ஆர். பார்வதி, அம்பத்தூர்.

முதல் குழந்தை சிசேரியன் என்றால், அடுத்த குழந்தையும் சிசேரியன் செய்கிறார்களே? ஏன்? தானாகப் பிறக்கும் வாய்ப்பு இருக்காதா?

முதல் சிசேரியனுக்குப் பிறகு போடப்படும் தையல் பிரிந்த பிறகு, அங்கே 'ஸ்கார்' எனப்படும் வடு ஏற்படுகிறது. இரண்டாவது பிரசவத்தின் போது குழந்தை வெளிவரத் தாய் செய்யும் முயற்சிகளில், முதலில் தையல் போட்டுப் பிரிந்த பகுதி (ஸ்கார்) மறுபடி கிழிந்து விட வாய்ப்பு இருக்கிறது. அதனால் சிசேரியன் முறையையே கையாள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

● எஸ். ராஜகோபால், திருச்சி - 16.

திருமணமான ஒரு பெண்மணி, முதன் முதலாக கர்ப்பமுற்றிருக்கும் போது, தொழுநோயால் பாதிக்கப்பட்டு விடுகிறாள். அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் எதிர்காலத்தில் அந் நோய் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதா?

●● டாக்டர் நித்யா ராமமூர்த்தி.

இல்லை.

தொகுப்பு : எஸ். வி. என்.



கல்கி

ஆகஸ்டு 2உ ஆண்டு மலர்

கிண்டலோ கிண்டல்!

எஸ். வி. சேகர் சினிமா துறையின் மண்வாசனை மோகத்தைக் கிண்டல் செய்யத் தொடங்கி விட்டால் சிரிப்புக்குக் கேட்கவா வேண்டும்?

பெரிய தம்பி

தொடர் நாடகம் ஆரம்பம்



உங்கள் ஸ்கூட்டரை நேசியுங்கள்



ஸ்கூட்டர், மொபெட் அல்லது, மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் நிரந்தரப் பயன் தரும் இலவச இணைப்பு.

பொன்விழா நாவல் போட்டியில்

முதல் பரிசு

பெறும்



மகத்தான நாவல் ஆரம்பம்

இனி ஒரு சதி

பத்மா ரவிசங்கர்

எழுதும் மர்மச் சித்திரத் தொடர்!



மற்றும் பல புதிய அம்சங்கள்
அதிக பக்கங்கள்; அதே விலை!

ஹெலிகாப்டர் காட்சிகளின் ஷூட்டிங்கெல்லாம் முடிந்த பிறகு நான், ''பம்பாய் வரும் போது டெலிஃபோன் செய்கிறேன்; சந்திப்போம்'' என்று கூறி பைலட் யாதவ்வை வழியனுப்பி வைத்தேன்.

இதன் பிறகு இரண்டு முறை நான் பம்பாய் சென்றிருந்தபோதும் அவர் ஊரில் இல்லை. மூன்றாவது தடவை சென்ற போது ஃபோனில் பேசினேன். வெகு நாட்களுக்குப் பின் பேசிக் கொள்ள முடிந்ததில் இருவருக்கும் சந்தோஷம். அன்று இரவு அவரையும் அவர் மனைவியையும் விருந்துக்கு வருமாறு அழைத்தேன். வந்தார்கள். மனைவியை அறிமுகம் செய்து வைத்தார்.

மனைவிக்கு பம்பாய் 'விமான நிலையத்தில் உத்யோகம். ''உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கார். உங்களைச் சந்திக்க முடிந்ததில் மகிழ்ச்சி'' என்றார். யாதவ்வின் பர்சனாலிடிக்கு ஏற்ற



நாகி ரெட்டி : ஆபத்தான காரியத்துக்கு சம்மதிப்பாரா?

ஆர்ட் டைரக்டருக்கு ஒரு சவால்!

அழகுடையவர் அவர் மனைவி என்பதைக் கவனித்த நான், ''நீங்கள் இருவரும் மேட் ஃபார் ஈச் அதர்'' என்று கூறி வாழ்த்தினேன். அவர்களுக்கு ஒரே சந்தோஷம். விருந்துக்குப் பின் பிரியாவிடை பெற்றனர்.

அடுத்த சில தடவைகளில் பம்பாய் சென்ற போது அவர்களைச் சந்திக்க முடியவில்லை. சுமார் ஏழெட்டு மாதங்கள் ஓடி விட்டன. ஒருமுறை பம்பாய் விமான நிலையத்தில் ஒரு பெண் குரல், ''ஹலோ மிஸ்டர் ஸ்ரீதர்!'' என்று அழைக்கவும், திரும்பிப் பார்த்தேன். திடுக்கிட்டேன்!

திருமதி யாதவ்தான்! ஆனால்...

அவர் நெற்றியிலே குங்குமம் இல்லை!

என் அதிர்ச்சியை அவர் புரிந்து கொண்டார். என்ன பேசுவது, எப்படிக் கேட்பது என்ற என் தயக்கத்தையும் தெரிந்து கொண்டார். தாமே வலியப் பேசினார்.

''ஆமாம் ஸார்; அவர்தான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாரே, அது போலவே நடந்து விட்டது! ஹெலிகாப்டர் விபத்தில் அவர் மரணமடைந்து விட்டார்'' என்றார் கண்களில் நீர் மல்க.

சில வினாடிகள் சென்று திகைப்பிலிருந்து விடுபட்டு நான் நாத் தழுதழுக்கச் சொன்னேன் : ''நீ கணவனை இழந்தாய்; நான் நல்ல நண்பனை இழந்து விட்டேன். எனக்கு ஆறுதலாக வேறு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.''

விமான நிலையத்தில் வருவோரும் போவோரும் நிறைந்திருந்த இடத்தில், எங்கள் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள அரும்பாடுபட்டோம்.

பம்பாயிலிருந்து வந்த ஆர்ட் டைரக்டர் சாந்திதாஸ் நான் எதிர்பார்த்த படியே

அற்புதமான முறையில் பிரம்மாண்ட செட்களை அமைத்தார். படப்பிடிப்பும் தொடர்ந்து நடந்தது.

ஆனால் சாந்தி தாஸுக்கே சோதனையான ஒரு கட்டம் வந்தது! அது என்ன தெரியுமா? கதைப்படி ஆற்றின் ஒரு கரையில் மதுக்கடையுடன் இணைந்த உணவகம். மறு கரையில் புரட்சியாளர்களின் மறைவிடம். அவர்கள் அவ்வப்போது இக்கரைக்கு வந்து, உண வருந்தி விட்டு மறுபடி அக்கரைக்கு நீச்சலடித்துப் போய் விடுவார்கள்.

இந்தக் காட்சியை இரவில் எடுக்கவும் வேண்டும். இதற்கேற்ப அவுட்டோர் லொகேஷன் எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை என்பதுடன், ''இரவுக் காட்சியை எடுக்க ஸ்டூடியோவில் செட் போடுவது தான் வசதி'' என்று ஒளிப்பதிவாளர்கள் சொன்னார்கள். ''லைட்டிங் இங்கே வசதியாக அமைத்துக் கொண்டு அரையிருளில் நடப்பது போல் படமெடுக்கலாம்; அவுட்டோரில் இருட்டின் ஆதிக்கம் அதிகமிருக்கும்.''

ஒளிப்பதிவாளர்கள் இப்படிக் கூறி விட்டாலும் சுழித்தோடும் ஆறு, ஆற்றங்கரை, அதில் உணவகம், எதிர்ப்பக்கம் புரட்சியாளர்களின் மறைவிடம் எல்லாம் செட்டில் எப்படி அமைப்பது? ரொம்பக் கஷ்டம் என்பது எனக்குத் தெரிந்திருந்ததால், சாந்திதாஸிடம் கோரிக்கை போல் கேட்காமல், சவால் போலப் பேசினேன் :

''குறைந்தபட்சம் நான்கு ஐந்து அடி ஆழம் ஆறு வேண்டும்; அதில் தண்ணீர் சுழித்து ஓட வேண்டும்... முடியுமா, முடியாதா!''

'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்பது போல் கேட்க வேண்டும் என்ற என் யுக்தி ஓரளவு பலன் அளித்தது. ''முடியாது'' என்று சாந்தி தாஸால் கூற முடியவில்லை!

''சவாலை ஏற்க விரும்புகிறேன், ஸார். ஆனால் நான் ஒருவனாக இதைச் செய்ய முடியாது. இதற்கு ஒரு நல்ல இன்ஜினியரின் உதவி வேண்டும். அவர் பிளான் போட்டுத் தந்தால் நான் செயல் வடிவம் தருகிறேன்'' என்றார். எனக்கும் அவர் கோரிக்கை நியாயம் என்று பட்டது.

டைரக்டர் ஸ்ரீதர்

வாஹினி ஸ்டூடியோவில் உள்ள எட்டாம் நெம்பர் படப்பிடிப்புத் தளம் ஆசியாவிலேயே பெரியது என்பார்கள். அதை 'புக்' பண்ணினேன். பிறகு குமாரசாமி என்ற இன்ஜினியரை அணுகினேன். அவர் அமைச்சர் நெடுஞ்செழியனின் உறவினர். பூண்டியில் இருந்தார். நேரில் சென்று விஷயத்தைச் சொன்னேன்.

''சினிமா செட்டுக்குள் ஆறு ஓடுவதாவது? அதுவும் வெள்ளம் சுழித்தோடுவதா! அதெல்லாம் ஒண்ணும் சாத்தியமில்லை'' என்றார்.

''இங்கே உட்கார்ந்தபடியே முடியாது என்றால் எப்படி? ஃப்ளோரை நேரில் வந்து பாருங்கள்'' என்று கூறி வற்புறுத்தி அழைத்துப் போனேன். வாஹினியின் எட்டாம் நெம்பர் தளத்தைப் பார்த்தார், குமாரசாமி. ஓரளவு நம்பிக்கை பிறந்தவராக, ''செய்யலாம்; ஆனா ரொம்பக் கஷ்டம்'' என்றார்.

''கஷ்டம் என்பது தெரிந்துதானே உங்களிடம் வந்தேன்'' என்று அவர் தன் மானத்தை நான் உசுப்பி விட, அவரும் ரோஷமடைந்தவராக, ஃப்ளோரின் நீள-அகலம், உயரம் எல்லாம் அளக்க ஆரம்பித்தார். செட் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு எங்கள் தேவைகளைக் குறித்துக் கொண்டார்.

''சரி, ரெண்டு வாரம் சென்று வாங்க. கணக்கெல்லாம் போட்டுப் பார்த்து முடிவாச் சொல்றேன்'' என்றார். இரண்டு வாரம் என்பது நாலு வாரம், ஆறு வாரம் என்று இழுக்கடித்தது. ஏழெட்டு முறை பூண்டி சென்று வந்து விட்டேன்.

எட்டாவது தடவை போன போது குமாரசாமி ''நான் ரெடி'' என்றார். எனக்கு ஒரே கிளுகிளுப்பாக இருந்தது. ஆனால் அவர் சொன்ன விவரங்களைக் கேட்கக் கேட்க, கிளுகிளுப்பு போய், திகைப்பு வந்து விட்டது!

''ஒண்ணரை லட்சம் காலன் தண்ணீர் வேண்டும்; அந்தத் தண்ணீரை ஒரு பெரிய தொட்டி கட்டித் தேக்க வேண்டும். தேக்கிய தண்ணீரை மடைதிறந்து விட்டு செட்டில் பாயச் செய்த பிறகு, அது மறுபடி தொட்டிக்குள்ளேயே போகிற மாதிரி விசை இயந்திரம் வைத்து பம்ப் (Recycling) செய்ய வேண்டும். இல்லையெனில் ஸ்டூடியோ முழுவதுமே வெள்ளக்காடாகி விடலாம்!''

'இந்த ஆபத்தான காரியத்தில் இறங்குவதா? இறங்க நாம் தயாராக இருந்தாலும், ஸ்டூடியோ அதிபர் நாகிரெட்டி சம்மதிப்பாரா?' கேள்விகள் என் முன் விசுவரூபமெடுத்து நின்றன!



அந்தச் செய்தியை ஹெட் மாஸ்டர் வீட்டில்தான் கேட்டார்கள். தூர்தர்ஷனின் இரண்டு மணி ஒலிந்திச் செய்தியில் சொல்லப்பட்டது. அஸ்ஸாமில் எண்ணெய்க் கிணறு பிராஜக்டில் வேலை செய்யும் உதவி எஞ்ஜினியர் ராமுடுவைத் தீவிரவாதிகள் 'கிட்நாப்' செய்து விட்டனர்.

ராமுடுவின் தகப்பனார் விவசாயி. நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த அவர் வரவழைக்கப்பட்டார். காக்கினாடா அருகில் உள்ள அந்தக் குக்கிராமமே கவலையில் ஆழ்ந்தது. ராமுடுவின் தாயார் அலமந்து உட்கார்ந்து விட்டாள்.

ஒவ்வொரு முறையும் நம்பிக்கை ஊற்றெடுக்க, நல்ல செய்திக்குச் செவி சாய்த்தார்கள். கிடைக்கவில்லை. அஸ்ஸாம் முதல்வர் பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொன்னார்கள். ராமுடுவின் பெற்றோர் உணவு தொடவே இல்லை. தலைமை ஆசிரியர் சியாமராவ்தான் 'ஒன்றும் ஆகாது. கனக துர்க்கா காப்பாற்றுவாள். வந்து விடுவான்' என்று தைரியம் கூறி வந்தார்.

ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து செய்தி வந்தது. தனியாக ஒரு அதிகாரி அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக.

ராமுடு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஏழைமையிலும் ஊக்கமுடன் கல்வி அறிவைச் சம்பாதித்துக் கொண்டவன். ஹெட் மாஸ்டர்தான், அவனை உற்சாகப் படுத்திய தூண்டுகோல். காக்கிநாடா எஞ்ஜினியரிங் கல்லூரியில் அட்மிஷன் கிடைத்த சந்தோஷம், காபிடல் தொகை ஆயிரக் கணக்கில் கட்ட வேண்டும் என்ற செய்தியினால் மறைந்து போயிற்று. தலைமை ஆசிரியர் அவனை உற்சாகப்படுத்தி உள்ளூர்ப் பிரமுகர் வெங்கட்ட ரமணராவிடம் அழைத்துச் சென்றார். அவரே துணிந்து அந்தத் தொகையை வட்டியின்றி வழங்கித் தொழும் தெய்வமானார். 'நம்ம கிராமத்திலே ஒரு விவசாயக் குடும்பப் பையன் முன்னுக்கு வரான்னா, எவ்வளவு பெருமை!' என்றார்.

ராமுடுவின் அப்பா 'எங்க நிலத்தை அடமானமா உங்க பேருக்கு வச்சுக்குங்க' என்று முன் வந்ததை மறுத்து விட்டார். 'ராமுடு படிக்க உத்யோகத்துக்கு வந்து அடைச்சாப் போதும்' என்றார்.

நாட்கள் ஓடின. சேதி ஒன்றுமில்லை. 'இதுவே ஓர் அமைச்சர், கவர்னர் மகனாக

சுபஸ்ரீ

தியாகி

இருந்தால் ஓடி ஓடி சமரஸம் செய்வாங்க....' என்று சிலர் விமர்சித்தனர். ஹைதராபாத்திற்கு தந்தி பறந்தது. முதல் அமைச்சரை அஸ்ஸாம் அரசுடன் தொடர்பு கொள்ள வேண்டி. 'நீங்களே ஒரு நடை ஹைதராபாத் போய் ஸி.எம் மை பார்த்து வாங்களேன்' என்று ராமுடுவின் தந்தையை வேண்டினர், சிலர். அவருக்கு உடலில் தெம்பு இல்லை. 'தாயார் போய் செக்ரடேரியட் முன் உண்ணாவிரதம் இருக்கட்டும்' என்றார் அரசியல் அனுபவமுள்ள ஒருவர். கடைசியில் கலெக்டரை மட்டும் சந்தித்தார்கள்.

அஸ்ஸாமில் அவனுடன் இருந்த சக ஊழியன் எழுதி இருந்தான். 'தீவிரவாதிகள் உங்கள் மகனைப் பிடிக்கத் திட்டமிடவில்லை. அவனுக்கு மேலே சீப்-எஞ்ஜினியர் இருக்காரு. அவரைத்தான் கிட்நாப் செய்ய இருந்தார்களாம். அன்று மாலை ஆபீஸிலிருந்து திரும்புகையில் காரில் பிரதம அதிகாரி முன் சீட்டிலும் ராமுடு பின் இருக்கையிலும் அமர்ந்து விட்டதுதான் ஆபத்தாகப் போயிற்று. பின் ஆசனத்தில் இருப்பவர்தான் பெரிய ஆபீஸர் என்று கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்....'

ராமுடுவின் தாயார் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சில வாரங்கள் கழித்து ராமுடு கிடைத்தான். உயிரோடு அல்ல; உயிரற்ற பிணமாக. 'காந்தி பஜார் அருகில் ஒரு வீதி ஓரத்தில் சடலம் கிடைத்தது' என்ற தூர்தர்ஷன் செய்தி, அந்த வீட்டில் சோகத்தைப் பரப்பியது.

சடலம் ஹைதராபாத்திற்கு விமானத்தில் எடுத்து வரப்பட்டு, கிராமத்தில் சர்க்கார் மரியாதையுடன் அதிகாரிகளால் தரப்பட்டது. ஆயில் நிறுவன ஜி.எம். நேரில் வந்து வருத்தம் தெரிவித்தார். வேண்டிய உதவி புரிவதாகக் கூறினார். கலெக்டர் வந்து, சடலத்திற்கு மாலை மரியாதைகள் செலுத்திவிட்டு, ஈமச் சடங்குகளை மேற்பார்வையிட தாசில்தாரிடம் சொல்லிவிட்டு, மந்திரி ஒருவரை வரவேற்க ஜீப்பில் ஓடி விட்டார். பாசத்திற்குரியவனின் அகால மரணம் என்ற உணர்ச்சியே இல்லாமல் அரசு, இயந்திரம் போலக் கடனே என்று இயங்கியது. ஒரு லட்சம் நஷ்டஈடு தருவதாக அறிவிப்புச் செய்தது.

சடலத்துடன் அஸ்ஸாமிலிருந்து வந்த ராமுடுவின் துணை அதிகாரி ஒருவர், அவனது உரிமைப் பொருள்களை குடும்பத்திடம் வழங்கினார்.

''அவனுக்குத் தங்கை சீதா பேரிலே ரொம்பப் பிரியம். எங்க உறவுப் பையன் விஜயவாடாவில் வேலை பார்க்கிறான். அவ கல்யாணத்தை நல்லா நடத்திப் பார்க்கணும்னு சொல்லிக்கிட்டே இருந்தான்....'' கதறினாள் அம்மா.


''பாவிப் பய, அவளை அவ பிரியப்பட்ட பையனுக்குக் கொடுக்கணும்னு எழுதிக்கிட்டே இருப்பான். பணம் அனுப்புவான். ஆகஸ்ட் மாதம் நான் வர்ரேன். அப்போ 'பெள்ளி' நடத்திடுவோம்னு எழுதினானே.... எல்லாம் பாழாய்ப் போச்சு! அவனை நம்பிக் கடன் கொடுத்தவங்களுக்கு என்ன சொல்லுவேன்...'' என்று தலையிலடித்துக் கொண்டார் அப்பா.

வந்தவர், ''ஐயா இந்தா பாருங்க. போன மாசம் கல்கத்தா போனபோது, தங்கை சீதாவுக்குன்னு இந்த பெங்கால் ஸில்க் புடவை, சில நகைகள் வாங்கி வந்தான்....'' என்று ஒரு பொட்டலத்தைக் கொடுத்தார்.

கையில் பெற்றுக் கொண்ட சீதா, உடம்பிலுள்ள சக்தி எல்லாம் மெழுகு போல உருகி ஓடிவிட்டது போன்று நிலை கலங்கிப் போனாள்.

''இதப் பாருப்பா மாடசாமி... நான் கேக்கற மாமூல் உனக்குக் கட்டுப்படி ஆகலைன்னா, கொஞ்சம் குறைக்கச் சொல்லிக் கேளு, நியாயம்...! அதை விட்டுட்டு 'தொழிலை'யே விட்டுடப் போறேன்னு சொல்லி மிரட்டுறது நல்லா இல்லே...!''

- சீர்காழி வி. ரேவதி





பள்ளி ஆசிரியர் : உங்க பையன் உங்களை விடவும் பெரிய அரசியல் வாதியா வருவான்னு தோணுது!

பையனின் தந்தை : எப்படிச் சொல்றீங்க?

பள்ளி ஆசிரியர் : 'C' ஃபார் கட்-அவுட், 'M' ஃபார் மைக், 'S' ஃபார் சோடான்னு சொன்னதை வைச்சுத் தான்!

- எஸ். முகம்மது யூசுப்

''நீங்க அனுப்பிச்ச ஆவக்காய் ஊறு காயை எனக்கும் கொடுத்து கவைத்துச் சாப்பிட்டான். 'எங்க ஆந்திரா ஆவக்கா ஊறு காய்க்கு ஈடுவருமாய்யா? எங்கம்மா கை மணத்தை இதிலே என்னாலே உணர முடி யும்'னு சொன்னான். மறுநாள் கிட்நாப் சம்ப வம் நடந்தது....'' என்றார் வந்தவர்.

''யாரோ அரசியல் வன்மையாளர்களை விடுவிக்க அரசுடன் பேரம் பேச, சாமான்ய னான என் மகன்தான் அகப்பட்டானா?'' என்று தாயும் தந்தையும் அரற்றினர்.

அந்திமக் கிரியைகள் அடக்கமாக நடந்தன. ராமுடுவை முன்னின்று படிக்க வைத்த ஹெட் மாஸ்டரே இறுதிச் சடங்கு களையும் நடத்திவைத்தார். தம்முடைய சொந்த மகனை இழந்தது போன்ற சோகம், அவர் கண்களில்.

ஆபில் கார்ப்பரேஷன் செட்டில் மெண்ட் பணம் வந்தது. ராமுடு தந்தை உருகினார். ''இப்படியாடா நான் பணம் கேட்டேன். நீ மாசா மாசம் சம்பாரிக்க, அனுப்புவே, சீதா கல்யாணம் முடிச்சு, உனக்கும் ஒரு நல்ல பொண்ணும் பார்த்துக் கட்டணும்னு எப்படிக் கனவு கண்டேன்! இது சாவா? இல்லை.. அரசியலுக்குக் காவு... ஆயிட்டியே....!''

அரசு பணம் வரவில்லை. ''அஸ்ஸாமி லிருந்து மரண ஸர்டிபிகேட் வரணும். இதர பார்மாலிட்டி இருக்கிறது!'' என்று ஹெட் மாஸ்டரிடம் கலெக்டர் சொன்னார்.

சீதாவின் கல்யாணத் தேதி குறிக்கப் பட்டது.

''அண்ணன் செத்த பணத்தை வச்சு எனக்குத் திருமணம் வேண்டாம். நான் மேலே படிக்கிறேன். என் காலிலே நின்னு பிறவு கட்டிக்கிறேன்....'' என்றாள் அவள்.

''மேலே படிச்சா உன்னைவிட அதிக மாப் படிச்ச பையன் கிடைக்க மாட்டா னம்மா. கிடைச்சாலும் பொன்னைக் கொண்டா, பொருளைக் கொண்டாம் பாங்க.... உனக்குக் கல்யாணம் பண்றது ராமுடுவோட லட்சியம். அதை நிறைவேத்த றதுதான் நம்ம கடமை. உயிரை அர்ப்ப ணிக்க அவன் பணம் அனுப்பிச்சிருக்கான்!'' என்று அப்பா சமாதானப்படுத்தினார்.

விஜயவாடா உறவுப் பையன் வரதட் சணை ஏதும் இல்லாமலேயே பண்ணிக் கொள்வதாகச் சொல்லி அனுப்பினான். 'நகை நட்டு நாங்களே போட்டுக் கொள் கிறோம்' என்று அவன் தாயார் அன்புடன் கூறினாள்.

திருமணம் எளிமையாக நடந்தது. சீதா விஜயவாடா சென்றாள். அதற்குப் பிறகு பல கோடைகள் வந்தன. எத்தனையோ மாமரங் கள் பூத்தன. பல மாங்காய்களை ஈன்றன. ஆனால் அந்த ஆந்திர இல்லத்தில் ஆவக்காய் ஊறுகாய் மட்டும் போடப்படவே இல்லை!

சீதா புக்ககத்தில் தாய் இல்லத்தின் கதகதப்பை உணர்ந்தாள். 'நீ வேணும்னா தபால் கல்வி முறையிலே சேர்ந்து படிச் சிக்க. உனக்கு அண்ணன் நினைவு வாட் டாது' என்றாள் மாமியார் 'பெத்த' மனுஷி.

அன்று விஜயவாடா முழுவதும் பந்த். ஒரே ஆர்ப்பாட்டம்.

சிங்கி வெட்டி அப்பள ராஜு, முச்சந்தி யில் டெண்ட் போட்டு, உண்ணா விரதம் இருந்தான். போலீஸ் தடை செய்யவில்லை. காரணம் அவன் ஆளும்கட்சி எம்.எல்.ஏ!

அதன் பின்னால் ஓர் அரசியல் இருந் தது.

சிங்கி வெட்டி அப்பள ராஜு, குடிசை மக்களின் 'காவலராக' ஆரம்பித்துச் சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்து, மாமூல் வசூல், அராஜகம், என்று அவனது குண்டா ராஜ்யம் பெருகிற்று. அரசியல் தலைவர்கள் அவனது வன்மையை, வலிமையை அங்கீகரித்து அவன் உதவியை நாடிய போது, அவனது வளமை கூடிற்று.

ஆளும் கட்சித் தலைவர் வெங்கடப் பையாவுக்கும் அவனுக்கும் நாள்தோறும் சண்டை. மாறி மாறி, வெட்டு, குத்து. இரு வர் சார்பிலும் சங்கிலிச் சாவுகள். இது தவிர, ஜாதிப் பிரிவுச் சண்டையும் சேர்ந்து கொண்டு, அதற்கு வலு ஏற்றியது.

ஒரு நாள் குண்டூரிலிருந்து ஸ்கூட்டரில் திரும்பிய சிங்கி வெட்டியின் ஆட்கள் இரு வரை, வெங்கடப்பையாவின் அடியாட்கள் துரத்தித் துரத்தி அடித்துக் கொன்றனர். இருவரும் ஒரு கேஸில் முக்கியமான சாட்சிகள்.

இதற்கு எதிரொலியாக சிங்கிவெட்டி பட்டப்பகலிலேயே எதிரியின் குட்டிச் சாத் தான் இருவரைப் பலி வாங்கி இருக்க

முடியும். ஆனால் அதில் அரசியல் விவேக மில்லை. அதற்குத்தான் இந்த உண்ணா விரதம்.

சிங்கி வெட்டியின் உண்ணாவிரதம் ஊரெங்கும் அமர்க்களப்பட்டது. வன் தொண்டர்கள் கடைகளில் வசூல் செய் தார்கள். 'உண்ணாவிரதத்தைக் கைவிடு. பிரச்னைகள் பரிசீலிக்கப்படும்' என்று ஹைதராபாத்திலிருந்து முதல்வர் அறிக்கை வி டு த் த ா ர். 'வெங்கடப்பையாவை அரெஸ்ட் செய், நியாயம் வழங்கு' என்கிற கோஷங்கள் கிருஷ்ணா நதி தீரத்து நகரைக் கலக்கின.

போலீஸ் கமிஷனர் மேலிட உத்தரவுப் படி வெங்கடப்பையாவையும், அவனது சில அடியாட்களையும் சிறைப் பிடித்தார். கட்சிகளிடையே அனல் வீசிற்று.

விடிகாலை மூன்று மணி இருக்கும். ஒரு பஸ் நிறையக் குண்டர்கள். தாற்காலிகப் பந்தலில் சிங்கியும் அவனது பாதுகாப்பு ஆட்களும் தூங்கிக் கொண்டிருந்தனர். திடீ ரென ஆயுதங்களுடன் தாக்குதல். சிங்கி வெட்டிக்குக் கோடாலி வெட்டில் மரணம். பத்தே நிமிஷம். பஸ்ஸில் ஏறி ஓடி விட்டனர். பிறகு ஸெக்யூரிட்டி போலீஸ் விழித்துக் கொண்டது.

நகரமே அமர்க்களப்பட்டது. கூட்டம் கூட்டமாக சிங்கி வெட்டியின் ரவுடிகள் கடைகளை எரித்தனர். கல்வீச்சு. இரண்டு பஸ்களுக்கு அக்னிக் குளியல்... இத்யாதி.

முதல்வரின் அனுதாப அறிக்கை.

உள்துறை அமைச்சர் பறந்து வந்தார்.

பிரும்மாண்டமான ஊர்வலம். மாலை கள், கொட்டுகள், வாத்தியங்கள், 'ஏழை பங்காளன் சிங்கி வெட்டி அமர் ஹோ!' கோஷங்கள். ராஜமரியாதையுடன் அடக் கம். பலத்த போலீஸ் பாதுகாப்பு. சட்ட சபையில் இரங்கல் தீர்மானம்; மௌன அனுஷ்டிப்பு.


நாடு எப்பேர்ப்பட்ட தியாகியை இழந்து விட்டது. சிங்கி வெட்டியின் இடத் தில் அவனது மனைவியை இடைத் தேர்த லில் நிறுத்தி வைக்க முடிவு செய்தார்கள். அவன் இறந்த முச்சந்தியில் ஒரு நினைவுச் சின்னம். அதற்குத் தண்டல்!

சீதா இந்த அமர்க்களத்தில் பரீட்சை எழுதச் செல்ல முடியவில்லை. திரும்ப ஒரு தேதி தருவார்களா?

சிங்கி வெட்டி என்ற கொலைகார னுக்கு, அரசியல் வெள்ளிப்பூச்சினால், இவ் வளவு மரியாதையா? இரங்கல் கூட்டங்கள், நினைவுச் சின்னங்கள்.....? அரசு மரியாதை யுடன் கூடிய சவ அடக்கம்.

சீதா தன் அண்ணனை நினைத்தாள். அரசியல் காற்றுப் படாமல் உழைக்கும் ஊழிய இனத்தைச் சேர்ந்தவன். அஸ்பாயு சில் தீவிரவாதிகள் கையில் சாவைத் தழுவிய அவனும் ஒரு தியாகிதான்! நாட்டு அரசிய லில் பலி ஆனவன். அவனை யார் இப் போது நினைக்கிறார்கள்? அவனைத் தியாகி என்று அரசாங்கம் கூறிற்றா?

கண்ணீர்த் திரைக்கு அ ப் ப ா ல், அண்ணனின் கனிவு முகம் ஆடி ஆடித் தெரிந்தது.



லோக்கல் ஒலிம்பிக்ஸ்

அது 69-ம் வருடம்; 44-வது பீரங்கிப் படையுடன் இன்டர்கம்பெனி சாம்பியன் பட்டத்திற்கான போட்டி. நான் இருபது கி.மீ. நடக்கும் போட்டியில் கலந்து கொண்டேன். எனக்கு உதவியாக அவ்வளவு தூரமும் என் கூடவே வந்து, குளுகோஸ் பௌடர், எலுமிச்சம்பழம் கொடுத்து என்னை உற்சாகப்படுத்திக் கொண்டு வந்தான் நண்பன் நாராயணன். ஆயினும் நான் மூன்றாவது இடத்தில்தான் வெற்றி பெற்றேன். ஆனால் நாராயணனோ அவ்வளவு தூரம் நடந்து வந்தும் என்னை விட உற்சாகமாக இருந்தான்; களைப்படையவேயில்லை. இதைக் கண்ட மற்ற நண்பர்கள், 'உனக்குப் பதிலாக நாராயணன் போட்டியில் கலந்து கொண்டிருந்தால் நிச்சயம் முதலிடத்திற்கு வந்திருப்பான்!' என்று கூறிக் கிண்டல் செய்தார்கள்.



ஒரு வாரம் கழித்து, இரண்டு மைல் ஓட்டப் பந்தயம். கம்பெனியில் உள்ள அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்; அதுவும் யுத்த யூனிஃபார்முடன் துப்பாக்கியுடன் ஓட வேண்டும். அதில் பாதி தூரம் ஓடி வந்த போது எனக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்த நாராயணன் வழியில் விழுந்து கிடந்தான். நான் பதறி, அவனுக்குக் குளுகோஸ் பௌடரைக் கொடுத்துக் காரணம் கேட்டேன். சில நண்பர்களும் நின்றார்கள். அப்போது அவன், ''நீங்கள் நிற்க வேண்டாம். நின்றால் நம் கம்பெனி சாம்பியன் பட்டத்தை இழந்து விடும். என்னைப் பற்றிக் கவலைப்படாமல் ஓடுங்கள்! நான் முடிந்தால் ஓடி வருகிறேன். இல்லையெனில் ஆம்புலன்ஸில் வருகிறேன்!'' என்றான்.

நாங்களும் முதலாவதாக ஓடி, மகிழ்ச்சியுடன் நாராயணனை எதிர்பார்த்து நின்றிருந்தோம். நாராயணனும் வந்து சேர்ந்தான் ஆம்புலன்ஸில். உயிரோடு அல்ல; பிணமாக! எங்களால் கண்ணீர் விடத்தான் முடிந்தது.

பொள்ளாச்சி, பி. அண்ணாமலை.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகைப் பரிசு பெறுபவர் :

- பி. அண்ணாமலை,
சென்ட்ரல் எக்ஸைஸ்,
110, கரிகால் சோழன் தெரு,
பொள்ளாச்சி - 642 001

கடைசியில் வந்த தைரியம்!

கல்லூரி ஸ்போர்ட்ஸ் டே. 'த்ரோபால்' போட்டி. என் தோழியின் வற்புறுத்தலில் நானும் பங்குபெற வேண்டியதாயிற்று. ஆயினும் எனக்குப் பயம். எனது பயத்தைத் தெரிந்து கொண்ட எதிரணியினர் பந்தை என்னை நோக்கியே வேகமாகப் போட ஆரம்பித்தனர். ஆயினும் என் அணியினர் அவற்றையெல்லாம் முறியடித்துக் கொண்டு வந்தனர்.



போட்டியில் வெற்றி பெற ஒரேயொரு பாயின்ட்தான் எங்களுக்குத் தேவை என்கிற நிலையில் அனைவருக்கும் ஏக டென்ஷன். கடைசிப் பந்து என்னை நோக்கியே வேகமாக வீசப்பட்டது. அப்போது எங்கிருந்துதான் வந்ததோ அந்த தைரியம், அந்தப் பந்தைப் பாய்ந்து சென்று பிடித்து, எங்கள் அணியை வெற்றி பெறச் செய்து விட்டேன். அந்த மகிழ்ச்சியில் என்னை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டாடினார்கள் என் தோழிகள்!

சென்னை - 75, எஸ். சாந்தி

தோற்கச் செய்த விமானம்!

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, பள்ளிகளுக்கு இடையில் நடந்த மாநில அளவிலான ஹாக்கி போட்டியின் இறுதிச் சுற்று சென்னையில் நடந்தது. தஞ்சையைச் சேர்ந்த எங்கள் அணி, சென்னையைச் சேர்ந்த அணி ஒன்றுடன் மோதிக் கொண்டிருந்தது. இரு அணியினரும் கோல் ஏதும் போடாமல் ஆட்



டம் டிராவில் முடியும் நிலை. அப்போது பார்த்து, விமானம் ஒன்று தரையிறங்கு வதற்காக எங்கள் மைதானத்தின் மேல் தாழ்வாகப் பறந்து சென்றது. தஞ்சைக்காரர் களான நாங்கள் விமானம் அவ்வளவு தாழ் வாகப் பறப்பதைப் பார்த்தறியாதவர்கள் என்பதால், அனைவரும் விமானத்தை அண் ணாந்து பார்த்தோம். எங்கள் கோல் கீப்ப ரும் பார்க்க, அந்தச் சமயம் பார்த்து எதி ரணியினர் ஒரு கோல் போட்டு வெற்றி யடைந்து விட்டனர். அதை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான்!

கோவை - 1, சி. கோவிந்தசுவாமிநாதன்.

விளையாட்டில் வெற்றி;
காதலில் தோல்வி!

எனக்கு அப்போது பதினைந்து வயது. தெருவின் நடுவிலுள்ள மைதானத்தில் கிரிக் கெட் மாட்ச். ரேணுகா தன் வீட்டு காம்ப வுண்ட் சுவரில் உட்கார்ந்து கொண்டு வேடிக் கை பார்த்ததால் என்னுள் ஓர் உற்சாக ஊற்று. காரணம், எங்களுக் குள் ஒரு கற்றுக் குட்டிக் காதல்! எதிரணிக்கு அவள் அண்ணன் தான் கேப்டன். மூன்று விக்கெட்டு களே எஞ்சியிருக்க, இன்னும் பதி னைந்து ரன்கள் எடுத்தால் அவர்கள் வெற்றி என்கிற நிலை. அப்போது, 'ராஜா டு பௌல்!'' என்று கத்தினாள் ரேணுகா. எங்கள் அணி கேப்டனுக் கும் அவள் மீது ஒரு கண் என்பதால், அவள் வேண்டுகோள்படியே என்னை பௌல் செய்யச் சொன்னான். நான் அதிவேகமாக ஓடி வந்து, என் சக்தியையெல்லாம் திரட்டிப் பந்து வீசினேன். அடுத்தடுத்த பந்துகளில் அவள் அண்ணன் உள்பட மூவ ரும் கிளீன் போல்ட்! நான் பெருமிதத்துடன் ரேணுகாவைப் பார்த்தேன். அவள் முகத்தை விருட்டென்று திருப்பிக் கொண்டாள். மறுநாள் நான் பேச முற்பட்ட போது, ''சீ... என் கிட்டப் பேசாதே... எனக்காக நீ விட்டுக் கொடுத்து, எங்க அண்ணனை ஜெயிக்க வெப்பேன்னு பார்த்தா, இப்படி மோசம் பண்ணிட்டியே...'' என்று வெடித்தாள். எனக்குக் கிடைத்த ஹாட்ரிக்குக்கு நான் கொடுத்த விலை என் கற்றுக் குட்டிக் காதல்!



சென்னை - 12, ஆர். ராஜாராம்.

நம்பிக்கை
வென்றது!

சின்ன வயதில் ஏற்பட்ட லேசான போலியோ காரண மாகப் பள்ளி நாட்க ளில் நடக்கும் விளை யாட்டுக்களிலிருந்து நான் ஒதுங்கி நின்று தான் வேடிக்கை பார்ப்பேன். ஆயினும் எல்லா விளையாட்டுக்களையும் கற்பனை யில் விளையாடிப் பரிசுகளும் பெறுவேன்! நான் ஒன்பதாவது படிக்கும் போது கைக் குண்டு எறியும் போட்டி நடந்தது. அதில் கை களுக்குத்தானே வேலை; கால்களுக்கு இல் லையே என்பதால் தைரியமாகக் கலந்து கொண்டேன். என் முயற்சியும் வீண் போக வில்லை; முதல் பரிசு பெற்றேன். தலைமை ஆசிரியர் பேசும் போது, ''இந்தப் பையன் பள்ளியில் சேர்ந்த போது ஒழுங்காக வகுப்பு களுக்கு வருவானா என்றே சந்தேகப்பட் டேன். ஆனால் இப்போதோ படிப்பில் மட்டுமல்லாமல் விளையாட்டிலும் முதலா வதாக வந்து விட்டான்!'' என்று பாராட்டி னார். அப்போது சந்தோஷத்தில் கண்ணீர் பெருகி விட்டது!



நெய்வேலி - 3, ஆர். சேகர்.

அரையாடையுடன்
அவஸ்தைப்பட்டேன்!

எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியத் தில் நடந்த நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கல்லூரி மாணவனான நானும் கலந்து கொண்டேன். முதல் பரிசும் பெற்றேன். பரிசு வாங்குவதற்காக மேடைக்குச் செல்ல வேண்டும். அச் சமயம் அரைக்கால் நிஜா ரும், பனியனுமாகப் போக முடியுமா? அத னால், பந்தயத்தில் கலந்து கொள்வதற்கு முன்னால் பாதுகாப்புக்காக என் ஆடை களைக் கொடுத்திருந்த நண்பரைத் தேடி னேன். அவரும் வந்து சேர்ந்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக அவர் வைத்திருந்த இடத்தில் ஆடைகளைக் காணவில்லை. என்ன செய்வது? என் நண்பரை டிரஸ்ஸிங் அறைக்கு அழைத்துச் சென்று, அவரது பேண்ட், சட்டைக் கழற்றித் தரச் சொல்லி நான் அணிந்து கொண்டு போய்ப் பரிசை வாங்கி வந்தேன். பிறகு நன்றாக இருட்டும் வரை காத்திருந்து எனது அரையாடையுடன் சைக்கிளில் வீடு திரும்பினேன். இந்த ஐம் பத்து நான்கு வயதிலும் ராஜரத்தினம் ஸ்டே டியம் பக்கம் போகும் போது இந்த நினைவு வந்து சிரிப்பூட்டத் தவறுவதில்லை!

சென்னை - 106, வா. கி. தணிகாசலம்.

அட, அப்படியா!

வயிற்றுக்குள் 35 பில்லியன் ஜீர்கள்!

!! நம் உடலின் எலும்புகளில் வெள்ளியும் கால் நகங்களில் தங்கமும் இருக்கின்றன - மிகக் குறைந்த அளவுகளில். மரங்கள், பாசி, கடல் நீர் போன்றவற்றிலும் வெள்ளியை நுணுகித் தேடினால் காணலாம்.

!! நம் முழங்கைப் பகுதியில் தோல் பத்து நாட்களுக்கு ஒருமுறை புதிதாக வளர்கிறது. அதிகமாகப் பாதிக்கப்படாத கையின் உள்புறத் தோலோ நூறு நாட்களுக்கு ஒரு முறைதான் புதிதாக வளரும்.

!! அமாவாசை இரவில் ஒரு மலையுச்சியில் நிற்பவன், திறந்தவெளியில், ஐம்பது மைல்களுக்கப்பால் ஏற்றப்படும் தீக்குச்சியின் ஒளியைத் தெளிவாகப் பார்க்க முடியும். ஆரோக்கிய மனிதனுடைய கண் பார்வை அவ்வளவு கூர்மையானது!

!! முழு வளர்ச்சியடைந்த மனிதனுடைய மூளையின் சராசரி எடை மூன்று பவுண்டுகள். அந்த மூளையில் இருக்கும் நரம்பு செல்களையெல்லாம் தனித்தனியாகப் பிரித்து மாலையாகக் கோத்து விட முடியுமானால் பூமியையும் சந்திர மண்டலத்தையும் இணைக்கக்கூடிய நீளத்துக்கு ஒரு 'சங்கிலி' கிடைக்கும். இந்த எண்ணற்ற செல்கள்தான் ஒவ்வொரு வினாடியும் பத்து மில்லியன் சமிக்ஞைகளை மூளையில் பதிவு செய்கின்றன. அவற்றுள் முக்கியமான சமிக்ஞைகள் மூளையில் நிரந்தரமாகத் தங்கி விடும். மற்றவை கலைந்து (மறந்து) போகும்.

!! பத்தாயிரம் வகையான வாசனை அல்லது துர்நாற்றங்களைப் பெரும்பாலானோரால் வித்தியாசப்படுத்தி அறிய முடியும்.

!! நம் வயிற்றினுள் 35 மில்லியன் ஜீரணச் சுரப்பிகள் உள்ளன.

!! ஒரு சிறுநீரகத்தினுள் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுசிறு குழாய்கள் இருக்கின்றன. இரு சிறுநீரகங்களிலும் உள்ள குழாய்களை இணைத்தால் நாற்பது மைல் தூரத்துக்கு அவை நீளும்.

!! மனித உடலின் தோல் மட்டுமே சராசரியாக ஆறு பவுண்டு எடை இருக்கிறது.

!! கண் இமைகளின் மேலுள்ள தோலை விட உள்ளங்கால்களில் உள்ள தோல் பன்னிரண்டு மடங்கு கனமானது.

!! ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும் போதும் நம் உடலில் 72 தசைகளுக்கு வேலை கொடுக்கிறோம்.

!! மல்லாக்கப் படுத்துறங்கும் ஒரே விலங்கினம் - மனிதன்தான்.

தொகுப்பு : உதய்லால்



மரங்களை வளர்க்கும் மருத்துவர்!



☛ டாக்டர் மாதவன்



☛ சுப்பிரமணியம்

'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்று அரசு விளம்பரப்படுத்துகிறது. ஆனால், அது மட்டும் போதாது; வீதிகள்தோறும் மரம் வளர்க்க வேண்டும் என்பதை விளம்பர வாசகங்களாக அல்ல; செயலிலேயே நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள், டாக்டர் மாதவனும் ரிசர்வ் வங்கி அதிகாரியான வி. சுப்பிரமணியமும்.

இவர்கள் குடியிருக்கும் சென்னை - மந்தைவெளிப் பகுதியில் மட்டுமல்லாமல், நகரின் பல்வேறு இடங்களிலும் மரங்களை நட்டுப் பாதுகாக்கிறார்கள். சாந்தோம் ரோகிணி கார்டன்ஸ், கற்பகம் அவென்யூ, கோட்டூர்புரம் போன்ற பகுதிகளிலிருக்கும் கான்கிரீட் காடுகளுக்கு மத்தியில், இவர்களின் முயற்சியால் மரங்கள் நடப்பட்டுப் பசுமைக் காடுகளும் வளர ஆரம்பித்திருப்பது பற்றி அப் பகுதி மக்கள் மிகவும் பெருமையுடன் பேசுகிறார்கள்.

ஆனால் ஆரம்பத்தில் இவர்களது முயற்சிக்கு அரசுத் தரப்பிலிருந்து கூட அவ்வளவு ஊக்கம் கிடைக்கவில்லையாம்! ''வீதிகளில் மரங்களை நடும்படி மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டுப் பார்த்தோம். ஒன்றும் நடக்கவில்லை. அதனால்தான் நாங்களே மரங்களை நட ஆரம்பித்தோம்'' என்கிறார் டாக்டர் மாதவன்.

''ஆரம்பத்தில் நாங்கள் மரக் கன்றுகளை நடத் தொடங்கிய போது, அவற்றைச் சுற்றிலும் பக்காவாக வேலியமைத்துக் காப்பாற்றுகிற அளவுக்கு எங்களிடம் நிதி வசதியில்லை. பிறகு எங்களது பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த வசதி படைத்தவர்கள், நன்கொடை தர முன்வந்தார்கள். அதன் பயனாக 'மந்தைவெளி சுற்றுச் சூழல் கழகம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்து, மரங்களின் முக்கியத்துவத்தை மக்கள் உணருமாறு செய்து, அவர்களை மரம் வளர்க்கவும் தூண்டுகிறோம். மரக் கன்றுகளை இலவசமாகவும் தருகிறோம்.

''வீதிகளில் இருக்கும் டீக் கடைகள் அருகில் மரக் கன்றுகளை நட்டு வளர்த்தோம். அவை வளர்ந்து நிழல் தருவதைக் கண்டு, அவர்களுக்கு ஏக மகிழ்ச்சி. இது போன்ற மர நிழல்கள் பூ விற்பவர்கள், செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் உதவிகரமாக இருப்பதால், இப்போது அவர்களெல்லாம் மரங்களை வளர்க்கத் தேவையான பராமரிப்பையும் உதவியையும் மனமுவந்து தர ஆரம்பித்திருக்கிறார்கள்!'' என்கிறார் டாக்டர் மாதவன்.

ஆழ்வார்ப்பேட்டை, வீனஸ் காலனி, பெஸன்ட் நகர் பகுதிகளில் 'எக்ஸ்னோரா' அமைப்பினர் மரக் கன்றுகளை நட்ட போது அவர்களுக்கு இலவசமாக மரக் கன்றுகளைத் தந்து உதவியிருக்கிறார்கள் இவர்கள். இப்போதும் 837060 என்ற தொலைபேசி எண்ணில் இவர்களைத் தொடர்பு கொண்டால் இலவசமாகத் தரத் தயாராய் இருக்கிறார்கள்.

''பிறந்த நாள், திருமண நாள் பரிசுகளாக மரக் கன்றுகளை வாங்கிப் பரிசளிக்கும் பழக்கம் இன்னும் வலுப்பட வேண்டும். அப்போதுதான் வீட்டுக்கு ஒரு மரம் என்கிற கனவு பூர்த்தியாகும். நகரமும் பசுமையில் ஜொலிஜொலிக்கும்!'' என்கிறார் சுப்பிரமணியம்.

''மருத்துவத் தொழிலில் கிடைக்கும் ஆத்ம திருப்தியை விட மரம் நடுவதில் கிடைக்கும் ஆத்ம திருப்தி அதிகம்!'' என்கிறார் டாக்டர் மாதவன். ''காரணம், மருத்துவத் தொழில் என்பது நோய்கள் வந்த பிறகு குணப்படுத்துவது; மரம் நடுவதென்பதோ, இயற்கை வளத்தைப் பெருக்குவதன் மூலம் பல நோய்களை வராமலே தடுப்பதல்லவா!'' என்கிறார் அவர்.

– பானுமதி ராமச்சந்திரன்



கோர்பசேவ் சினிமாவில் நடிக்கிறாராமே?



☛ சினிமாவில் நடிக்கிறார்!

● ஆர். சுப்பராவ், தக்கோலம்.

? 'போஃபர்ஸ் ஊழல் பற்றி சோலங்கியிடம் கடிதம் கொடுத்த வெளிநாட்டு வழக்கறிஞர் யார் என்று தெரியவில்லை'' என்று கூறுகிறாரே பிரதமர்? பொய் கண்டு பிடிக்கும் கருவியைப் பயன்படுத்தக் கூடாதா?

! அரசியல்வாதிகளிடம் அந்தக் கருவியின் ஜம்பம் சாயாது!

● எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

? 'திராவிட இயக்கத்தின் உண்மையான வாரிசு ஜெயலலிதாதான்' என்று கூறும் வாழப்பாடியார் பற்றி?

! இதென்ன பிரமாதம்! பெரியாருக்கே 'ஜெ'தான் வழிகாட்டினார் என்று அவர் சொன்னால் கூட வியப்பதற்கில்லையே!

● குரும்பல் பாலமணி, பெங்களூர்.

? சட்டமன்ற உறுப்பினர்கள் வோட்டுப் போடும் ராஜ்ய சபா தேர்தலிலேயே பீகாரில் இல்லுமுல்லு நடந்தது பற்றி?

! அங்கு நடப்பது இல்லுமுல்லு பிரசாத் ஆட்சி என்பதற்கு மற்றொரு உதாரணம்.

● கபில வேங்கடேசன், சென்னை.

? லாஸ் ஏஞ்சல்ஸ், சியோல் இரண்டிலிருந்தும் கைவீசிக் கொண்டு திரும்பியிருக்கிறோம், நினைவிருக்கா?

! பார்ஸிலோனாவிலிருந்து மட்டும் அள்ளிக் கொண்டு வந்து விடப் போகிறோமாக்கும், ஹூம்!

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை.

? மதுரை அ. தி. மு. க. மகாநாட்டுக்கு வந்த ஆர். எம். வீ.க்கு, எஸ். டி. எஸ்ஸின் சில நிமிட உரையாடல் தவிர வேறு யாரும் கண்டுகொண்டதாகவே தெரியவில்லையே, பாவமாக இல்லையா?

! சரிதான்; அவரைக் கண்டு கொள்ளப் போக, அப்புறம் அவருக்கு நேர்ந்த கதி அவர்களுக்கும் நேர்ந்தால் அவர்களைக் குறித்தும் 'பாவமாக இல்லையா' என்ற கேள்வியைத்தானே எழுப்புவீர்கள்! அதனால்தான்!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? இலட்சக்கணக்கில் செலவு செய்து கட்சிகள் மாநாடு நடத்தும் பழக்கம் வெளிநாடுகளில் உள்ளதா?

! உண்டு என்பதே வருந்தத்தக்க விஷயம். அதனால்தான் நல்ல உதாரணங்களை நாம் பின்பற்ற வேண்டும்; மோசமான முன்னுதாரணங்களை அல்ல என்பது.

● முருகேசன், தேனி.

? 'பங்கு மார்க்கெட் மோசடியில் எந்த அமைச்சருக்காவது தொடர்பு இருந்தால் டிஸ்மிஸ் செய்யப்படுவார்' என்று பிரதமர் கூறியிருக்கிறாரே?

! சிதம்பரத்தின் ராஜினாமாவை ஏற்று, தமது சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமில்லை என்று நிரூபித்திருக்கிறார். ராஜினாமா செய்த நேர்மைத் துணிவுக்காகப் ப.சி.யைப் பாராட்டலாம் என்றாலும் பொது நோக்கில், தாம் பங்குதாரராயிருக்கும் ஒரு நிறுவனம் லாபம் பெறும்படி செய்வது ஓர் அமைச்சருக்கு மிக எளிது என்பதையும் மறப்பதற்கில்லை. எனவே, மத்திய அமைச்சரான பிறகு, அதிலும் வர்த்தக அமைச்சரான பின், பரம்பரைப் பணக்காரர் ப. சி., பங்கு மார்க்கெட் பட்டியலில் கூட இடம் பெறாத (unlisted) ஒரு நிறுவனத்தில் போய் (ஃபேர்குரோத்) தமது உபரி பணத்தை முதலீடு செய்திருக்க அவசியமில்லை. இந்த ஜனநாயக, தார்மீக நெறிகளுக்குப் புறம்பான நடவடிக்கைதான் சந்தேகங்களை எழுப்புகிறது. அந்த நிறுவனம் இல்லுமுல்லு செய்யப் போக, ப. சி. அனுபவிக்கிறார்!

நீங்கள் கேட்டவை - தராசு















● எம். ரேவதி,
மன்னார்குடி.

? தமிழக அரசியல் வானில் துருவ நட்சத்திரம் யார்?

! தமிழகத்துக்கு மட்டுமல்ல பாரத தேசத்துக்கே அரசியல் துருவ நட்சத்திரம் ராஜாஜிதான். எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகளை, நாட்டின் துரிதமான வளர்ச்சிக்கான யோசனைகளை அவர் எழுத்தில் இன்றும் என்றும் காணலாம். ஆனால் துடுப்புப் போடக் கூடத் தெரியாதவர்களை மாலுமிகளாகக் கப்பலில் நாம் ஏற்றி இருக்கும் போது, துருவ நட்சத்திரத்தால் என்ன பயன்!

● மு. இரவிச்சந்திரன்,
சேலம்.

? கோர்பசேவ் சினிமாவில் நடிக்கிறாராமே?

! போச்சுடா, அங்கேயும் ஒரு ஹெக்டேயா!

● கு. கணேசன்,
காட்டாங்குளத்தூர்.

? ஜனாதிபதி தேர்தலில் சர்மாதான் வெற்றி பெறுவார் என்பது தெரிந்தும் எதிர்க்கட்சிகள் வேட்பாளரை நிறுத்துவது ஏன்?

! 'இதுதான்டா ஜனநாயகம்' என்று மக்களுக்கு உணர்த்தத்தான்.

● மாரி வெற்றிவேல்,
பட்டுக்கோட்டை.

? அரசியலை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து எறியும் சோ, இந்தியாவின் ஜனாதிபதியானால் எப்படி இருக்கும்?

! கைகட்டி, வாய் பொத்தி, மௌனியாக வேண்டியதுதான். அது அவருக்கு லாயக்குப் படாது.

● அ. ப. ஜெ. சுவாமிநாதன்,
பொன்னந்திட்டு.

? சென்னை உயர் நீதிமன்றத்துக்குத் தலைமை நீதிபதியாக ஒரு பெண் நியமிக்கப்பட்டிருக்கிறாரே?

! அறிவாளியாகத் தெரிகிறார்; அடக்கமாக இருக்கிறார்; அளவாகப் பேசுகிறார்; ஒதுங்கி இருக்கிறார். சீக்கிரமே ரிடையர் ஆகப் போவதாகவும், ஒரு வசதிக்காக இங்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் பேச்சு.

● மதுர கீதா, கும்பகோணம். ❒

? வருங்காலத்தில் காங்கிரஸ் தமிழகத்தை ஆளும் வாய்ப்பு ஏற்பட சாத்தியக் கூறுகள் உண்டா?

! எங்கே? ஜனாதிபதி தேர்தலில் எப்படி வோட்டுப் போட வேண்டும் என்று சொல்ல தில்லியிலிருந்து அனுப்பப்பட்டு வந்தவரை, இரு கோஷ்டியினரும் இரு இடங்களில், இரு நேரங்களில் சந்தித்திருக்கின்றனர். இதில் கூட ஒற்றுமை காண முடியாத போது... முதுகுச் சவாரி தவிர இவர்களுக்கு வேறு கதியே இல்லை என்றுதான் தோன்றுகிறது.

● தி. இராஜ்குமார், கோமல்.

? மந்திரி அமைச்சரவை விஸ்தரிப்பு பற்றி...?

! மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதைதான். பிரதமர் இதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பார்த்தால் என்னவோ பிரமாத மாற்றங்கள் வரப் போகிறது என்று எண்ணினோம்... புஸ்ஸ்...வாணமாகி விட்டது. ஒரு வகையில் நல்லதுதான். அமைச்சர்கள், 'நிலைத்திருப்போம்' என்று தன்னம்பிக்கையோடு செயல்படலாம். அதே சமயம் நல்ல 'ரிஸல்ட்' எதிர்பார்ப்பதையும் பிரதமர் உணர்த்தலாம்.

● என். ஆர். சுப்பிரமணியம்,
பூனாம்பாளையம்.

? 'அ. தி. மு. க. வெற்றிக்கு ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமல்ல' என்று ஜெ. கூறியுள்ளாரே?

! 'வாழப்பாடிக்கு முதுகெலும்பு இருக்கிறதா, சுழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டி வைத்திருக்கிறாரா' என்று சோதித்திருக்கிறார்.

❒ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. மதுரகீதா,
60, சாரங்கபாணி சன்னதி தெரு,
கும்பகோணம் - 1

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, 1942 ஜூலை 16

எகிப்தில் அதி அற்புதம்!



"அற்புதம் நிகழும் காலம் இன்னும் முடிந்து விடவில்லை" என்று அடிக்கடி நாம் கேட்டிருக்கிறோம். இந்த வார்த்தைகளை நிரூபிப்பதற்காகவே, இன்று ஒரு 'அதி அற்புதம்' எகிப்தில் நிகழ்ந்து வருகிறது. உலகத்தின் கவனத்தையெல்லாம் கவரும் மாபெரும் யுத்தம் எகிப்தில் இப்பொழுது நடக்கிறது. ஆனால் சண்டை போடுவது யார்? ஒரு பக்கத்தில் ஜெர்மன் - இதாலியப் படைகளும் மற்றொரு பக்கம் பிரிட்டிஷ் படைகளும்தான். எகிப்தியப் படைகள் சண்டை நடக்கும் இடத்துப் பக்கம் நாடவேயில்லை! எகிப்து பூமியிலேயே சண்டை நிகழ்ந்து வருகிறது. எகிப்து அரசர் பரூக் நடுநிலைமை வகிக்கிறார். அச்சு நாடுகள் மீது எகிப்து போர் தொடுக்கவில்லை; ஆனால் பிரிட்டிஷ் ராணுவம் எகிப்தில் இருக்கிறது என்பதற்காக, ஸிவில் அரசாங்கத்தையும் பிரிட்டிஷ் சர்க்காரிடமே ஒப்புவித்து விட்டு சந்நியாசம் வாங்கிக் கொள்கிறோமென்று சொல்லவுமில்லை. அரசர் பரூக் படத்தில் குதிரை லகானைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் போல, அவருடைய மந்திரிகள் எகிப்தின் ஸிவில் அரசாட்சியை விடாமல் பிடித்துக் கொண்டு அழுத்தமாய் உட்கார்ந்திருக்கிறார்கள்!

- அட்டைப்பட விளக்கம்

விசேஷச் செய்தி

தமிழர்களின் சொந்தப் பத்திரிகை வரும் ஆகஸ்டு 1உ இரண்டாவது பிராயத்தை அடைகின்றது. "கல்கி" ஆரம்பமான இரண்டாம் மாதத்திலேயே "எப்போது வாரப் பத்திரிகையாக்கப் போகிறீர்கள்?" என்று நேயர்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள். "வாரப் பத்திரிகையாக்க முடியாவிட்டால் மாதம் மூன்று தடவையாவது கொண்டு வாருங்கள்" என்று கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன.

நேயர்களின் விருப்பத்தை அநுசரித்து வரும் ஆகஸ்டு மாதத்திலிருந்து "கல்கி" சஞ்சிகை மாதம் மூன்று முறை அதாவது 1உ 10உ 20உகளில் வெளியாகின்றது. வார சஞ்சிகை ஆவதற்கு முன்னால் இது ஒரு இடைநிலைதான் என்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் மக்களின் அன்பினாலும் தமிழ்க் கடவுளாகிய முருகனின் அருளினாலும் கூடிய சீக்கிரத்தில் "கல்கி" வார சஞ்சிகை ஆகுமென்று நேயர்கள் எதிர்பார்க்கலாம்.

- என்ன சேதி

காரியக் கமிட்டியும் தமிழ் நாடும்

அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜாஜி ராஜினாமா செய்து இரண்டு மாதத்துக்கு மேலாகிறது. அவருடைய ஸ்தானத்தில் வேறொரு தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் நியமிக்கப்படுவார் என்று இத்தனை நாளும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அத்தகைய செய்தி கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக ஸ்ரீ ஜயராம்தாஸ் தௌலத்ராமையும், ஆசாரிய நரேந்திர தேவையும் நியமித்து விட்டதாக வர்தாச் செய்தி கூறுகிறது. ராஜாஜியின் ஸ்தானத்துக்கு ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தியோ, ஸ்ரீ ஸி. முத்துரங்க முதலியாரோ, ஸ்ரீ காமராஜ் நாடாரோ ஏன் நியமிக்கப்படவில்லை? இவர்களில் ஒருவரும் அப்பதவிக்கு லாயக்கற்றவர்கள் என்று வட நாட்டுத் தலைவர்கள் நினைக்கிறார்களா அல்லது தமிழ்நாடே லாயக்கற்றது என்று கருதுகிறார்களா? இந்த மர்மத்தை யாராவது விசாரித்து வெளியாக்குவார்களென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

- என்ன சேதி

தியாக சிகரம்

சென்ற இருபத்தைந்து வருஷமாக ராஜாஜியின் வாழ்க்கை தியாக வாழ்க்கையாயிருந்து வந்திருக்கிறது. 1920 - ம் ஆண்டில் அவர் காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான வருமானம் தந்து வந்த வக்கீல் தொழிலை விட்டார். அன்று முதல் தேசத் தொண்டுக்காகத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். 1921 - ம் ஆண்டில் தமிழ் நாட்டில் முதன் முதலாகச் சட்டத்தை மீறிச் சிறை புகுந்தார். அது முதல், ஆறு தடவை சிறைவாசம் செய்திருக்கிறார். 1923 - ம் ஆண்டில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தை ஸ்தாபித்தார். சுமார் பத்து வருஷகாலம் அங்கே ஒரு சிறு குடிசையில் வாழ்க்கை நடத்தி வந்தார். தமிழ் நாட்டு முன்னோர்களின் புண்ணியமும்



தவமும் உருவெடுத்தது போல் ராஜாஜியின் வாழ்க்கை இருந்து வந்திருக்கிறது. அந்தப் புனிதமான தியாக வாழ்க்கையின் சிகரத்தை இப்போது அவர் அடைந்திருக்கிறார்.

உண்மை என்னவென்றால், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள் சிலருடைய மனத்தில் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவி ரொம்பவும் பெரிதாகத் தோன்றிக் கொண்டிருந்தது. ஏனெனில், மாகாண மந்திரிசபை ஏற்பட்டால் மேற்படி பதவியிலுள்ளவர் பிரதம மந்திரியாக மந்திரி சபை அமைத்தல் கூடும். ஆகையினால்தான், மந்திரி வேலையை நினைத்து நாக்கில் ஜலம் சொட்டிக் கொண்டிருந்த காங்கிரஸ் நிர்வாகிகள் சிலர் மேற்படி கட்சித் தலைமையை அவ்வளவு பெரிதாய் நினைத்து, ''ராஜாஜி ராஜினாமாச் செய்ய வேண்டும்!'' என்று ஓயாமல் அலறிக் கொண்டிருந்தார்கள்.

ராஜாஜி சட்டசபைக் கட்சித் தலைமையை விட்டொழிப்பார் என்று நாம் எதிர்பார்த்ததுதான். ஆனால், அவர் காங்கிரஸிலிருந்து நாலணா அங்கத்தினர் பதவியைக் கூட ராஜினாமா செய்துவிட்டு விடுதலை பெறுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

ராஜாஜியின் வாழ்க்கையில் தியாக சிகரமாயிருக்கும் இந்த ராஜினாமாவின் பலாபலன்கள் இன்னதென்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

''மூன்று வருஷம் சேர்ந்தாற்போல் காங்கிரஸ் அங்கத்தினராயிருந்தால்தான், காங்கிரஸில் எந்தவிதமான நிர்வாகப் பதவியும் வகிக்கலாம்'' என்று ஒரு காங்கிரஸ் விதியிருக்கிறது.

ஆகவே, இன்று ராஜாஜி காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்தாரென்றால், குறைந்தது இன்னும் மூன்று வருஷத்துக்கு எந்தக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலும் அவர் இருக்க முடியாது. மாகாண காங்கிரஸ் கமிட்டி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, அகில இந்தியக் காரியக் கமிட்டி - எதிலும் அவர் அங்கத்தினராயிருக்க முடியாது.

தமிழ் நாட்டுத் தலைவர் காங்கிரஸ் மகாசபையின் அக்கிராசன பதவியை வகிக்க வேண்டும் என்னும் ஆசையைத் தமிழ் மக்கள் அடியோடு கைவிட வேண்டியது தான்.

இன்னும், காங்கிரஸின் சார்பாக ராஜாஜி எந்தத் தேர்தலுக்கும் நிற்க முடியாது; எந்தப் பொறுப்புள்ள பதவியையும் வகிக்க முடியாது.

ராஜாஜியைப் ''பதவி மோகங் கொண்டவர்'' என்று சொன்ன புண்ணியவான்களுக்கு அவர் இந்த விதத்தில் பதில் அளித்திருக்கிறார்.

இந்தத் தியாகத்தினால் ராஜாஜியின் மேன்மை முன் எப்போதைக் காட்டிலும் துல்லியமாகத் துலங்குகிறது. அவருடைய மாசு மறுவற்ற தேசத் தொண்டு இன்னும் மெருகு பெற்று விளங்குகிறது. தமிழ்நாடே இன்று அவருடைய தியாகப் பெருமையினால் பூரித்திருக்கிறது.

- தலையங்கத்தின் சில பகுதிகள்

உணவு சாஸ்திரம்

யந்திரத்திற்குக் கரி போடுவது போல் மனித யாக்கைக்கு உணவு போட வேண்டும். கரி எரிந்து உண்டான உஷ்ணத்தைக் கொண்டு யந்திரம் வேலை செய்வது போல் மனித யாக்கையில் உணவு எரிந்து உண்டாகும் சக்தியின் பயனாக உடலின் வேலை நடைபெறுகிறது.

தொழில் செய்து வாழும் ஒரு மனிதன் நாளொன்றுக்குச் சுமார் 3000 கலரிகளாவது கொண்ட உணவு உட்கொள்ள வேண்டும். நீளத்தை அளப்பதற்கு அங்குலம், அடி போல் வெப்பத்தை இத்தனை ''கலரி''கள் என்று அளந்து கொள்ளுவது முறை. ஒரு கலரி சுமார் நான்கு சேக்கரண்டி தண்ணீரைக் கொதிக்கச் செய்யும் உஷ்ணமாகும். ஒரு ராத்தல் சர்க்கரையில் 1600 கலரி உஷ்ண சக்தி அடங்கியிருக்கிறது.

- சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

என்ன டிபன்?

''டேய் ராமு! இன்றைக்கு உங்காத்திலே என்ன டிபன்?'' என்று கேட்டேன்.

ராமு ஒரு நிமிஷம் புன்னகை செய்தான். பிறகு, ''டிபனா? இன்னிக்கி ஜி லே பி, மைசூர்ப் பாகு, குலாப் ஜான், பாதுஷா, கோதுமை ஹல்வா, பஜ்ஜி, வடை, போண்டா, காராபூந்தி, மிக்சர், தோசை, பூரி உருளைக் கிழங்கு'' என்று ஒரு வாறு சொல்லி முடித்தான்.



நான் சட்டென்று, ''உங்கப்பாவுக்கு என்ன வேலை?'' என்று வினவினேன்.

''ஹோட்டல் ப்ரோப்ரைட்டர்!'' என்றான் ராமு.

- ரா. ஸ்ரீனிவாசன்.
- காலக்ஷேபம் பகுதியில்

வட்டமேஜை

◆ 'சந்தான சந்தானம்'' தலைவாங்கத்தைப் படித்த போது கண்களில் நீர் வந்து விட்டது. நாதஇனிமையான குரல் வளத்தால் எண்ணற்ற ரசிகர்களைத் தம் பக்கம் கவர்ந்திழுத்த சந்தானத்தின் இசை சாகாவரம் பெற்றது.
விருதுநகர் - 1, ஜி. ஜி. கிருஷ்ணன்.

◆ இசை மேதை சந்தானம் இறந்த பொழுது கண்ணீர் விட்டதை விட தங்களது தலைவாங்கம் அதிகமாகக் கண்ணீரை வரவழைத்து விட்டது. மேலும் ஆயிரக்கணக்கான அவரது ரசிகர்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது தலைவாங்கம்.
இராமநாதபுரம் - 1,
க. இராஜரத்தினம்.

◆ சங்கீதத்தில் ஒரு ராஜபாட்டையைப் போட்டுக் கொண்ட வாணிஜெயராம், ஓவியக் கலையிலும் ஒளி விடுபவர் எனத் தெரிந்து வியந்து போனேன்!
சேலம் - 9, மு. இராமச்சந்திரன்.

◆ வாணி ஜெயராம், கவிதா சௌத்ரி, சித்ரா... பெருமைக்குரிய இப் பெண்களைப் பற்றிய கட்டுரைகள் கருத்தைக் கவர்ந்து, மனத்தை நிறைத்தன: ''எல்லாப் பிரச்னைகளுக்கும் அடிப்படை, நம்மிடையே அன்பு, பாசம், நேசம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வருவதுதான்!'' என்ற கவிதா சௌத்ரியின் கருத்து, அவருடைய சிந்தனைத் தெளிவைப் புலப்படுத்தியது.
காட்டூர், எஸ். அருள்மொழி.

◆ திருட்டு, கொலை கேஸ்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பாலிகிராப் (பொய்யைக் கண்டுபிடிக்கும் கருவி) சாதனத்தை அரசியல்வாதிகள் மேடையில் பேசும் போதும் பத்திரிகைகளுக்குப் பேட்டிகள் தரும் போதும் பயன்படுத்தினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!
லால்குடி, எம். இராஜேந்திரன்.

◆ தவறு செய்வதைத் தட்டிக் கேட்டால் 'நீ செய்யவில்லையா?' எனக் கேட்கும் முதல்வருக்கு, ஜில்லு ஜானு பகுதி சரியான பதில்.
பவித்திரமாணிக்கம்,
சா. தென்றல் இளங்கோ.

◆ வயதான பெற்றோர்கள் என்றாலே ஒதுக்கி வைக்கும் இக் காலத்தில், அப்பாவை தெய்வமாக மதிக்கும் அண்ணியின் பாத்திரத்தைப் படைத்த வாசனுக்குப் பாராட்டுக்கள்.
கோயமுத்தூர் - 10,
பாக்கியலட்சுமி சுகவனம்.

பெற்றோரின் மனமாற்றம்; பெண்களின் விமோசனம்!

◆ 'கவிதா சௌத்ரி'யின் பேட்டி மிகவும் கருத்தாழம் மிக்கது. பிள்ளையை மட்டுமே தங்கள் வாரிசுகளாகவும், பெண்களைப் பிறர் வீட்டுச் சொத்தாகவுமே நினைக்கும் பெற்றோர் அனைவருடைய மனநிலையும் மாறினால்தான் பெண்களுக்கு விமோசனம்.
அரியநாயகிபுரம்,
ஏ. ஜஹ்பர் காதர்.

◆ 'அம்மா கோட்டைக்குப் போறாங்க!' சிரிப்பே அல்ல; இப்போதைய நாட்டு நடப்பு!
மங்கைநல்லூர்,
ஆர். செல்வராணி.

◆ அடுத்த ஜனாதிபதி சர்மா பற்றிய கட்டுரை அருமையான அலசல். ராஜ்ய சபாவின் தலைவராக சர்மா இருந்த போது, ரகளை செய்த ப. சிதம்பரத்தின் செயல் கண்டு கண்ணீர் வடித்ததோடு, ''என் அனுபவ அளவு கூட உன் வயது இல்லை,'' எனக் கண்டித்து, அப்போதைய பிரதமர் ராஜீவையே மன்னிப்புக் கோரச் செய்த எஸ். டி. சர்மா அடுத்த ஜனாதிபதி ஆவதில் அனைவரும் பெருமைப்படலாம்.
கோவை, கே. ஆர். விஜயா.

◆ அக்கவுண்ட்ஸ் படித்துவிட்டு விவசாயம் செய்து லாபமடையும் கிரீஷ் வித்தியாசமானவர்தான். இன்றைய இளைஞர்களுக்கு அவர் முன்னுதாரணமானவர். பாராட்டுக்கள்.
தூத்துக்குடி - 2,
எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ 'இதோ ஒரு வேலை' சிறுகதை இன்றைய இளைஞர்களுக்கு நல்ல பாடமாக அமையும்படி இருந்தது.
கொள்ளிடம், எஸ். செந்தில்.

◆ சித்ராவைப் போல் தன்னம்பிக்கையும், துணிவும் கொண்ட பெண்கள்தான் நம் நாட்டுக்குத் தேவை. அவர்களால்தான் பாரதி கண்ட கனவை நனவாக்க முடியும். வரதட்சணைக் கொடுமைகளை ஒழிக்க முடியும். சபாஷ் சித்ரா!
கடையல் கவியல்,
அன்பின் செபா.

◆ புதுவை சந்திரஹரியின் ''பெரிய மனிதர்களும் காக்கிச் சட்டைகளும்'' சிறுகதை, இன்றைய சமுதாயத்தின் வெறுக்கத்தக்க சீரழிவை நன்கு படம் பிடித்துக் காட்டியது.
சின்னமனூர், மலர்மதி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

Naga

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka